ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை

அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானங்கள்

[ஸுதர்சனம் ஆசிரியரின் எளியநடை விவரணத்துடன் கூடியது]

[மூன்றாம் பதிப்பு]

---

கிடைக்குமிடம்:

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்

ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

5, புத்தூர், அக்ரஹாரம், திருச்சி-620 017.

---

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்படுகிறது.

டிரஸ்டிகள்:

S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., B.L., அட்வகேட்

S. ரா... B.Sc., B.L., அட்வகேட்.

---

விலை ரூ [தபால் கூலி தனி

SS 02 58 1

---

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

2591

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



## மயர்வறமதிநலமருளப்பெற்ற
## தொண்டரடிப்பொடியாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

# திருப்பள்ளியெழுச்சி

### தனியன்

திருமாலையாண்டான் அருளிச்செய்தது

தமேவ மத்வா பரவாஸுதே3வம்
ரங்கே3ஶயம் ராஜவத3ர்ஹணீயம் |
ப்ராபோ3தி4கீம் யோऽக்ருத ஸூக்திமாலாம்
ப4க்தாங்க்4ரிரேணும் ப4க3வந்தமீடே3 ||

வ.எண்: 2591
நாள்: 27.10.09

பதவுரை :— ய:—யாவரொரு ஆழ்வார், ராஜவத் — அரசனைப்போல், அர்ஹணீயம் — பூஜிக்கத்தக்கவராய், ரங்கே3ஶயம் - திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்பவரான பெரியபெருமாளை, தம் பரவாஸுதே3வம் ஏவ- அப்படிப்பட்ட ஸாக்ஷாத் பரவாஸுதே3வனாகவே, மத்வா—ப்ரதிபத்தி பண்ணி (எண்ணி), ப்ராபோ3தி4கீம் — திருப்பள்ளியுணர்த்துமதான, ஸூக்திமாலாம் — பாமாலையை, அக்ருத — அருளிச்செய்தாரோ, (தம்—அப்படிப்பட்ட) ப4க3வந்தம் — ஞானம் முதலிய குணங்கள் அமைந்த, ப4க்தாங்க்4ரிரேணும் — தொண்டரடிப்பொடியாழ்வாரை, ஈடே3—துதிக்கின்றேன்.

# பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த
# தனியன் வ்யாக்யானம்

**அவதாரிகை:—** (தமேவ மத்வேத்யாதி₃) இஸ்லோகத்தில் * செய்யும் பசுந்துளவத் தொழில்மாலையை எப்போதும் செய்து போருவாராய், விசேஷித்துச் * செந்தமிழில் பெய்யும் மறைத்தமிழ்மாலையும் பேராத சீரரங்கத்தையன் கழற் கணியுமவரான தொண்டரடிப்பொடியாழ்வாரை ஸ்துத்யபி₄வாத₃நம் பண்ணும்படி சொல்லுகிறது. ''திருமாலை'' என்கிற தி₃வ்யப்ரப₃ந்த₄மன்றிக்கே திருப்பள்ளியெழுச்சியையும், (ப்ராபே₃ாதி₄கீம் யோக்ருத ஸூக்திமாலாம்) என்று சொலமாலையாகவிறே சொல்லுவது. இதுதான் திருப்பள்ளி யெழுச்சித் தனியனுயாய்த்திருப்பது.

---

## திருப்பள்ளியெழுச்சி - தனியன் வ்யாக்யாந விவரணம்

**[ 'ஸுதர்சனர்' ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி ]**

## முதல் தனியன் விவரணம்

**அவ:—** திருப்பள்ளியெழுச்சிக்குரிய இந்த முதல் தனியன் எம்பெருமானுருக்குத் திருவாய்மொழியின் அர்த்தஂம் ஸாதித்த திருமாலையாண்டான் அருளிச்செய்தது. வடமொழியில் ஸ்லோக ரூபமாக அமைந்த இதில்,

> **''செய்யும் பசுந்துளபத் தொழில் மாலையும்–செந்தமிழில்**
> **பெய்யும் மறைத் தமிழ் மாலையும் – பேராத சீரரங்கத்து**
> **ஐயன் கழற்கணியும் பரன்''** [இராமாநுச-13]

என்று அமுதனார் அருளிச்செய்தபடியே, பெரிய பெருமாளுக்குத் துளவமாலை கட்டுவதையே தொண்டாகக் கொண்டவராய், வேதார்த்தங்களைத் தன்னுட் கொண்ட திருமாலை திருப்பள்ளியெழுச்சி என்கிற இரண்டு சொல் மாலைகளையும் அரங்கத்தம்மான் திருவடிகளிலே சாத்துகின்றவரான தொண்டரடிப்பொடியாழ்வாரைத் துதித்து வணங்குகிறார். 'திருமாலை' என்னும் திருநாமமே அது ஒரு பாமாலை என்று காட்டுகிறது. 'ஸூக்திமாலாம்' என்று இத்தனியனில் திருப்பள்ளியெழுச்சியையும் ஒரு சொல் மாலையாகக் காட்டுகிறார். இப்படிப் பெரியாழ்வாரையும் ஆண்டாளையும் போலே பாமாலை, பூமாலை ஆகிய இரண்டும் பெரியபெருமாளுடைய திருவடிகளில் ஸமர்ப்பித்ததைக் கூறுகிறது இத்திருப்பள்ளியெழுச்சி.

வ்யா: — (ராஜவதர்ஹணீயம் - ரங்கேஶயம்-பரவாஸுதேவம் - மத்வா) அதாவது-ராஜவத் பூஜ்யராய், ரங்கராஜதாநியிலே கண்வளர்ந்தருளுமவரான ஸ்ரீரங்கராஜரை ஶ்ருதிப்ரஸித்தரான பரவாஸுதேவராகவே ப்ரதிபத்தி பண்ணி என்றபடி. ராஜவதர்ஹணீயராகையாவது — ராஜவத் பூஜ்யரென்றபடி; ராஜாதிராஜரான சக்ரவர்த்தித் திருமகனாலும் ஆராதநீயராயிருக்கை. (ரங்கேஶயம்) அதாவது- "செருவிலேயரக்கர்கோனைச்செற்ற நம்சேவகனார் மருவிய பெரியகோயில்" என்றும், * 1 "पुनरपि पुरस्कर्तुं श्रीरङ्गिणः फणिपुङ्गवे" (புநரபி புரஸ்கர்த்தும் ஸ்ரீரங்கிண: பணிபுங்கவே)

---

வ்யா:— (ராஜவதர்ஹணீயம் — ரங்கேஶயம் — பரவாஸுதேவம்—மத்வா) அதாவது — 'ராஜாக்களைப்போலவே உபசரிக்கத்தக்கவராய், ரங்க ராஜதானியிலே கண்வளர்ந்தருள்கிறவரான ஸ்ரீரங்கராஜரை வேதாந்தங்களிலேப்ரஸித்தி பெற்ற ஸர்வலோக ராஜரான பரவாஸுதேவராகவே எண்ணி' என்று கருத்து. "ராஜவதர்ஹணீயம்" என்றது ராஜாக்களைப்போலே பூஜிக்கத்தக்கவர் என்று பொருள்படும்; அரசர்க்கெல்லாம் அரசரான சக்ரவர்த்தித் திருமகனாலே ஆராதிக்கப்பட்டவராயிருக்கையாலே பெரிய பெருமாளும் அரசர்க்கெல்லாம் அரசர் என்பது சொல்லாமலே விளங்கும். (ரங்கேஶயம்) அதாவது — "செருவிலே அரக்கர் கோனைச் செற்ற நம் சேவகனார் மருவிய பெரிய கோயில்" [திருமாலை-11] என்றும்,

* 1 ப்ரதிஜலதிதோ வேலாஶய்யாம் விபீஷணகௌதுகாத்
புநரபி புரஸ்கர்த்தும் ஸ்ரீரங்கிண: பணிபுங்கவே |
ஸமுபததத: கஞ்சித் கஞ்சித் ப்ரஸாரயதோ புஜ-
த்வயமபி ஸதா தாநஶ்ரத்ததாலு
தீர்க்கமுபாஸ்மஹே || [ர-ஸ்த 1-106]

[கடலுக்கு எதிர்முகமாகக் கடற்கரையில் பள்ளி கொண்டதை விபீஷணாழ்வானுடைய குதூஹலத்தினால் மறுபடியும் ஆதரித்து அங்கீகரிப்பதற்குப் போலே திருவனந்தாழ்வான் மீது ஒரு திருக்கையைத் தலையணையாக வைத்துக்கொண்டவரும், மற்றொரு திருக்கையை நீட்டிக் கொண்டிருப்பவருமான பெரிய பெருமாளுடைய எப்போதும் கொடுத்துக் கொடுத்து நீண்டதான இருதிருக்கைகளையும் தியானிக்கிறோம்.]

என்றும், ''அரங்கத்தரவணைப் பள்ளியான்'' என்றும் பேசும்படி, * அ ர ங் க ந் த ன் னு ள் பாம்பணைப்பள்ளி கொள்ளுகை.

இப்படி படுக்கைவாய்ப்பாலே பள்ளிகொண்டருளும் பெரிய பெ ரு ம ா ளை — ( பரவாஸுதேவம் - மத்வா ) * 2. '' वासुदेवोऽसि पूर्णः '' ( வாஸுதேவோऽஸி பூர்ண: ) என்கிற அந்தப்பரவாஸுதேவராகவே புத்திபண்ணி; இங்குத்தையிற்படியை விசாரியாதே அங்குத்தையிற்படியாகவே அநுஸந்தித்து. '' ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப் பிறந்த'' என்றும், ''நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணன்'' என்றும் சொல்லக்கடவதிறே. * கடலிடங் கொண்ட கடல்வண்ணரிறே பெரியபெருமாள். ஆ கை ய ா ல்

---

என்றும், " அரங்கத்தரவணைப்பள்ளியான் " [பெரியாழ் திரு-4-10] என்றும் அறிவுடையார் பேசும்படி பெரிய பெருமாள் அரங்கந்தன்னுள் பா ம் ப ணை யி லே பள்ளி கொண்டிருக்கிறபடி.

இப்படிப் பள்ளிகொள்வதற்குத் தகுந்த இடம் என்று திருவுள்ளம் கொண்டு பள்ளிகொண்டருளும் பெரியபெருமாளை — (பரவாஸுதேவம் மத்வா) *2. வாஸுதேவோ ऽஸிபூர்ண: [ஜ்ஞாந ஶக்தி பல ஐஶ்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களாகிற ஆறு குணங்களும் நிறைந்த வாஸுதேவனாயிருக்கிறீர்] என்கிறபடியே அந்தப் பரவாஸுதேவராகவே எண்ணி. இங்கு அர்ச்சகர்களுக்குப் பராதீனனாய் அடியார்கள் செய்யும் எல்லாக் குற்றங்களையும் பொறுத்திருக்கும் அர்ச்சாவதாரமாயிருக்கிறபடியைத் திருவுள்ளத்திற் கொள்ளாமல், அங்கு வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்தும் பரவாஸுதேவனாகவே எண்ணி. " ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப்பிறந்த " [திருவாய் 3-5-5] என்றும், " நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" [திருவாய் 3-6-9] என்றும் சொல்லப்படுகின்றதன்றோ. நம்மாழ்வார் பெரிய பெருமாளை "கடலிடங்கொண்ட கடல்

* பூர்ணஷாட்₃கு₃ண்யமாய், ஸர்வம்பூர்ணமாயாய்த்து இங்குத்தையில் அவர்படியிருப்பது. அத்தாலே *யாவரும் வந்து அடி வணங்கும்படி ஸர்வ ஸமாஶ்ரயணீயமாயாய்த்து இவ்விஷயமிருப்பது. அவதா₄ரணத்தாலே-கைங்கர்யம் பண்ணுமிடத்து ''முகப்பே கூவி'' *3. '' क्रियतामिति '' (க்ரியதாமிதி) என்று ஏவிக்கொண்டு * வாளுடமரும் குளிர்விழிகளாலே

---

வண்ணு'' [திருவாய் 7-2-7] என்று பரவாஸு₂தே₃வனுகவன்றோ அனுஸந்தி₄த்தார். ஆகையாலே இவரும் அப்பரவாஸு₂தே₃வனைப்போலே ஜ்ஞாநம், ஶக்தி, ப₃லம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறுகுணங்களும் நிறைந்தவராய், ''ஸர்வம் பூர்ணம்'' [ த்₃வயோபநிஷத் ] [ அர்ச்சாவதாரம் எல்லா கு₃ணங்களும் நிறைந்தது] என்கிறபடியே அர்ச்சாவதாரமாகையாலே, பரநிலையில் மறைந்திருக்கும் ஸௌஶீல்யம், ஸௌலப்₄யம், வாத்ஸல்யம் முதலான நீர்மைக் குணங்களாலும் நிரம்பியிருப்பவர் அன்றோ. ஆகையால் ''யாவரும் வந்து அடிவணங்க அரங்கநகர்த்துயின்றவனே'' [பெரு திரு 8-10] என்கிறபடியே நித்யஸூரிகளோடு, இவ்வுலகிலுள்ளாரோடு வித்தியாசமில்லாமல் அனைவரும் வந்து அடிபணிய நிற்பவரன்றோ பெரியபெருமாள். ''தம் பரவாஸுதே₃வமேவ மத்வா'' என்னுமிடத்தில் 'ஏவ'காரத்தாலே, கைங்கர்யம் பண்ணும்போது ''முகப்பே கூவிப் பணிகொள்ளாய்'' [திருவாய் 8-5-7] என்றும்,

*3 பரவாநஸ்மி காகுத்ஸ்த₂ த்வயி வர்ஷஶதம் ஸ்தி₂தே !
ஸ்வயம் து ருசிரே தே₃ஶே க்ரியதாமிதி மாம் வத₃ !!
[ரா-ஆ 1-57]

[ககுத்ஸ்த₂ வம்ஶத்தில் பிறந்தவரே! நீர் இருக்கையில் எப்போதும் நான் ( உமக்கு ) அடிமையாயிருக்கிறேன். நீராகவே ''அழகிய தேசத்தில் பர்ணசாலை கட்டப்படட்டும்'' என்று என்னை ஆஜ்ஞாபியிடுவீராக.] என்றும் சொல்லுகிறபடியே அருளப்பாடிட்டு அழைத்து, ''வாளுடமரும் குளிர் விழிய''

எதிர்விழி கொடுக்கும் விஷயமாகவே இவரை ப்ரதிபத்தி பண்ணி. ''ஆதிமூர்த்தி அரங்கமாநகருளானே'' என்றும், ''இந்திரலோகமாளுமச் சுவைபெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே'' என்றுமன்றோ இவ்விஷயத்திலே இவர் மண்டியிருப்பது. (ராஜ துர்ஹணீயம் தம் ரங்கேசயம்) என்று இங்குத்தையில் ஸௌலப்ய ப்ரஸித்தியைச் சொல்லுகிறதாகவுமாம்.

''பரவாஸுதேவம்'' என்கையாலே - வ்யூஹவாஸுதேவரில் வ்யாவ்ருத்தி சொல்லுகிறது. * 4. ''आत्मानं वासुदेवाख्यं चिन्तयन्मधुसूदनः'' (ஆத்மாநம் வாஸுதேவாக்யம்

---

[திருவிருத்தம் 63] என்கிறபடியே எதிர்விழிகொடுக்கும் பரவாஸுதேவனாகவே இவரை எண்ணினார் என்கிறது. ''ஆதிமூர்த்தி அரங்கமாநகருளானே'' [திருமாலை 16] என்று இவ்வாழ்வாரே பெரியபெருமாளைப் பரவாஸுதேவனாகவும் ''இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே'' [திருமாலை 2] என்று பரவாஸுதேவனைக்காட்டிலும் சிறப்புற்றவராகவுமன்றோ ஈடுபட்டுத் திருமாலையில் அருளிச்செய்கிறார். ''தம் பரவாஸுதேவம்'' என்று கூட்டாமல், ''தம் ரங்கேசயம்'' என்று கூட்டினால் பரவாஸுதேவனைக் காட்டிலும் பெரியபெருமாள் ஸௌலப்ய குணத்தாலே புகழ்பெற்றிருப்பவர் என்னும் பெருமை 'தம்' என்னும் விசேஷணத்தாலே உணர்த்தப்படுகிறது.

''பரவாஸுதேவம்'' என்னுமிடத்தில் 'பர'சப்தத்தாலே வ்யூஹவாஸுதேவனைக் காட்டிலும் வேறுபாடு சொல்லப்படுகிறது.

*4. ஆத்மமாயாமயீம் திவ்யாம்
யோகநித்ராம் ஸமாஶ்ரித:
ஆத்மாநம் வாஸுதேவாக்யம்
சிந்தயந்மதுஸூதந: ॥ [வி-பு 6-4-6]

[வாஸுதேவனென்னும் பெயருள்ள தன் ஸ்வரூபத்தை சிந்தித்துக்கொண்டு, தன்னுடையதான மூலப்ரக்ருதிக்கு அபிமாநிதேவதையான யோகநித்ரையை (அறிதுயிலை

ரிந்தயந் மது₄ஸூத₃ந:) என்னும்படி, ''இவள் திறத்தென் சிந்தித்தாயே'' என்றும், ''உறங்குவான்போல் யோகுசெய்த பெருமானே'' என்றும் வ்யூஹஸௌஹார்த்தமுமுண்டிறே—இங்கு; இவர் பரிபூர்ணாநுப₄வம் பண்ணும் பரவிஷயமாகவே பெரியபெருமாளை ப்ரீதிபண்ணியிருப்பாராய்த்து. * 5. ''कावेरी विरजा सेयं वैकुण्ठं रङ्गमन्दिरम् । स वासुदेवो रङ्गेशः प्रत्यक्षं परमं पदम् ॥'' (காவேரீ விரஜா ஸேயம் வைகுண்ட₂ம் ரங்க₃மந்தி₃ரம் । ஸ வாஸுதே₃வோ ரங்கே₃ஶ: ப்ரத்யக்ஷம் பரமம் பத₃ம்)' என்னக்கடவதிறே. ''அண்டர்கோனணியரங்கன்'' என்றும் ''வடிவுடைவானோர் தலைவனே யென்னும் வண்திருவரங்கனே'' என்றும், ''பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மங்காதும் சோரா

---

மேற்கொண்டான்.] என்னும்படி ''இவள் திறத்தென் சிந்தித்தாயே'' [திருவாய் 7-2-4] என்றும், ''உறங்குவான் போல் யோகு செய்தபெருமானே'' [திருவாய் 5-4-11] என்றும் வ்யூஹவாஸுதே₃வனுக்குச் சொல்லப்படும் ஜக₃த்₃ரக்ஷணைசிந்தையாகிற ஸௌஹார்த்த₃மும் பெரியபெருமாளிடம் உண்டன்றோ. ஆயினும், இவ்வாழ்வார் பரிபூர்ணாநுப₄வம் பண்ணும் பரவாஸுதே₃வனாகவே பெரியபெருமாளை உகந்திருப்பாராயிற்று.

* 5. காவேரீ விரஜா ஸேயம் வைகுண்ட₂ம் ரங்க₃மந்தி₃ரம் ।
ஸ வாஸுதே₃வோ ரங்கே₃ஶ: ப்ரத்யக்ஷம் பரமம் பத₃ம்॥
[ஸ்ரீரங்க₃மாஹாத்ம்யம்]

[இக்காவேரி அந்த விரஜாநதியேயாகும்; திருவரங்கம் பெரியகோயில் வைகுண்ட₂மாகும். இவ்வரங்கன் அவ்வாஸுதே₃வனாவான்; இவ்வண்ணமாகப் பரமபத₃மே நம் கண்ணுக்கு விஷயமாயிருக்கிறது.] என்று ஸ்ரீரங்க₃மாஹாத்ம்யத்தில் சொல்லப்படுகின்றதன்றோ. ''அண்டர்கோனணியரங்கன்'' [அமல-10] என்றும், ''வடிவுடை வானோர் தலைவனே யென்னும் வண் திருவரங்கனே'' [திருவாய் 7-2 10] என்றும், ''பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்

மேயாள்கின்றவெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார்'' என்றும் அடியறிவார் அநுஸந்தித்தார்கள்.

விசேஷித்து, கோயில் திருத்3வாத3ஶாக்ஷரிப்ரதா4நமாயிறே திருவாராத4நம் கொண்டருளுவது. * 6. द्वादशाक्षर-मन्त्रोयं मन्त्राणां त्राय उच्यते'' (த்3வாத3ஶாக்ஷரமந்த்ரோயம் மந்த்ராணாம் த்ராய உச்யதே) என்கிறபடியே. * 7. '' श्रीरङ्गनाथ जगन्नाथ'' (ஶ்ரீரங்க3நாத, ஜக3ந்நாத2) என்னும்படி அர்ச்யரான இவரும் ஸர்வர்க்கும் ராஜாவாயிருப்பர்; இங்கும் (ராஜவத்3ர் ஹரணீயம்) என்றதிறே. ஆகையாலே, ராஜாக்களைப் பள்ளியுணர்த்தும் போலே அந்த ராஜாக்களுக்கும் ராஜாவான ஶ்ரீரங்க3ராஜரைத் திருப்பள்ளியுணர்த்தினபடி சொல்லுகிறது.

---

அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார்'' [நாச் – திரு 11-3] என்றும் பெரியபெருமாள் எங்கிருந்து வந்தார் என்பதை அறியும் ஆழ்வார்களும் ஆண்டாளும் இருக்கு மூலமூர்த்தியாகப் பரமபத3நாத2னையே அருளிச்செய்தனரன்றோ.

சிறப்பாகத் திருவரங்கம் பெரியகோயிலில் பெரியபெருமாள் ''ஓம் நமோ ப4க3வதே வாஸுதே3வாய'' என்னும் திருத்3வாத3ஶாக்ஷரியை முக்கியமாகவைத்தே திருவாராதனம் கண்டருளுகிறார்.

* 6 த்3வாத3ஶாக்ஷர மந்த்ரோயம் மந்த்ராணாம் த்ராய உச்யதே

[இந்தத் திருத்3வாத3ஶாக்ஷரமந்திரம் மற்ற மந்திரங்களுக்கு ரக்ஷகமாகச் சொல்லப்படுகிறது.] என்பது இவ்விஷயத்தில் ப்ரமாணம்.

* 7 ஶ்ரீரங்க3நாத2 ஜக3ந்நாத2

[ஶ்ரீரங்க3நாத2னே! லோகஸ்வாமியே!] என்னும்படி ஆராதிக்கப்படும் இவரும் அனைவர்க்கும் அரசராயிருந்தார். இத்தனியனிலும் ராஜாக்களைப்போலே ஆராதிக்கத் தக்கவர் என்று சொல்லப்பட்டதன்றோ. ஆகையாலே ராஜாக்களைப் பள்ளியுணர்த்துவது போலே அந்த ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவான ஶ்ரீரங்க3ராஜனைத் திருப்பள்ளியுணர்த்தும்படியை இந்த திவ்யப்ரபந்தம் சொல்லுகிறது.

(ப்ராபோ3தி4கீப் - ஸூக்திமாலாம் - ய: அக்ருத தம் - ப4க3வந்தம் - ப4க்தாங்க்4ரிரேணும் - ஈடே3) என்கிறது — அங்குத்தைக்கு அநுரூபமாயிருப்பதாய் ஶ்ராவ்யமாய், திருப்பள்ளியுணர்த்துமதான பாமாலையை யாதொருத்தர் பணித்தார்— அப்படிப்பட்ட வைப4வத்தையுடையராய், ஜ்ஞாநாதி3கு3ண பூர்ணரான தொண்டரடிப்பொடியாழ்வாரைத் துதித்துத் தொழுகிறேனென்கிறது. (ஈடே3) என்கிற ஶப்3த3ம் இரண்டையும் வசிக்கக்கடவது.

ராஜவத்3ர் ஹரணீயனகையாலே - ராஜவது3பசாரமாம்படி திருப்பள்ளியுணர்த்தவேணுமிறே. "அயோத்தியெம்மரசே அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்றிறே இவர் திருப்பள்ளியுணர்த்துவது. * 8. "श्रीमता राजराजेन" (ஶ்ரீமதா

---

(ப்ராபோ3தி4கீம் — ஸூக்திமாலாம் — ய: அக்ருத தம் — ப4க3வந்தம் — ப4க்தாங்க்4ரிரேணும் — ஈடே3 ) என்றதால், "பெரிய பெருமாளுக்குத் தக்கதாய், செவிக்கினியதாய், திருப்பள்ளியுணர்த்துவதான பாமாலையை எவர் அருளிச் செய்தாரோ, அப்படிப்பட்ட பெருமையை உடையவராய், ஞானம், வைராக்3யம் முதலான கு3ணங்களால் நிறைந்தவரான தொண்டரடிப்பொடியாழ்வாரைத் துதித்துத் தொழுகிறேன்" என்று சொல்லப்படுகிறது. (ஈடே3) என்கிற ஶப்3த3ம் துதித்தல்; தொழுதல் ஆகிய இரண்டையும் சொல்லும்.

ராஜாக்களைப் போலே பூஜிக்கத்தக்கவராகையாலே ராஜாக்களுக்கு உரிய உபசாரமான திருப்பள்ளியுணர்த்தலையும் செய்யவேண்டுமன்றோ. "அயோத்தியெம்மரசே அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" [திருப்பள்ளி 4] என்று இவர் பெரியபெருமாளை அரசராகச் சொல்லியன்றோ திருப்பள்ளி உணர்த்துவது.

* 8. ரக்ஷோக3ணபரிக்ஷிப்தோ ராஜா ஹ்யேஷ விபீ4ஷண |
ஶ்ரீமதா ராஜராஜேந லங்காயாமபி4ஷேசித:|| [ரா-யு 28-7]

ராஜராஜேந) * 9. " राजाधिराजस्सर्वेषां" (ராஜாதி₄ராஜஸ்ஸர்வேஷாம்) என்னும்படியான பெருமாளை, * 10. " वीर सौम्य विबुध्यस्व कौसल्यानन्दवर्धन " (வீர ஸௌம்ய விபு₃த்₄யஸ்வ கௌஸல்யாநந்த₃வர்த்த₄ந) * 11. " कौसल्यासुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते । उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम् ॥ (கௌ-

---

[ராக்ஷஸர்களால் துரத்தப்பெற்றவனாய், அரசனான இந்த விபீஷணன் அரசர்க்கரசனாய் ஸ்ரீமானான ராமபிரானாலே லங்காராஜ்யத்தில் அபி₄ஷேகம் செய்விக்கப்பெற்றான்.] என்றும்,

*9. ராஜாதி₄ராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணு; ப்₃ரஹ்மமயோ மஹாந் |
ஈஶ்வரம் தம் விஜாநீமஸ் ஸ பிதா ஸ ப்ரஜாபதி:॥
[ப₄ார-ஆஶ்வ 43-13]

[பரப்₃ரஹ்ம ஸ்வரூபியும், பெரியோனும், அரசர் அனைவர்க்கும் அரசனுமாயிருப்பவன் விஷ்ணு; ஈஶ்வரனாக அவனை அறிவோம். அவனே தந்தை. அவனே ப்ரஜாபதி.] என்றும் சொல்லுகிறபடியே அரசர்க்கெல்லாம் அரசரான ஸ்ரீ ராமபிரானாகிற பெருமாளை,

* 10. வீர ஸௌம்ய விபு₃த்₄யஸ்வ
கௌஸல்யாநந்த₃வர்த்த₄ந |
ஜக₃த்₃தி₄ ஸர்வம் ஸ்வபிதி த்வயி ஸுப்தே நராதி₄ப
[ரா-உ 37-4]

[கௌஸல்யையின் இன்பத்தை வளர்க்கும் வீரனான அழகனே! பள்ளியெழுந்தருள்வாயே! அரசனே! நீ உறங்கினால் உலகெல்லாம் உறங்குகிறது.] என்று வந்தி₃களும்

* 11. கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்₄யா
ப்ரவர்த்ததே |
உத்திஷ்ட₂ நரஶார்த்₃தூ₃ல கர்த்தவ்யம்
தை₃வமாஹ்நிகம் ॥
[ரா-பா₃ 23-2]

...ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்₄யா ப்ரவர்த்ததே।
...நரஶார்தூ₃ல கர்த்தவ்யம் தை₃வமாஹ்நிகம் ॥)
...ந்திகள் உணர்த்துமாபோலே அவர்க்கும் பெரிய
...ளாய்ப் பெரியபெருமாளான ஸ்ரீரங்கராஜரையிறே
...திருப்பள்ளியுணர்த்துவது. இவர்தாம் இப்ரப₃ந்
...லே காலாதிக்ரமமானபடியையும், ப்₃ரஹ்மாதி₃தே₃வ
...ஸாவதா₄நராய் வந்து திருவாசலிலே காத்துநிற்கிற
...யும், அங்குத்தையில் ஸம்மர்த்த₃த்தையும், திருப்
...ணர்ந்தால் கண்டருளும்படி மங்க₃ளவஸ்துக்கள்
...படியையும், மங்க₃ளவாத்₃யங்கள் முழங்குகிறபடி
...யும், மங்க₃ளதீ₃பம்போலே ஆதி₃த்யனுதித்துத்தோற்ற
...அரவிந்த₃ங்கள் தீ₃பிகைபோலே விகஸித்தபடியை
...சொல்லியிறே திருப்பள்ளியுணர்த்துகிறது. இவை
...லாம் ராஜவத₃ர்ஹணீயதைக்கு ஏற்கும்படியாயாய்த்
...றது.

---

[...யின் குலக்கொழுந்து ராமனே! விடியற்காலைநேரம் ...து. மனிதர் தலைவனே! பரமாத்மாராத₄னமான ...டன்களைச் செய்யவேண்டும். பள்ளி ...ளாய்.] என்று விஶ்வாமித்ரரும் பள்ளி ...த்தியதுபோலே, அவராலும் ஆராதி₄க்கப்பட்ட பெரிய ...ளாகையாலே "பெரியபெருமாள்" என்றே பெயர் ...ரான ஸ்ரீரங்க₃ராஜரையன்றோ இவர் திருப்பள்ளி ...த்துகிறார். இவர்தாம் திருப்பள்ளியெழுச்சியாகிற இந்த ...ப₃ந்த₄த்தில் காலைப்பொழுது கழிந்துவிட்ட படியை ...பிரமன் முதலான தே₃வர்கள் கவனத்துடன் வந்து ...லிலே காத்துநிற்கிற படியையும், திருவாசலிலே ...நெருக்கடியையும், திருப்பள்ளியுணர்ந்தவுடன் பார்க்க ... மங்க₃ளப்பொருள்கள் நிறைந்திருக்கிறபடியையும், ...விளக்குப்போலே ஸூர்யன் உதித்து வெளிப்பட, ...ம் மலர்ந்த தாமரைகள் சிறுவிளக்குகள் போலே மலர்ந் ...யும் சொல்லியன்றோ திருப்பள்ளியுணர்த்துகிறார். இப் ...யெல்லாம் ராஜாக்களைப் போலே பூஜிக்கத்தக்கவர் ... என்பதற்குப் பொருத்தமாய் இருக்கிறது.

(ரங்கே₃ஶயம் - ப்ராபோ₃திகீம் - ஸூக்திமாலாம் - அக்ருத) என்கையாலே—அடிக்கடி, "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாய்" என்றும், விசேஷித்து "இலங்கையர்கோன் வழிபாடுசெய்கோயில் எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே" என்றுமிறே அருளிச்செய்தது. (ப்ராபோ₃திகீம்-ஸூக்திமாலாம்) என்கையாலே- திருப்பள்ளியெழுச்சியாகிற சொன்மாலையையிறே இவர் சொல்லிற்று; திருமாலையும் ஸூக்திமாலையிறே. அதிலும் "என்னை நோக்காதொழிவதே" "அளியன் நம் பையலென்னார்" என்றிறே ஆலோகநாலாபாதிகளை அபேக்ஷித்தது. அபேக்ஷித்து அதில் 'கிடந்ததோர்கிடக்கை' என்று கிடையழகை அநுபவித்து, நடையழகு தொடக்கமானவற்றைக் கண்டு அனுபவிக்கத் துயிலெழப்பாடுகிறார். இரண்டும் பெரியபெருமாளை ப்ரதிபாதிக்கிற ப்ரபந்தமிறே; ஆகையால் (ஸூக்திமாலாம்) என்றதிலே இரண்டும் அந்தர்ப்பூதம்.

---

(ரங்கேஶயம் - ப்ராபோ₃திகீம் - ஸூக்திமாலாம் - அக்ருத) என்கையாலே- பல பாட்டுக்களில் "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்றும், சிறப்பாக ஐந்தாம் பாட்டில் "இலங்கையர்கோன் வழிபாடு செய்கோயில் எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே" [திருப்பள்ளி-5] என்றும் இவ்வாழ்வார் அருளிச்செய்ததை உணர்த்துகிறார். (ப்ராபோ₃திகீம்-ஸூக்திமாலாம்) என்கையாலே—திருப்பள்ளியெழுச்சியாகிற சொல்மாலையை இவ்வாழ்வார் அருளிச்செய்ததைக் காட்டுகிறார். 'திருமாலை'யும் ஒரு சொல்மாலையன்றோ. அதிலும் "என்னை நோக்காதொழிவதே" [திருமாலை-36] 'அளியன் நம்பையலென்னார்" [திருமாலை-37] என்று பெரியபெருமாள் பள்ளியெழுந்து தம்மைக் கடாக்ஷிக்கவேண்டும். தம்மோடுபேசவேண்டுமென்று அபேக்ஷித்தாரன்றோ. அந்த திவ்யப்ரபந்தத்தில் "கிடந்ததோர்கிடக்கை" [திருமாலை-23] என்று எம்பெருமானுடைய கிடந்த திருக்கோலத்தை அநுபவித்து, அவனுடைய நடையழகு முதலானவற்றைக் கண்டு அநுபவிப்பதற்காக இந்ததிவ்ய ப்ரபந்தத்தைப் பாடுகிறார். இரண்டுமே பெரியபெருமாளைச்சொல்லும் திவ்யப்ரபந்தங்களன்றோ. ஆகையால் "ஸூக்திமாலாம்" என்று இத்தனியனில் சொன்னதில் இரண்டு திவ்யப்ரபந்தங்களும் அடங்கும்.

(பகவந்தம்) என்கையாலே-ஜ்ஞாநாதிகளைச்சொல்லி, ஜ்ஞாநபலம் ததீய சேஷத்வமென்றது தோற்ற, (பக்தாங்க்ரிரேணும்) என்கிறது. அவரும் "அடியார்க் காட்படுத்தாய்" என்றும், "துளவத்தொண்டாய தொல் சீர்த் தொண்டரடிப்பொடி" என்றுமிறே தலைக்கட்டிற்று. "தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடி" என்று திருப்பள்ளி யுணர்த்தி, "சூட்டு நன்மாலையிற்படியே-பாகவதமுகேநால் ஸாதுவான பகவத்கைங்கர்யத்தை ப்ரார்த்திந்தார் அவர். (ஈடே) என்று-இதில் அவர் விஷயத்தில் வாசிக காயிக கைங்கர்யத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறது.

---

(பகவந்தம்)என்கையாலே—"ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸ: ஶ்ரிய: । ஜ்ஞாந வைராக்யயோஶ் சைவ ஷண்ணாம் பக இதீரணா ॥" [வி. பு. 6-5-74] [நிறைந்த ஐஶ்வர்யம், வீர்யம், புகழ், செல்வம், ஜ்ஞாநம், வைராக்யம் என்னும் இவ்வாறு குணங்களும் 'பக' என்று சொல்லப் படுகின்றது.] என்று சொல்லப்பட்ட ஜ்ஞாநம் முதலான ஆறு குணங்களை உடையவர் பகவான் ஆகிறார். அந்த ஜ்ஞாநத்தின் பயன் எம்பெருமானுடைய அடியார்களுக்கு அடிமைப்பட்டிருக்கையே என்பது விளங்கும்படியாக "பக்தாங்க்ரிரேணு" (தொண்டரடிப்பொடி) என்கிற இவருடைய திருநாமத்தைச் சொல்லுகிறார். இவரும் "அடியார்க்காட்படுத் தாய்" [திருப்பள்ளி 10] என்று திருமாலையையும், "துளவத் தொண்டாய தொல்சீர்த்தொண்டரடிப்பொடி" [திருமாலை 45] என்று திருமாலையையும் நிறைவுசெய்தாரன்றோ, "தொடை யொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" [திருப்பள்ளி 10] என்று திருப் பள்ளியுணர்த்தி, "சூட்டு நன்மாலைகள் தூயன வேந்தி" [திரு விருத்தம் 21] என்று நம்மாழ்வார் அருளியபடியே அடியார்கள் திருவுள்ளவுகப்புக்கு உறுப்பான பகவத்கைங்கர்யத்தை வேண்டுகிறார் ஆழ்வார். (ஈடே) என்று இத்தனியனில் அந்த ஆழ்வார் விஷயத்தில் வாயால் செய்யும் துதியும், உடலால் செய்யும் வணக்கமுமாகிற இரண்டுவகைக் கைங்கர்யத்தையும் ஆசார்யர் சொல்லி, தனியனை நிறைவுசெய்கிறார் திருமாலை யாண்டான்.

**திருவரங்கப் பெருமாளரையர் அருளிச்செய்தது**

**மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்**
**தொண்ட ரடிப்பொடி தொன்னகரம்—வண்டு**
**திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப் பள்ளி**
**யுணர்த்தும் பிரானுதித்த வூர்.**

பதவுரை:— " ண்டு—வண்டுகளானவை, திணர்த்த- நெருங்கிப் படிந்திருக்கப்பெற்ற, வயல்—கழனிகள் சூழ்ந்த, தென் — அழகிய, அரங்கத்து — திருவரங்கத்தில் (கண் வளர்ந்தருளுகிற), அம்மானை— பெரியபெருமானை, பள்ளி உணர்த்தும் — திருப்பள்ளி உணர்த்துபவராய், பிரான்— பரமோபகாரகராய், தொண்டரடிப்பொடி — "தொண்டரடிப் பொடி" என்னும் திருநாமமுடையரான ஆழ்வார், உதித்த ஊர் — திருவவதரித்த திவ்ய தேஶமாவது, சீர் மன்னிய— சீர்மையுடைய, மண்டங்குடி — திருமண்டங்குடி என்கிற, தொல் நகரம் — அநாதியான நகரமாகும்" என்பர் மா மறையோர் — என்று வேதம் வல்ல பெரியோர் கூறுவர்.

---

அவ:— (மண்டங்குடியித்யாதி) ஶேஷத்வ ஸீமாபூமி யான தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதார ஸ்தலம் * மிக்கவேதியராலே ஸதா அநுஸந்திக்கப்படுமென்கிறது.

வ்யா:—[மாமறையோர்-வண்டு திணர்த்த வயல் தென் னரங்கத்தம்மானைப் பள்ளியுணர்த்தும் பிரான்-தொண்டரடிப்

---

## இரண்டாவது தனியன் விவரணம்

அவ:- இவ்விரண்டாவது தனியனை அருளிச்செய்தவர் எம்பெருமானாருடைய மற்றொரு ஆசார்யரான திருவரங்கப் பெருமாளரையர். ஶேஷத்வத்தின் எல்லை நிலத்திலே நிற்கும் தொண்டரடிப் பொடியாழ்வாருடைய திருவவதார ஸ்தலமான திருமண்டங்குடி வைதிக ஶ்ரேஷ்டர்களாலே எப்போதும் அநு ஸந்திக்கப்படுவதாய் இருக்கிறது என்கிறது இந்தத் தனியன்.

வ்யா:- [மாமறையோர்—வண்டு திணர்த்தவயல் தென் னரங்கத்தம்மானைப் பள்ளியுணர்த்தும் பிரான்—தொண்டரடிப்

பொடி - உதித்தவூர் - தொல்நகரமான - மண்டங்குடி யென்பர்.] "கண்ணங்குடி — குறுங்குடி புள்ளம்பூதங்குடி" என்று உகந்தருளின நிலங்களைச் சொல்லுமாபோலே இங்கும் "மண்டங்குடி யென்பர் மாமறையோர்" என்கிறது. இவர் மாமறையோராகையாலே மண்டங்குடியைச் சொல்லுமவர்களும் மாமறையோராய்த்து, * மாமறையோராகிறார்-மிக்கவேதியர் வேதத்தினுட்பொருளான ததீ₃ய வைப₄வத்தை அறிந்தவர்கள்.

அதுதான் தொண்டரடிப்பொடி தொல்நகரமிறே— (தொல்நகரம்) பழையதாய்ப்போருகிற நக₃ரம், நக₃ரங்களிலேயிறே நல்ல வஸ்துக்களுண்டாவது; "நல்லார் நவில் குருகூர்" என்னுமாபோலே. இது நக₃ரமாகைக்கு ஹேது சொல்லுகிறது (வண்டுதிணர்த்த) இத்யாதி₃யால்.

---

பொடி—உதித்தவூர்—தொல்நகரமான—மண்டங்குடி யென்பர்] என்று அந்வயம். "கண்ணங்குடி, குறுங்குடி, புள்ளம்பூதங்குடி" என்று எம்பெருமான் உகந்தருளின திவ்யதேசங்களைச் சொல்லுவதுபோலே "மண்டங்குடி" என்னும் ஆழ்வார் அவதரித்த திவ்ய தேசத்தைப் பரமவைதி₃கர்கள் சொல்லுவார்கள் என்கிறார் இவர். இவ்வாழ்வார் பரமவைதி₃கரான மாமறையோர் ஆகையாலே, இவர் அவதரித்த மண்டங்குடியைச் சொல்லுகிறவர்களும் 'மாமறையோர்' ஆகிறார்கள். மாமறையோர்கள் யாரெனில்: 'மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள்' [கண்ணி—9] என்று மதுரகவியாழ்வாரால் வேதத்தின் உட்பொருளாகச் சொல்லப்பட்ட அடியார் பெருமையை அறிந்தவர்களே மாமறையோர் ஆவர்.

அந்த மண்டங்குடியானது தொண்டரடிப்பொடி தோன்றிய தொல் நகரம் என்கிற ப்ரஸித்₃தி₄யைக் கூறுகிறார்- (தொல்நகரம்) தொன்மையான நகரம். மிகப் பழமையான நகரம் என்றபடி. நகரங்களிலேயன்றோ நல்ல வஸ்துக்கள் உண்டாகும். "நல்லார் நவில் குருகூர் நகரான்" [திருவிருத்தம்—100] என்று நம்மாழ்வார் அவதரித்த குருகூரும் ஒரு நகரன்றோ. இது நகரமாவதற்குக் காரணம் திருப்பள்ளியெழுச்சிபாடிய தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரித்ததே என்று பாட்டின் எஞ்சிய பகுதியாலே

வண்டுகள் நெருங்கின வயலையுடைய, ''வயலுளிரிந்தன சுரும்பினம்'' என்றருளிச்செய்தாரிறே, ''பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண் படுப்ப'', இப்படி நீர்ப்பூவிலே வண்டுகள் நெருங்கின வயல்சூழ்ந்த கோயிலுக்கு நிர்வாஹகரான பெரியபெருமாளை.

''வண்டு திணர்த்த வயல்தென்னரங்கத் தம்மானைப்பள்ளியுணர்த்தும்'' என்கையாலே ''வயலுளிரிந்தன சுரும்பினம்'' இத்யாதிப்படியே *12.'मञ्जरीसुप्तभृङ्गा'' (மஞ்ஜரீஸுப்தப்₄ருங்கா₃) என்று பூக்களிலே கண்படுத்த வண்டுகள் உணர்ந்தன.

---

கூறுகிறார். (வண்டு திணர்த்த வயல்) வண்டுகள் நெருங்கின வயலை உடைய. தென்னரங்கத்திற்கு இது விசேஷணம். ''வயலுள் இரிந்தன சுரும்பினம்'' [திருப்பள்ளி—4] என்று இவ்விஷயத்தை இவரும் அருளிச்செய்தாரன்றோ. 'பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப'' [திருப்பாவை—3] என்று ஆண்டாளும் அருளினாள். (தென்னரங்கத்தம்மானை) இப்படி நீரில் முளைக்கும் பூக்களிலே வண்டுகள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திருவரங்கமப் பெரியகோயிலை ஆளும் பெரிய பெருமாளை,

'வண்டு திணர்த்த வயல் தென்னரங்கத்தம்மானைப் பள்ளியுணர்த்தும்'' என்கையாலே, ''வயலுள் இரிந்தன சுரும்பினம்'' [திருப்பள்ளி-4]

*12. தரளதநு தரங்கைர் மந்த₃மாந்தே₃ால்யமாந-
ஸ்வதட விடபிராஜீ மஞ்ஜரீ ஸுப்தப்₄ருங்கா₃ ।
க்ஷிபது கநகநாம்நீ நிம்நகா₃ நாரிகேள-
க்ரமுகஜ மகரந்தை₃ர் மாம்ஸலாபா மத₃ம்ஹ: ॥
[ர-ஸ்த 1-24]

[அசையும் மெல்லிய அலைகளாலே மெல்ல அலைக்கப்படுகின்ற தன் கரையிலுள்ள சோலைகளினுடைய பூங்கொத்துக்களிலே உறங்குகின்ற வண்டுகளையுடையதும், தென்னை பாக்கு மரங்களிலிருந்து உண்டான மகரந்த₃ம் நிரப்பிய நீரையுடையதுமான பொன்னியெனும் பெயரையுடைய காவேரி நதியானது என்னுடைய பாபத்தை அழிக்கட்டும்.] என்கிற படியே பூக்களிலே உறங்கின வண்டுகள் உணர்ந்தன என்று கூறி, ஸ்ரீரங்க₃ராஜனாகிற வண்டை ''அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே'' என்று திருப்பள்ளியுணர்த்துபவர் என்று சொல்லப்படுகிறது.

ஸ்ரீரங்கநாச்சியார் ஸ்தநஸ்தபஹகத்திலே கண் வளர்ந் தருளுகிற ஸ்ரீரங்கராஜப்ருங்கத்தை ''அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே'' என்று திருப்பள்ளியுணர்த்துமவர். (பள்ளியுணர்த்தும் பிரான்) திருப்பள்ளியுணர்த்தி, பின்புள்ளார்க்கும் இப்ரபந்தத்தையுண்டாக்கி உபகரித் தருளினவர்.

(உதித்தவூர்) * அறிவிலா மனிசர்க்கு * அறியாதன அறிவித்து அஜ்ஞாநத்தைப் போக்குகைக்காக இவர் அவ் வூரிலே உதித்தது. ''கதிரவன் குணதிசைச்சிகரம் வந்தணைந்தான் கனவிருளகன்றது'' என்னும்படியன் றிக்கே ஆந்தரமான அந்தகாரத்தைப் போக்கிற்று. ஆகையால் தொண்டரடிப்பொடி தொன்னகரம் மண்டங் குடியென்பர்.

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த
திருப்பள்ளியெழுச்சித் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.
பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

---

(பள்ளியுணர்த்தும் பிரான்) பெரிய பெருமாளுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடி, பின்புள்ளாருக்கும் இந்த திவ்ய ப்ரபந்தத்தை அருளிச்செய்து உபகாரம் செய்தவர்.

(உதித்தவூர்) ''அறிவிலாமனிசர்'' [திருமாலை 13] எனப்படும் ஸம்ஸாரிகளுக்கு ''அறியாதன அறிவித்த'' [திருவாய் 2-3-2] என்கிறபடியே அவர்களால் அறியப்படாத நல்ல விஷயங்களை அறிவித்து அஜ்ஞாநத்தைப் போக்கு வதற்காகவே இவர் அவ்வூரிலே அவதரித்தது. ''கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் கனவிருளகன்றது'' [திருப்பள்ளி-1] என்று சொல்லப்படும் ஸூர்யனைப் போலே வெளியிருளைமாத்திரம் போக்காமல், இவர் அஜ்ஞாந இருளாகிற உள்ளிருளையே போக்கினாரன்றோ. ஆகையாலே, ''தொண்டரடிப் பொடி தொன்னகரம் மண்டங்குடியென்பர்'' என்று முற்பாதியோடே கூட்டிப் பொருள் கொள்வது.

தனியன் வ்யாக்யாந விவரணம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# நஞ்ஜீயர் அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்

### அவதாரிகை

1* ''अनादिमायया सुप्तो यदा जीवः प्रबुध्यते'' (அநாதி₃மாயயா ஸுப்தோ யதா₃ ஜீவ: ப்ரபு₃த்₄யதே) என்கிறபடியே அநாதி₃காலம் அஜ்ஞாநத்தாலே உறங்குகிற இவரைப் பெரிய பெருமாள் தம்முடைய நிரவதி₄க க்ருபையாலே உணர்த்தியருள உணர்ந்து, பெரியபெருமாளே ப்ராப்யரும் ப்ராபகருமென்று

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்

### அவதாரிகை

அவ:— இவ்வாழ்வாராகிறார் - முதலிலே ஸ்வரூபோபாய புருஷார்த்த₂ விவேக ஶூந்யராய் தே₃ஹத்தில் ஆத்ம பு₃த்₃தி₄யைப் பண்ணி தத₃நுப₃ந்தி₄களான ஶப்₃தா₃தி₃ விஷயங்களிலே மண்டி, தம்மோடு சேர்ந்தாரையும்தத்ஸ்வ

---

# நஞ்ஜீயர், பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்₂யாநங்களுக்கு விவரணமான திவ்யப்ரப₃ந்த₄ஸார வ்யாக்₂யாநம்

[ (ஸுதர்சனர்) கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஆசிரியர், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம், திருச்சி-17. ]

### அவதாரிகை

1. அநாதி₃மாயயா ஸுப்தோ யதா₃ ஜீவ: ப்ரபு₃த்₄யதே
[கௌ₃ட₃பாத₃காரிகை]

[அநாதி₃மாயையினால் உறங்கும் ஜீவன் எப்போது உணருகின்றானோ] என்கிறபடியே அநாதி₃காலமாக அஜ்ஞாநத்தாலே உறங்கிக்கிடந்த இவ்வாழ்வாரை, பெரிய பெருமாள் தம்முடைய எல்லையற்ற நிர்ஹேதுககிருபையாலே மயர்வற மதிநலமருளி உணர்த்தியருள உணர்ந்து, இவ்வாழ்வாரைக் கொண்டு ''பெரிய பெருமாளே ப்ராப்யரும், ப்ராபகருமாயிருப்பவர்'' என்கிற விஷ

மிடம் “ஐம்புலனகத்தடக்கிக் காம்பறத் தலை சிரைத்துன் கடைத்தலையிருந்து வாழும் சோம்பரையுகத்தி” என்று இவரை யிட்டு நிலையிடுவித்து, இப்ரபந்தத்தாலே நாட்டுக்கு வெளிச் செறிப்பைப் பண்ணிவைத்து நிர்ப்பரராய்க் கண்வளர்ந்தருள, அத்தலையித்தலையாய்ப் பெரிய பெருமாளையுணர்த்தி அடிமை செய்யப் பாரிக்கிறார்.

---

பூர்வராக்கிப் போராநிற்க, உ “மாதரார்கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்துவேனைப் போதரேயென்று சொல்லிப்

---

யத்தை “மேம்பொருள்” என்று தொடங்கும், திருமாலையில் 38ம் பாட்டில், “ஐம்புலனகத்தடக்கிக் காம்பறத்தலைசிரைத்துன் கடைத்தலையிருந்து வாழும் சோம்பரையுகத்தி” என்று நிலை நாட்டச் செய்து, இந்த திவ்யப்ரபந்தத்தாலே உலகிற்கு ஜ்ஞாநச் சிறப்பைப் பண்ணிவைத்துக் கவலையில்லாமல் கண் வளர்ந்தருள, இவ்வாழ்வார் பெரிய பெருமாளை உணர்த்துகின்றவராய், திருப்பள்ளியெழுச்சி என்னும் இந்த திவ்யப்ரபந்தத்தைப் பாடி எம்பெருமானுக்கு அடிமைசெய்ய மநோரதிக்கிறார்.

அதாவது — இவ்வாழ்வார் அநாதிகாலமாக ஸம்ஸாரியாய் இருந்து “மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து” [திருவாய் 2-6-5] என்கிறபடியே பலபிறவிகள் எடுத்து வரும்போது, தம்ஸ்வரூபம் எத்தகையது, தாம் அடையவேண்டிய பயன் எது, அதற்கு உபாயம் எது என்னும் அறிவு இல்லாதவராய், தேஹத்தையே ஆத்மாவாக எண்ணி இந்த தேஹத்தைக் கொண்டு அநுபவிக்கப்படுகிற ஶப்தஸ்பர்ஶ ரூப ரஸ கந்தங்களாகிற ப்ராக்ருத விஷயங்களிலே ஈடுபட்டு, தம்மோடு சேர்ந்தவர்களையும் தம்மைப்போலவே ஆக்கிப்போந்தார். அப்போது இப்பிறப்பிலே “மாதரார் கயற்கணென்னும் வலையுள்பட்டு அழுந்துவேனைப்

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருப்பள்ளியெழுச்சியின் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாந அரும்பதவுரை

ப்ரவேஶம்:— 2 அவர் அநுகூலரானபின்பு உறங்குகிறரென்கைக்கு, முன்பு உறக்கமில்லையோவென்ன அருளிச்செய்கிறார் (மாதராரித்யாதி)

ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் அவனே என்றறுதியிட்டால் பின்பு திருப்பள்ளியுணரும் படியையும், அழகோலக்க மிருக்கும்

---

புந்தியிற் புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்த அழகன்'' என்கிறபடியே பெரியபெருமாள் தம் நிர்ஹேதுகக்ருபையாலே தம் வடிவழகைக் காட்டி, விஷயாந்தர ப்ராவண்யத்தை மாற்றி, ஸ்வரூபாநுரூபமாகத் தம்பக்கலிலே அபி₄நிவேஶத்தைப் பிறப்பிக்க, இவரும் ப்ரீதிகாரிதமான கைங்கர்யத்தைப் பாரித்துக் கொண்டு பெரியபெருமாள் திருவடிகளிலே சென்றவிடத்திலே, திருக்கண்களாலே குளிர நோக்குதல், கையைநீட்டி அணைத்தல், குஶல ப்ரஶ்நம் பண்ணுதல், 1. ''शिरसा देवः प्रतिगृह्णाति'' (ஶிரஸா தே₃வ: ப்ரதிக்₃ருஹ்ணாதி) என்கிறபடியே * சூட்டுநன்மாலைகளை ஶிரஸாவஹித்தல் செய்யாதே பள்ளிகொண்டருளினார் பெரியபெருமாள்.

---

போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன் பாலாதரம் பெருகவைத்த அழகன்'' [திருமாலை-16] என்கிறபடியே பெரிய பெருமாள் தம் வடிவழகைக் காட்டி இவருக்கு ப்ராக்ருத விஷயங்களில் வந்த ஈடுபாட்டை மாற்றி, தம் ஶேஷத்வஸ்வரூபத்துக்குத் தக்கபடி தம்மிடம் பெரிய ஆத₃ரத்தை உண்டாக்க, இவரும் உகப்பினால் உண்டாகும் கைங்கரியத்தைச் செய்ய மநோரதி₂த்துக்கொண்டு பெரிய பெருமாள் திருவடிகளை அடைந்தபோது, இவரைக் திருக்கண்களாலே குளிர நோக்குவது, கையை நீட்டி அணைத்துக் கொள்வது, யோக₃க்ஷேமங்களை விசாரிப்பது,

1. யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யுரேகாந்தக₃தபு₃த்₃தி₄பி₄: ।
தா: ஸர்வா: ஶிரஸா தே₃வ: ப்ரதிக்₃ருஹ்ணாதி வை ஸ்வயம் ॥
[பா₄ர-மோக்ஷ 171-63]

[மறந்தும் புறந்தொழாமையில் நிலைநிற்கும் அறிவையுடையவர்களாலே யாவை சில கிரியைகள் (கைங்கர்யங்கள்) நன்கு அனுஷ்டிக்கப்படுகின்றனவோ, அவையெல்லாவற்றையும் தே₃வன் தானே தலையாலே ஏற்றுக்கொள்கிறான்.] என்கிறபடியே இவர் சூட்டுகின்ற மாலைகளைத் தலையாலே தரிப்பது முதலான செயல்களைச்செய்யாமல் பள்ளிகொண்டிருந்தார் பெரியபெருமாள்.

படியையும், அருகே திருமாலையெடுத்து அடிமைசெய்யும் படியையும், மநோரதித்து, இவையே யாத்ரையாய்ச் செல்லுமித்தனை யிறே. நாய்ச்சியாருக்கு "மாரிமலைமுழைஞ்சில்" என்கிற பாட்டிலே இதுவேயிறே அநுஸந்தாநம். நம்மாழ்வாரும், *நெடுமாற்கடிமையிலே புருஷார்த்தத்தினுடைய சரமாவதியை நிலையிட்டு, அநந்தரம் *கொண்ட பெண்டிரிலே நாட்டுக்கு வேண்டும் ஹிதமருளிச் செய்து, பின்பு "கிடந்த நாள் கிடந்தாய்" என்கிற பாட்டிலே உணர்த்தியெழுப்பி அடிமை செய்யப் பாரித்தாரிறே.

---

அதற்கு நிபந்தநம் அநாதரமென்னவொண்ணாது. ப்ரியபூதராகையாலே; உண்டது அருமையாலேயாதல், தமோபிபவத்தாலேயாதலென்னவொண்ணாது, ஶுத்தஸத்வமாகையாலே. பின்பு இதற்கு நிபந்தநமென்னென்னில்; "ஆதலால் பிறவிவேண்டேன்" என்னும்படி ப்ரக்ருதிஸம்பந்தம் அப்ராப்தமென்னும்படியான ஜ்ஞாநவிஶேஷத்தையுடையரானபடியையும், "போனகஞ் செய்த சேடந்தருவரேல் புனிதம்" என்னும்படி ததீய ஶேஷத்வ பர்யந்தமாக ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநம் பிறந்த

---

அதற்குக் காரணம் பெரியபெருமாளுக்கு இவரிடம் உள்ள அநாதரவே என்று சொல்ல முடியாது; ஏனெனில் இவர் அவருக்கு மிகவும் இனியவரன்றோ. பெரியபெருமாள் உண்ட உணவு சரிக்காமையாலோ, தமோகுணத்தால் மேற்கொள்ளப் பட்டோ தூங்குகிறார் என்றும் சொல்லமுடியாது; ஏனெனில்; பெரியபெருமாள் ஶுத்தஸத்வமயமான திருமேனி உடையவராகையாலே அவருக்கு இந்த தோஷங்கள் இல்லை, அப்படியானால் இதற்குக்காரணமென்ன! எனில் "ஆதலால் பிறவி வேண்டேன்" [திருமாலை-3] என்னும்படி ஆழ்வார் தேஹஸம்பந்தம் தம் ஸ்வரூபத்திற்குத் தகாததுஎன்னும்அறிவை உடையவரான படியையும், "போனகம் செய்த சேடந்தருவரேல் புனிதமன்றே" [திருமாலை 41] என்னும்படி அவனடியார்க்கும் ஆட்பட்டிருக்க வேண்டும் என்னுமளவுக்கு ஆழ்வாருக்கு ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தபடியையும், "இச்சுவைதவிர—அச்சுவைபெறினும் வேண்

விஶ்வாமித்ரனும், 2*. ''कौसल्यासुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते । उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम्॥'' (கௌஸல்யா-

---

படியையும் ''இச்சுவைதவிர அச்சுவைபெறினும் வேண்டேன்'' என்னும்படி ப்ரக்ருதி புருஷயாதாத்ம்யஜ்ஞாநம் பிறந்தபடியையும், ''காவலிற்புலனை வைத்து'' என்னும் படி இந்த்ரியங்களை நியமித்தபடியையும், ''குளித்து மூன்றனலையோம்புங் குறிகொளந்தணமை தன்னை யொளித்திட்டேன்'' என்னும்படி உபாயாந்தரங்களில் துவக்கற்ற படியையும், ''உன்னருளென்னுமாசைதன்னால் பொய்யனேன் வந்து நின்றேன்'' என்னும்படி உபாய யாதாத்ம்ய ஜ்ஞாநம் பிறந்தபடியையும் அநுஸந்தித்து, ''சோம்பரை யுகத்திபோலும்'' என்கிறபடியே இவரையிப்படிப் பெறுவோமென்கிற ப்ரீதிப்ரகர்ஷத்தாலும், 2. ''आत्मानं वासुदेवाख्यं चिन्तयन्'' (ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந்) என்கிறபடியே இவரைப் புகுரநிறுத்தின தன் வைபவத்தையு மநுஸந்தித்து, ''நாகமிசைத்துயில்வான் போலுலகெல்லாம் நன்கொடுங்க யோகணைவான்'' என்கிறபடியே

---

டேன்'' [திருமாலை-2] என்று ப்ரக்ருதி புருஷர்களைப்பற்றிய உண்மையறிவு பிறந்தபடியையும், ''காவலிற்புலனைவைத்து'' [திருமாலை 1] என்னும்படி புலனடக்கம் உண்டானபடியையும், ''குளித்து மூன்றனலையோம்புங் குறிகொளந்தணமைதன்னை'' [திருமாலை 25] என்னும்படி மற்ற உபாயங்களில் தொடர்பற்ற படியையும், ''உன்னருளென்னுமாசைதன்னால் பொய்யனேன் வந்து நின்றேன்'' [திருமாலை 33] என்னும்படி 'எம்பெருமானுடைய இரக்கமே உபாயம்' என்னும் உண்மையறிவு பிறந்த படியையும் நினைவு கூர்ந்து, ''சோம்பரையுகத்தி போலும்'' [திருமாலை 38] என்கிறபடியே 'எப்படி இருந்த இவர் இப்படியாய் விட்டார்' என்னும் உகப்பின் மிகுதியாலும் பக்கம் 6ல் உள்ள * 4 ப்ரமாணத்தின்படி இவரை இப்படி ஆக்கின தன் பெருமையையும் நினைவு கூர்ந்து, ''நாகமிசைத்துயில்வான் போல் உலகெல்லாம் நன்கொடுங்க யோகணைவான்''

ஸௌப்ரஜா ராம பூர்வா ஸந்த்₄யா ப்ரவர்த்ததே| உத்திஷ்ட₂ நரசார்தூ₃ல கர்த்தவ்யம் தை₃வமாஹ்நிகம்||) என்றுனிறே;

''எல்லாரையும் இவரைப்போலே நம்பக்கலிலே ப்ரவணராக்கும் விரகேதோ?'' என்று தத₃கா₃ரசித்தராய்க் கொண்டு பள்ளிகொண்டருளினர்.

''மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட்டு'' என்கிறபடியே இந்த்₃ரியவஶ்யராய்க்கைகழிந்தவன்று, 3 ''अनिद्रः सततं रामः'' (அநித்₃ரஸ்ஸததம் ராம:) என்கிறபடியே-உறங்காதிருந்த பெரியபெருமாள், ''அடியரோர்க்ககலலாமே'' என்னும்படி கைபுகுந்தபின்பு கரைச்சல்கெட்டு மார்பிலே கைவைத்து உறங்கப்புக்கார். b ''எம்பிராற்காட்செய்யாதே என் செயவான் தோன்றினேனே'' என்றிருக்குமவராகை

[திருவாய் 4-8-9] என்கிறபடியே ''சேதனர் அனைவரையும் இவரைப் போலே நம்மிடம் ஈடுபடும்படி செய்யும் வழி ஏதோ?'' என்று ஜக₃த்₃ ரக்ஷண சிந்தையிலேயே ஈடுபட்டுப் பள்ளிகொண்டிருந்தாராகையாலே ஆழ்வார் வந்ததைக் கணிசிக்கவில்லை.

''மாதரார்கயற்கணென்னும் வலையுள்பட்டு'' [திருமாலை 16] என்கிறபடியே ஆழ்வார் இந்த்₃ரியங்களுக்கு வசப்பட்டு விலகியிருந்த காலத்திலே

3. அநித்₃ரஸ் ஸததம் ராம: ஸுப்தோऽபி ச நரோத்தம: |
ஸீதேதி மது₄ராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபு₃த்₄யதே ||
[ரா-ஸு 36-44]

[(ஸீதையைப் பிரிந்த) ராமன் எப்போதும் தூக்கமற்றவராகவே இருக்கிறார்; நரஶ்ரேஷ்ட₂ரான அவர் தூங்கினாலும் 'ஸீதே' என்னும் அழகிய சொல்லை உச்சரித்துக் கொண்டே விழித்தெழுகிறார்.] என்கிறபடியே உறங்காதிருந்த பெரியபெருமாள் ''அடியரோர்க்ககலலாமே'' [திருமாலை 20] என்னும்படி இவர் தமக்கு வசப்பட்ட பின்பு கவலையில்லாமல் மார்பிலே கை வைத்து உறங்கலானார். ''எம்பிராற்காட்செய்யாதே என்செய்வான் தோன்றினேனே'' [திருமாலை 28] என்று கைங்கரியம் செய்யாதே

b ''ஆனால் எழுப்புவானென்?'' என்ன அருளிச்செய்கிறார் (எம்பிராற்கித்யாதி₃)

அப்படியே இவரும் பெரியபெருமாள் உணர்ந்தருளும் போதை யழகுகண்டு அடிமை செய்ய ஆசைப்பட்டுத் திருப்பள்ளி யுணர்த்துகிறார்.

---

யாலே கைங்கர்யத்வரையாலே 4. ''उत्तिष्ठ नरशार्दूल'' (உத்திஷ்ட₂ நரஶார்தூ₃ல) 5. ''समया बोधितः श्रीमान्''(ஸமயா பே₃ாதி₄த: ஸ்ரீமாந) ''உம்பர் கோமானே உறங்காதெழுந் திராய்'' என்னுமாபோலே ''அரங்கத்தம்மா பள்ளியெழுந் தருளாயே'' என்று திருப்பள்ளியுணர்த்தி, ''உனக்கே நாமாட்செய்வோம்'' என்றாப்போலே, ''தொண்டரடிப் பொடி யென்னுமடியனை அளியனென்றருளி யுன்னடியார்க் காட்படுத்தாய்'' என்று-ததீ₃யபர்யந்தமான கைங்கர்யத்தைக் கொண்டருளவேணுமென்று ப்ரார்த்தி₂க்கிறாராயிருக்கிறது.

---

பிறவியெடுத்த பயன் என்று நினைக்கிறவராகையாலே கைங்கர்யம் செய்வதில் வேக₃த்தலே, 10ம் பக்கத்திலுள்ள * 11 ப்ரமாணத்தின் படி விஸ்வாமித்ரர் எழுப்பியதுபோலும்,

5. வாயஸேந ததஸ்தேந ப₃லவத் க்லிஶ்யமாநயா |
ஸ மயா பே₃ாதி₄த: ஸ்ரீமாந் ஸுக₂ஸுப்த: பாந்தப: ||
[ரா-ஸு 38-25]

[பிறகு அந்தக் காகாஸுரனால் ப₃லாத்காரமாகத் துன்புறுத்தப் பட்ட என்னால், ஸுக₂மாகக் கண்வளர்ந்தருளியவரும், (அத னாலே) அழகாயிருப்பவரும், எதிரிகளைத் தபிக்கச்செய்பவருமான ஸ்ரீராமபிரான் எழுப்பப்பட்டார்.] என்று ஸீதாப்பிராட்டி எழுப் பியது போலும், ''உம்பர்கோமானே உறங்காதெழுந்திராய்'' [திருப்பாவை 17] என்று ஆண்டாள் எழுப்பியது போலும் ''அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே'' என்று இவரும் திருப் பள்ளியெழுச்சி பாடி, ''உனக்கே நாமாட் செய்வோம்'' [திருப் பாவை-29] என்று ஆண்டாள் அவன் உகந்த கைங்கர்யத்தை ஆசைப்பட்டது போலே 'தொண்டரடிப் பொடி என்னும் அடியனை அளியனென்றருளி உன்னடியார்க்காட்படுத்தாய்'' [த்ருப்பள்ளி-10] என்று இவர் அடியார் வரையிலான கைங் கர்யத்தைக் கொண்டருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறவராய் இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

ஆதித்3யன் உத3யகிரியிலேவந்துதோற்றினான். திருவாராத4நத்துக்குஸமுசிதமானஸகலோபகரணங்களுங்கொண்டு து3ர் மாநிகளானதே3வஜாதிகளும், ராஜாக்களும்ப4க்3நாபி4மாநராய்த் திருக்கண்ணோக்காகத்தெற்குதிக்கிலேப்ரத2மகடாக்ஷத்துக்காக

c திருப்பள்ளியுணர்த்துகைக்கு நிப3ந்த4நமென்னென்னில்: — ''ஆம்பரிசறிந்துகொண்டு'' என்கிறபடியே - கைங்

---

மேலும், ''ப்ராப்ய ப்ராபகங்கள் இரண்டும் எம்பெருமானே'' என்று உறுதிகொண்டால் அதற்குப்பின் அவன் திருப்பள்ளியெழுந்திருக்கும்படியையும், சீரிய சிங்காசநத்திலே இருக்கும்படியையும் கண்டு அநுப4வித்து அருகில் பூமாலைகளை எடுத்து அடிமை செய்யவேண்டுமென்று பாரித்து இதுவே தொழிலாக இருக்கவேண்டிவருமன்றே. ஆண்டாளுக்கும் ''மாரிமலைமுழைஞ்சில்'' [திருப்பாவை 28] என்கிற பாட்டில் இந்த நிலையன்றே விளைந்தது. நம்மாழ்வாரும் ''நெடுமாற்கடிமை'' [திருவாய் 8-10] என்னும் திருவாய்மொழியிலே பெறும் பேற்றினுடைய எல்லைநிலம் பா4க3வத கைங்கர்யமே என்று நிர்ணயித்து, 'கொண்ட பெண்டிர்'' [திருவாய் 9-1] என்னும் அடுத்த திருவாய்மொழியிலே உலகினுக்கு ஹிதோபதேசம் செய்து, அதற்கடுத்த திருவாய்மொழியிலே ''கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம் கிடத்தி'' [திருவாய் 9-2-3] என்கிற பாட்டிலே எம்பெருமானைத் திருப்பள்ளியுணர்த்தி எழுப்பி அடிமைசெய்யப் பாரித்தாரன்றே. ஆகையாலே இவரும் நம்மாழ்வார், ஆண்டாள், விஶ்வாமித்ரர் ஆகியவர்களைப்போலே பெரியபெருமாள் பள்ளியுணருமபோது பிரகாஶிக்கும் அழகு கண்டு அடிமை செய்ய ஆசைப்பட்டு, திருப்பள்ளியெழுச்சி பாடுகிறார்.

இவ்வாழ்வார் எம்பெருமானை நிர்பந்தப்படுத்தித் திருப்பள்ளியுணர்த்துவதற்குக் காரணமென்னவெனில்: ''ஆம்பரிசறிந்துகொண்டு'' [திருமாலை 38] என்கிறபடியே – எம்பெருமான் உகந்த கைங்கர்யமே பேறு'' என்னும் உண்மையை அறிந்தவராகையாலே

---

c ஆனாலும் நிர்ப்ப3ந்தி4த்து எழுப்புகைக்கு நிப3ந்த4நமேதென்ன ஶங்காபூர்வகமாக அருளிச்செய்கிறார். (திருப்பள்ளி இத்யாதி3)

"நான்முற்பட்டேன் நான்முற்பட்டேன்" என்று முற்கோலிக் கொண்டுவந்து நின்றார்கள்; ஸர்வரக்ஷகராய், ஸ்ரிய:பதியாய் ஆஸ்ரிதவத்ஸலராய், ஸர்வஸமாஸ்ரயணீயரான தேவரீர் அடியேனுக்காக உணர்ந்தருளினீரென்கிற தரத்தை அடியேனுக்குத்

---

கர்யயாதூாத்ம்யமறியுமவராகையாலே, 6. ''अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते'' (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்₃ரதஸ் ஸ்வபதஶ்ச தே) ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி'' என்கிறபடியே-ஸர்வதே₃ஶ ஸர்வகால ஸர்வாவஸ்தை₂களிலும் ஸர்வவித₄கைங்கர்யத்தையும் பண்ணுமிடத்தில் ''தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே'' என்று அவனுகந்த கைங்கர்யமாகவேணும்; அதுசெய்யுமிடத்தில் 7.''क्रियतामिति मां वद'' (க்ரியதாமிதி மாம் வத₃) என்றும், ''எனக்கேயாட்செய்'' என்றும், ''முகப்பேகூவிப் பணிகொள்ளாய்'' என்றும் சொல்லுகிறபடியே - ஏவிக்கொள்ளவேணுமென்றிருக்குமவராகையாலே ப்ரபோ₄தஸூசகங்களைச் சொல்லித் திருப்பள்ளியுணர்த்துகிறார்.

---

6. ப₄வாம்ஸ்து ஸஹவைதே₃ஹ்யா கி₃ரிஸாநுஷு ரம்ஸ்யதே |
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்₃ரதஸ் ஸ்வபதஶ்ச தே ||
[ரா-அ 31-25]

[நீர் வைதே₃ஹியுடன் கூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர்; அடியேன் நீர் விழித்துக்கொண்டிருக்கும்போதும் தூங்கும்போதும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்.] என்றும், "ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி" [திருவாய் 3-3-1] என்றும் சொல்லுகிறபடியே எல்லா, தேசங்களிலும், எல்லாக்காலங்களிலும், எல்லா நிலைகளிலும், எல்லாவிதமான கைங்கர்யங்களையும் பண்ணும் போது "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" [திருவாய் 2-9-4] என்று அவன் உகந்த கைங்கர்யம் செய்யவேண்டும்; அதுசெய்யும்போது 5வது பக்கத்திலுள்ள * 3 ப்ரமாணத்தின்படியும், "எனக்கேயாட்செய்" [திருவாய் 2-9-4] "முகப்பேகூவிப் பணிகொள்ளாய்" [திருவாய் 8-5-7] என்னும் பாசுரங்களின்படியும் எம்பெருமான் நியமித்துக் கைங்கர்யம் கொள்ளவேண்டும் என்றிருக்கிறவராகையாலே அவனுடைய நியமனத்தைப் பெறுவதற்காக, 'பொழுது விடிந்து விட்டது' என்பதற்கு அறிகுறிகளைச் சொல்லித் திருப்பள்ளியுணர்த்துகிறாராகையாலே இதில் நிர்ப்பந்தம் ஏதுமில்லை.

தந்தருளித் திருப்பள்ளியுணர்ந்து அடியோங்களடிமை கொண்டருள வேணுமென்கிறுர். ப்ரஜைகளைக்காட்டி ஜீவநம் வேண்டு

---

திருமாலையில் திருப்பள்ளியெழுச்சிக்கு வாசியென்னென்னில்; அநாதிமாயயா ஸுப்தரான இவரைப் பெரிய பெருமாளுணர்த்தினுர் அதில்; இவர் தம்பக்கல் வ்யாமோஹத்தாலே ஸுப்தரான அவரைத் திருப்பள்ளியுணர்த்துகிறுர். இதில். ''புன்கவிதையேலுமெம்பிராற்கினியவாறே'' என்று வாசிக கைங்கர்யத்தை இனிதாகக் கைக்கொண்டபடி சொல்லிற்று. அதில்; ''தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடியென்னும் அடியனை அளியனென்றருளி'' என்கையாலே காயிககைங்கர்யத்தை இனிதாகக் கைக்கொண்டருளவேணுமென்கிறது இதில். ''எம்பிராற்கினியவாறே'' என்று பெரியபெருமாளுக்கினிதான கைங்கர்யத்தைப் பெற்று நின்றுர்-அதில்; ''அடியார்க்காட்படுத்தாய்'' என்று-ததீய

---

**திருமாலையைக் காட்டிலும் திருப்பள்ளியெழுச்சிக்கு ஏற்றமென்ன? எனில் 18வது பக்கத்திலுள்ள 1* ப்ரமாணத்தின்படி அநாதிகாலமாக உறங்கிக்கிடந்த இவரைப் பெரிய பெருமாள் உணர்த்தினுர் திருமாலையில்; இத்திருப்பள்ளியெழுச்சியில், இவ்வாழ்வார் தம்மிடம் பெரும் காதலாலே உறங்கிய பெரிய பெருமாளைத் திருப்பள்ளியுணர்த்துகிறுர். ''இளைய புன்கவிதையேலும் எம்பிராற்கு இனியவாறே'' [திருமாலை-45] என்று வாயால் செய்யும் கைங்கர்யத்தைப் பெரிய பெருமாள் இனிதாக ஏற்றுக்கொண்டபடியைச் சொன்னுர் திருமாலையில்; ''தொடை ஒத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப் பொடியென்னும் அடியனை அளியனென்றருளி'' [திருப்பள்ளி 10] என்று அருளிச்செய்கையாலே உடலால் செய்யும் கைங்கர்யத்தை இனிதாக ஏற்றுக் கொள்ளவேணும் என்று ப்ரார்த்திக்கிறுர் இத்திருப்பள்ளியெழுச்சியில். ''எம்பிராற்கு இனியவாறே'' [திருமாலை 45] என்று பெரியபெருமாள் உகந்த கைங்கர்யத்தைப் பெற்று நின்றுர் திருமாலையில்; ''அடியார்க்காட்படுத்தாய்'' [திருப்பள்ளி 10] என்று அவன் அடி**

வாரைப்போலே ஆராத₄கரான தே₃வஜாதியை முன்னிட்டுக் கொண்டு ஸ்வப்ரயோஜனத்தை அபேக்ஷிக்கிறார்.

ருகந்த கைங்கர்யத்தை அபேக்ஷிக்கிறார்-இதில் அதில் பெரியபெருமாளுடைய க்ருஷியைச் சொல்லிற்று; இதில் அவருடைய க்ருஷி ப₂லித்தபடியைச் சொல்லுகிறது. ''எளியதோரருளுமன்றே யென்திறத்து'' என்று தம்மை விஷயீகரிக்கவேணுமென்றார் அதில்; ''அவர்க்கு நாளோலக்க மருள'' என்று பரஸம்ருத்₃தி₄யை ஆஶாஸிக்கும்படியாகப் பாகம் பிறந்தபடி சொல்லுகிறது இதில்.

யார்கள் உகந்த கைங்கர்யத்தைப் பிரார்த்திக்கிறார் இத்திருப்பள்ளி யெழுச்சியில். திருமாலையில் பெரியபெருமாள் இவரை அடைய முயன்றபடியைச் சொல்லிற்று; திருப்பள்ளியெழுச்சியில் பெரிய பெருமாளுடைய முயற்சி ப₂லித்து இவரைப் பெற்ற படியைச் சொல்லுகிறது. ''எளியதோரருளுமன்றேயென் திறத்து'' [திருமாலை 37] என்கிறபடியே தம்மைக் கடாக்ஷிக்கவேண்டுமென்று ஆழ்வார் திருமாலையில் பிரார்த்தித்தார்; ''அவர்க்கு நாளோலக்க மருள'' [திருப்பள்ளி 9] என்று பிறரைக் கடாக்ஷிக்க வேண்டு மென்று பிரார்த்திக்கும் படியான பரிபக்குவநிலை தமக்குத் பிறந்த படியைச் சொல்லுகிறார் ஆழ்வார் இத்திருப்பள்ளியெழுச்சியில். இவை திருமாலையைக் காட்டிலும் திருப்பள்ளியெழுச்சிக்குள்ள சிறப்புக்கள்.

இத்திருப்பள்ளியெழுச்சியின் ஸாரார்த்தமாவது:— ''ஸூர்யன் உத₃யகிரி₃யில் எழுந்தான்; திருவாராத₄நத்திற்குரிய எல்லா உப கரணங்களையும் கையில் கொண்டு, தங்களை ஆராதி₄க்கத் தக்க வர்களாக அஹங்காரங்கொண்டிருக்கும் தேவர்களும், அரசர்களும் தங்கள் அஹங்காரம் நீங்கப்பெற்று, பெரியபெருமாளுடைய கடா க்ஷம் விழக்கூடிய தெற்குத் திக்கில் முதல் கடாக்ஷத்தைப் பெறு வதற்காக 'நான்முந்தி நான்முந்தி' என்று ஒருவர்க்கொருவர் முற் பட்டுக்கொண்டு வந்து நின்றார்கள்; அனைவரையும் ரக்ஷிப்பவ ராய், லக்ஷ்மீநாத₂ராய், அடியார்களிடம் பேரன்புடையவராய், அனைவராலும் ஆஶ்ரயிக்கத் தக்கவரான தேவரீர், அடியேனுக்காக உணர்ந்தருளினீர் என்கிற பெருமையை அடியேனுக்குத் தந்தருளி, திருப்பள்ளியுணர்ந்து அடியோங்களை அடிமை கொண்டருள வேணும்'' என்கை. குழந்தைகளைக்காட்டி ''எங்களுக்கு வாழ்வழி செய்யவேண்டும்'' என்று அரசரைக் கேட்கும் குடிமக்களைப் போலே, எம்பெருமானுக்கு ஆராத₄னம் செய்யும் தேவர்களை முன் னிட்டுக்கொண்டு, தமக்குப் பேறான கைங்கர்யத்தைப் பிரார்த்திக் கிறார் ஆழ்வார் இத்திருப்பள்ளியெழுச்சியில்.

1. கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே.

பதவுரை — அரங்கத்து அம்மா — திருவரங்கத்தில் பள்ளி கொண்டருளும் ஸ்வாமியே! கதிரவன் — ஸூர்யனானவன், குணதிசை — கிழக்குத் திக்கிலே, சிகரம் — (உதயகிரியின்) உச்சியிலே, வந்து அணைந்தான் — வந்து கூடினான்; கன இருள் — (இரவில்) மிகுந்திருந்த இருளானது, அகன்றது — நீங்கியொழிந்தது; அம் — அழகிய, காலை பொழுது ஆய் — காலைப்பொழுது வர, மா மலர் எல்லாம் — சிறந்த புஷ்பங்களெல்லாம், விரிந்து — மலர்ச்சிபெற்று, மது ஒழுகின — தேன் பெருக்குகின்றன; வானவர் — தேவர்களும், அரசர்கள் — ராஜாக்களும், வந்து வந்து — ஒருவர்க்கொருவர் முற்கோலி வந்து, ஈண்டி — திரண்டு, எதிர்திசை — திருக்கண்ணோக்குக்கு விஷயமான தெற்குத்திக்கிலே, நிறைந்தனர் — நிறைந்து நின்றார்கள்: இவரொடும் புகுந்த — இவர்களோடுகூடவந்த, (இவர்களது வாஹநங்களாகிய) இரு களிறு ஈட்டமும் — பெரிய ஆண்யானைத் திரள்களும், பிடியொடு — பெண்யானைத் திரள்களும் முரசும் — பே₄ரிவாத்₃யங்களும், அதிர்தலில் — ஶப்₃தி₃க்கும்போது, எங்கும் — எத்திசையும், அலை — அலையெறியா நின்ற, கடல் போன்று உளது — ஸமுத்₃ர கோ₄ஷத்தை ஒத்திருந்தது; (ஆதலால்) பள்ளி எழுந்தருளாய் — திருப்பள்ளியைவிட்டு எழுந்திருக்கவேணும்.

அவ:--முதற்பாட்டு. 3* "यस्यावताररूपाणि नमस्यन्ति दिवौकसः (யஸ்யாவதாரரூபாணி நமஸ்யந்தி தி₃வௌகஸ:) என்னும்

---

அவ:— முதற்பாட்டு (கதிரவனித்யாதி₃) ஆதி₃த்யனானவன் தன் ஸ்வரூபஸித்₃தி₄க்காக விளக்காய் வந்து தோற்றினான்; அவனைக் குசலப்ரஶ்நம் பண்ணவேண்டாவோ? என்கிறார். "வெய்யகதிரோன் விளக்காக" என்றாரிறே. "நாட்டையெல்லாமெழுப்புகிற ஆதி₃த்யனுதி₃த்தால் எங்களாதி₃த்யனுதி₃க்கவேண்டாவோ? பா₃ஹ்யமான அந்த₄காரமிறே அவனாலே போக்கலாவது; ஆந்தரமான அந்த₄காரம் போக்கும்போது தேவரீருணர்ந்தருள வேண்டாவோ? ஆதி₃த்யன் உத₃யபர்வதத்தை வந்து அணையாநின்றான்; இருள் நீங்காநின்றது; ஸமாராத₄நோபகரணமான திருப்படித்தாமங்கள் விகஸிதமாகாநின்றன; ஆராத்₄யர் தேவரீரென்று ஆராதி₄ப்பாரெல்லாரும்தந்தாம் பரிகரங்க

---

அவ:— "ஸூர்யன் தான் ஸத்தை பெறுவதற்காக வெளியிருளைப் போக்கும் விளக்காய் வந்து உதித்தான். உன் அடியனான அவனை க்ஷேமம் விசாரிக்க வேண்டாவோ?" என்கிறார். "வெய்ய கதிரோன் விளக்காக" [முதல் திருவ 1] என்று பொய்கையாழ்வாரும் ஸூர்யனை விளக்காக அருளிச்செய்தாரன்றோ. "உலகனைத்தையும் எழுப்புகிற ஸூர்யன் உதித்தால் எங்களை யெழுப்பும் ராம திவாகரனாகவும், அச்யுதபாநுவாகவும்ருக்கிற தேவரீர் உதிக்கவேண்டாவோ? வெளியிருளையன்றோ அவன் ஒழிக்க முடியும்; எங்களுடைய உள்ளிருளைப் போக்குவதற்கு தேவரீரே உணரவேண்டாவோ? ஸூர்யன் உதயகிரியின் மேல் எழுந்தான். இருள் நீங்குகின்றது; தேவரீரை ஆராதிப்பதற்கு உறுப்பான அழகிய மலர்கள் மலர்கின்றன.

3* யஸ்யாவதாரரூபாணி நமஸ்யந்தி தி₃வௌகஸ:|
அபஶ்யந்த: பரம் ரூபம்

[எந்தப்பரமபுருஷனுடையபரவாஸுதேவரூபத்தைக்காணமாட்டாமல் தேவர்கள் அவனுடைய அவதாரரூபங்களை நமஸ்கரிக்கிறார்களோ] என்கிறபடியே தேவரீரை ஆராதிக்கும் தேவர்கள் ஆராதிக்கப்படுமவர் தேவரீராகையாலே, தங்கள் பரிஜனங்கள் வாஹ

படியே ஆராதகரான தேவஜாதிகள் அவஸரப்ரதீக்ஷராய் வந்துநின்றார்கள். திருப்பள்ளியுணர்ந்தருளவேணும் என்கிறார்.

வ்யா:—(கதிரவனித்யாதி) தன்னுடைய ஆயிரம் கிரணங்களாலும்ஜகத்தில் அந்தகாரத்தை நீக்கி வெளிச்செறிப்பைப் பண்ணவல்ல ஆதித்யனானவன், கிழக்கிலே உதயகிரியிலே வந்து ஸங்கதனானான். அவனுக்கடுத்தாப்போலே கோயிலாய்த்துக்

ளோடே வந்தார்கள். இத்தையெல்லாமுடைய தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளி விசேஷகடாக்ஷம் பண்ணியருள வேணுமென்கிறார்

வ்யா:- (கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்) கண்வளர்ந்தருளுகிற தேவரீருக்கு ப்ராதஃகாலத்திலே ஸந்த்யாதீபங்கொண்டு வருவாரைப்போலே, திநகரனானவன் தன் கிரணங்களெல்லாவற்றோடும் கீழ்திக்கில் உதயகிரியை வந்தணையாநின்றான். உ "கதிரவரவரவர் கைந்நிரை காட்டினர்" "நாரணன் தமரைக்கண்டுகந்து" என்று தேவரீருடையார் அர்ச்சிராதிகதியே போய்போது, ஆதிவாஹிகர் தந்தாம் பதங்கள் நிலைநிறுகைக்காக,

நங்கள் வாத்தியங்கள் முதலானவற்றோடு வந்தார்கள். தேவரீர் திருப்பள்ளியுணர்ந்து இவற்றையெல்லாம் கடாக்ஷித்தருளவேண்டுமென்கிறார் முதற்பாட்டில்.

வ்யா:— (கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்) கண்வளர்ந்தருளும் தேவரீருக்குக் காலை வேளையில் ஸந்த்யாதீபம் கொண்டு வருவாரைப்போலே; ஆயிரம் கிரணங்களையுடைய ஸூர்யன் தன் கிரணங்களனைத்தோடும் உலகவிருளை நீக்கிக் கொண்டு கிழக்கிலே உதயகிரியில் தோன்றினான். உம்திருவடிப் பக்கத்திலே திருவடிக்குற்றேவல் செய்யத் தோன்றினதுபோலே உள்ளது. "கதிரவரவரவர் கைந்நிரை காட்டினர்" [திருவாய் 10-9-4] "நாரணன் தமரைக்கண்டுகந்து" [திருவாய் 10–9–2]என்கிறபடியே தேவரீருடைய அடியார்கள் அர்ச்சிராதிகதியில் வழி நடக்கும் போது ஆதித்யன் முதலான ஆதிவாஹிகர்கள் தம்முடைய பதவிகள் நிலை

அரு:— முதற்பாட்டு. (கதிரவனித்யாதி) உ ஆதித்யனுக்கு உதயாஸ்தமநம் ஸ்வபாவமன்றோ? நமக்குக்கிஞ்சித்காரமாக் கொள்கிறதெப்படி? என்ன அருளிச்செய்கிறார் (கதிரவர் அவரவர்

காணும்; திருவடிகளும் அத்தி$_3$க்கிலேயாகப்பெற்றது; அடியிலும் முடியிலும் ஆதி$_3$த்யர்கள் வந்து நிற்க, நடுவே கிடந்து கண் வளர்ந்தருளுகிறதென்? "கதிராயிரமிரவிகலந்தெரித்தாலொத்த நீண்முடி"யிறே. "மிக்கசெஞ்சுடர்ப்பரிதி"என்னக்கடவதிறே.

---

தேவரீருடையார்க்குத் b தரங்கொடுத்த c விளக்குடையாரோபாதி விளக்குப் பிடிக்கிறவர்கள் வகுத்த விஷயத்தில் கிஞ்சித்கரியாதிரார்களிறே. கண்வளர்ந்தருளுகிற தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளுவதெப்போதோவென்று அவஸர ப்ரதீக்ஷையாய், 8. "भीषोदेति सूर्यः" (பீ$_4$ஷோதே$_3$தி ஸூர்ய:) என்கிறபடியே கீழ்திக்கில் உத$_3$யகி$_3$ரியிலே வந்து தோன்றினான். குன்றத்திட்டவிளக்காக உத$_3$யபர்வதத்தினருகே ஊரையும் சோலையையும் கண்வளர்ந்தருளுகிறபடியையும் காண்கையிலுண்டான ஆசைப்பாடு தோன்ற வந்துகொடு நின்றான்.

---

நிற்பதற்காக உம் அடியார்களுக்கு விளக்குப் பிடிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் போலே கைங்கர்யம் செய்தே பேருவர்களன்றோ. அதுபோலவே

8. பீ$_4$ஷாऽஸ்மாத்$_3$ வாத: பவதே| பீ$_4$ஷோதே$_3$தி ஸூர்ய:||
பீ$_4$ஷாऽஸ்மாத$_3$க்$_3$நிஶ்சேந்த்$_3$ரஶ்ச| ம்ருத்யுர் த$_4$ாவதி பஞ்சம:||
[தைத்-ஆந 8-1]

[இந்தப் பரமபுருஷனிடத்தில் ப$_4$யத்தாலேயே காற்று அடிக்கிறது. (இவனிடத்தில்) ப$_4$யத்தாலேயே ஸூர்யன் உதி$_3$க்கிறான்; அக்$_3$னியும், இந்திரனும், ஐந்தாமவனான ம்ருத்யுவும் இவனிடத்தில் ப$_4$யத்தினாலேயே தங்கள் காரியத்தைச் செய்கிறார்கள்.] என்கிறபடியே ஸ்வாமியான தேவரீர் பள்ளியுணரும் பொழுதை எதிர்நோக்கிக்கொண்டு கீழ்த்திக்கிலே உத$_3$யகி$_3$ரியிலே ஆதி$_3$த்யன் வந்து தோன்றினான். மலையிலிட்ட விளக்காக உத$_3$ய பர்வதத்தையொட்டி இருக்கும் திருவரங்கம் பெரிய கோயிலையும், சோலையையும் தேவரீர் கண் வளர்ந்தருளும் அழகையும் காண்பதில் உண்டான ஆசை விளங்கும்படியாக வந்து நின்றான். "கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடி" [பெரியாழ் திரு 4-1-1] "மிக்க செஞ்சுடர்ப் பரிதி சூடி" [திருவாசிரியம்-1] என்கிறபடியே முடியிலே ஆயிரம் ஸூர்யர்களுடைய ஒளியுடைய கிரீடமாகிற ஆதி$_3$த்யனும், அடியிலே உலகில் இருள் நீக்கும் ஆதி$_3$த்யனும் வந்து நிற்க, நடுவே கிடந்து கண்ணுறங்கலாமோ? என்று நஞ்ஜீயர் அருளுவர்.

---

இந்த்$_3$ராதி$_3$) b (தரம்) ப$_3$ஹுமானம். c (விளக்குடையார்) கை விளக்குப் பிடிக்கிறவர்கள்.

(கனவிருளகன்றது) ராத்ரியில் மிக்க இருளானது ஸவாஸந மாகப் போய்த்து. (காலையம்பொழுதாய்) ஆராத₄கர் ஆராத₄

---

(கனவிருளகன்றது) ஆதி₃த்யன் வரவுக்குத் தக்கபடியே-செறிந்த இருளானது குறையவாங்கிற்று. "இருள் வீற்றிருந்தது பார் முழுதும்" என்கிறபடியே ராஜாஜ்ஞையை ப₄ங்கி₃த்து வன்னியர் குறும்பு செய்யுமாபோலே, ஸாம்ராஜ்யம் பண்ணிற்று. மதிப்பனுன ராஜா ஸபரிகரனுய் எடுத்துவிட்டவாறே ஒரு பயணங் குறையவாங்குமாபோலே இருட்டும் ஒரு பயணம் குறைய வாங்கிற்று. (காலையம் பொழுதாய் மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்) இருட்டுப் போய் நின்றவளவிலே, 9. "ब्राह्मे मुहूर्ते चोत्थाय" (ப்₃ராஹ்மே

---

(கனவிருளகன்றது) இரவில் மிகுந்திருந்த இருளானது அடியோடு போயிற்று. மிகவும் செறிந்திருந்த இருளானது ஸூர்யன் உதிக்கத் தொடங்கியவுடன் குறையத் தொடங்கிற்று என்றும் கொள்ளலாம். "இருள் வீற்றிருந்தது பார்முழுதும்" [திருவிருத்தம்–13] என்கிறபடியே அரசனின் ஆணையை மீறி அரசுக்கு விரோதிகள் குறும்பு செய்வது போலே, செங்கோல் செலுத்தி வந்த இருள்-ப₃லமுடைய அரசன் ஸேனைகளோடு படையெடுத்து வந்தவுடன் குறும்பு செய்தவர்கள் பின்வாங்குவது போலே தானும் பின்வாங்கிற்று என்று கருத்து. (காலையம் பொழுதாய்) ஆராதி₄ப்பவர்கள் ஆராத₄னத்திற்குத் தொடங்கும் காலம் வந்து விட்டது. (மது விரிந்தொழுகின மாமலரெல்லாம்) ஸூர்யோத₃யத்தின் பயனுக ஆராதி₄ப்பதற்கு உதவிபுரியும் பூக்கள் மலர்ந்து தேன் வெள்ளம் பெருகநின்றன. (காலையம் பொழுதாய் மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்) இருட்டுப் போனவுடன்

9. ப்₃ராஹ்மே முஹூர்த்தே சோத்தா₂ய சிந்தயேதா₃த்மநோ ஹிதம் |
ஹரிர் ஹரிர் ஹரிரிதி வ்யாஹரேத்₃ வைஷ்ணவ: புமாந் ||
[பராஶரஸ்ம்ருதி]

[வைஷ்ணவனுன புருஷன் விடியற்காலவேளையில் எழுந்து தனக்கு நன்மையைச் சிந்திக்கக்கடவன்; "ஹரி: ஹரி: ஹரி:"

நார்த்த₂மாக உத்₃யோகிக்கக்கட வ காலமாய்த்து. (மதுவிரிந் தொழுகின மாமலரெல்லாம்) உத₃யபடலமாக ஆராத₄நோபகர ணமான புஷ்பங்கள் விகஸிதமாய் மது₄வெள்ளமிடாநின்றன.

---

முஹூர்த்தே சோத்த₂ாய) ''சிற்றஞ் சிறுகாலே'' என்கிற படியே ஸமாராத₄நயோக்₃யமான அழகிய காலமாய், அக் காலத்திலே, தே₃ஶாந்தரம்போன ப₃ந்து₄க்கள் வாரா நின்றார்களென்றறிந்தவாறேஸ்வதே₃ஶத்திலிருந்த ப₃ந்து₄க் கள் முகமலருமாபோலே, இவ்வெயிற்கொழுந்து தாமரைப் பூக்களை வந்தணுவும்படியான d காலவண்ணிமையாலே பூக் கள் ஸ்மிதம் பண்ணினவாறே, பூக்களினுடைய செறிவு நெகிழ, சி₂த்₃ர(ஓட்டை)ங்களாலே பூவில் தேன்களுடைய ஒழுகா நின்றன. மாமலர்—பெரியமலர். ''மாமலரெல்லாம்'' என்கையாலே புஷ்பஜாதிக்கெல்லாம் உபலக்ஷணம். (மது விரிந்தொழுகின) மது₄ வெள்ளமிடா நின்றது.

---

என்று மூன்று தடவை சொல்லக்கடவன்.] என்றும், ''சிற்றஞ் சிறுகாலே'' [திருப்பாவை-29] என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானுக்குத் திருவாராத₄னம் செய்வதற்கு அழகிய கால மாய், அக்காலத்திலே வெளியூர்போன உறவினர்கள் வருவதை அறிந்தவுடன் உள்ளூரிலிருக்கும் உறவினர்களின் முகம் மலர்வது போலே, முதல் நாள் மறைந்த ஸூர்யகிரணங்கள் தாமரைப் பூக்களை வந்தடைந்தவுடன் அப்போதே பூக்கள் சிரிப்பது போலே மலர்ந்தன. குவிந்திருந்த பூக்கள் விரிந்தவுடன் அந்த இடைவெளிவழியாகப் பூக்களிலுள்ள தேன்கள் ஒழுகா நின்றன. மாமலர்—பெரியமலர். 'மாமலரெல்லாம்' என்கையாலே முல்லை, மல்லிகை, செண்பகம், இருவாட்சி முதலிய எல்லா வகையான பூக்களையும் உபலக்ஷண முறையாலே காட்டுகிறது. (மதுவிரிந் தொழுகின) தேன் வெள்ளமிடா நின்றது.

---

d (அண்ணிமை) ஸாமீப்யம்.

(வானவரித்யாதி3) து3ர்மாநிகளான தே3வர்களும், ராஜாக்களும் ப4க்3நாபி4மாநராய், தந்தாமுடைய ப2லஸித்3தி4க்கும் அபந்நிவ்ருத்திக்குமுடலாக ஒருவர்க்கொருவர் முற்கோலித் திரண்டனர். (எதிர்திசையித்யாதி3) திருக்கண்ணோக்கான

---

(வானவரித்யாதி3) ஆராத4கரான தே3வர்களும் ராஜாக்களும் தந்தாம் பத3ப்4ரம்ஶம் வாராமைக்கு இதுவே யாத்ரையாக ஆராத்4யரான தேவரீரைத் திருவடித் தொழுகையிலுண்டான த்வரையாலே முற்பட்டார் முற்பட்டபடி ஒருவரிருவராய் வந்து திரண்டு ● திக்குகளெங்கும் நிறையப் புகுந்தார்கள். திருக்கண்ணோக்கிலும், அல்லாத திக்குகளெங்கும் நிறைந்தார்களென்னவுமாம்; தேவரீருடைய பரிகரமென்னில் இங்ஙனே இருக்கவேண்டாவோ? (இவரொடுமித்யாதி3) இவர்களுடனேவந்த பெரிய யானைத்

---

(வானவரரசர்கள் வந்து வந்தீண்டி) தாங்கள் ஆராதி4க்கத்தக்கவர்கள் என்று அஹங்காரம் கொண்டிருந்த தே3வர்களும் அரசர்களும் அவ்வஹங்காரம் நீங்கப்பெற்று, தம்முடைய பதவிகள் போகாமலிருப்பதற்கும், விருப்பங்கள் நிறைவேறுவதற்கும், ஆபத்துகள் நீங்குவதற்கும் உறுப்பாக, "இவர்களுக்கு இதுவே யாத்திரையோ?" என்று தோன்றும்படி, ஆராதி4க்கப்படும் தேவரீரை வணங்குவதிலுள்ள வேக3த்தாலே ஒருவர்க்கொருவர் முந்திக்கொண்டு ஒருவர் இருவராக வந்து கூடி எல்லா திக்குகளும் நிறையும்படி புகுந்தார்கள். "எதிர்திசை" என்று கடாக்ஷத்திற்கு விஷயமான தெற்குத்திக்கைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். ஒன்றுக்கொன்று எதிரான எல்லா திசைகளையும் சொல்லுவதாகவும் கொள்ளலாம். ஸர்வலோக சக்ரவர்த்தியான எம்பெருமானுடையபரிஜனங்களாகையாலே திக்கெங்கும் நிறைந்தனர் என்பது சொல்லாமலே விளங்கும். (இவரொடும் புகுந்த இருங்களிற்றீட்டமும் பிடியொடு) இவர்களுடன் வந்த இவர்களுடைய வாஹனமாகவும் ஸேனையாகவும் இருக்கும் பெரிய ஆண் யானைத்திரள்களும், அவற்றைப் பிரியமாட்டாத

---

● "எதிர்திசை" என்று முழுச்சொல்லாய், திக்குக்களெங்குமென்னுதல்.

தெற்கு திக்கிலே விவரமறப் புகுந்துநின்றார்கள். (இவரொடும் புகுந்தவித்யாதி) இவர்கள் ஏறும் வாஹனங்களான களிறுகளும் பிடிகளும் முரசினுடைய த்வனிகளுமாய்த் திரண்டு

---

திரள்களும் இனம்பிரியாத பிடிகளுமாய்; f ஸ்ரீரங்கமிறே. வாத்யகோஷங்களும், இந்த ஸமுதாயமாக முழங்குகிற முழக்கமானது, உறங்குகிற பிள்ளைகளை ஒருவகைகளாலே எழுப்புமாபோலே வாத்யகோஷங்களாலே திருப்பள்ளியுணரும்படி. (அதிர்தலில்) இப்படி கோஷிக்கையில் ''குமுறுமோசைவிழவொலி'' என்னுமாபோலே இந்த ஸமுதாயகோஷமானது-சந்த்ரோதயத்தில் கடல்போலே கிளர்ந்தது. பெரும்புறக்கடலான தேவரீர் உணரவேண்டாவோ? g உபயவிபூதியுக்தரான தேவரீர் திருப்பள்ளி

---

பெண்யானைத் திரள்களும்; ஸ்ரீரங்கநாதனைப் பிரிய மாட்டாத ''ஸ்ரீ'' ஆகிய ஸ்ரீரங்கநாச்சியார் வாழும் ஸ்ரீரங்கமன்றோ இது. (பிடியொடு முரசும் அதிர்தலில்) இந்த யானைகளின் முழக்கங்களும், முரசங்களின் முழக்கங்களும் ஒன்றுசேர்ந்து முழங்குவதைப்பார்த்தால், உறங்குகிற பிள்ளைகளைப் பாட்டுப்பாடி எழுப்புவதுபோலே, பெரிய பெருமாளையும் இந்த முழக்கங்களாலே திருப்பள்ளியுணர்த்துவது போல் உள்ளது. (அதிர்தலில் அலைகடல் போன்றுளதெங்கும்) இப்படி முழங்குகையால், ''குமுறுமோசை விழவொலி'' [திருவாய் 6-5-2] என்கிறபடியே இந்தயானைகளின் கோஷமும், முரசங்களின் முழக்கமும் சந்திரன் உதித்தவுடன் கடல் கிளர்ந்து ஒலித்தது போலேயிருந்தது. ''பெரும்புறக்கடல்'' [பெரிய திரு 7-10-1] என்று சொல்லப்படும் தேவரீர் இம்முழக்கத்தைக் கேட்டு எழ வேண்டாவோ? (அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே) ''பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்'' [நாச்-திரு 11-3] என்கிறபடியே இங்கிருந்துகொண்டு உபயவிபூதியையும் செங்கோல் செலுத்துகிற தேவரீர் வேறுபுகலற்ற அடி

---

f ஆனைகள் பிடிகளோடே வருவானென்னென்ன அருளிச்செய்கிறார் (ஸ்ரீரங்கமிறே) என்று; பிராட்டியிருக்கிற ஸ்தலமாகையால் தாங்களும் பிடிகளோடே வருகின்றன என்றபடி.

g ''அரங்கத்தம்மா'' என்று இங்குத்தைக்கு நிர்வாஹம். 1.

2. கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளன்னம்
ஈன்பனி நனைந்தத மிருஞ்சிற குதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயி றுறவதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய வானையி னருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே.

பதவுரை:— குணதிசை மாருதம்—கிழக்குக் காற்றானது, கொழு கொடி—செழுமை தங்கிய கொடியையுடைத்தான, முல்லையின் — முல்லைச் செடியிலுண்டான, கொழு மலர்—அழகிய மலர்களை, அணவி—அளைந்துகொண்டு, இதுவோ—இதோ, கூர்ந்தது — மிகவும் வீசாநின்றது; மலர் அணை—பூம்பள்ளியில், பள்ளி கொள் — உறங்குகின்ற, அன்னம்—ஹம்ஸங்களானவை, ஈன் பனி நனைந்த — (மழைபோலே) சொரிகிற பனியாலே நனைந்த, தம் — தங்களுடைய, இரு சிறகு — அழகிய இறக்கைகளை, உதறி — உதறிக்கொண்டு, எழுந்தன—உறக்கம் விட்டெழுந்தன, விழுங்கிய—(தன் காலை) விழுங்கின, முதலையின் — முதலையினுடைய, பிலம் புரை—பாழிபோன்ற, பேழ்வாய்—பெரியவாயிலுள்ள, வெள்

நெருங்கிநின்று த்₄வநிக்கிற த்₄வநியானது அலையெறியாநின்ற ஸமுத்₃ரத்தின் கோ₄ஷம்போலே எங்கும் கோ₄ஷியாநின்றது.

(அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே) உப₄யவிபூ₄திநாத₂த்வம் தோற்றச்செங்கோலுடையதிருவரங்கச் செல்வரான தேவரீர் அநந்யக₃தியான அடியேனுக்காகத்திருப்பள்ளியுணர்ந்தருளி அடிமை கொண்டருள வேணுமென்கிறார். 1.

யுணர்ந்து இவர்களுக்கு முகங்கொடுத்தருளி, அடிமை கொண்டருளவேணுமென்று கருத்து. 1.

யேனுடைய ப்ரார்த்த₂னைக்காகத் திருப்பள்ளியெழுந்து இவர்களைக் கடாக்ஷித்து அடிமை கொண்டருள வேணும் என்று கருத்து. 1.

எயிறு உற — வெளுத்த கோரப்பற்கள் ஊன்ற, அதன் — அம்முதலையினுடைய, விடத்தினுக்கு — பல்விஷத்திற்கு, அனுங்கி அழுங்கிய — மிகவும் நோவுபட்ட, ஆனையின் — கஜேந்திராழ்வானுடைய, அரு துயர் — பெரிய துக்கத்தை, கெடுத்த — போக்கியருளின, அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய் —.

அவ:- இரண்டாம் பாட்டு. போதுவிடிந்தமைக்கு அடையாளமான கீழ்க்காற்றும், புஷ்பஶாயிகளான அன்னங்களினுடைய ப்ரபோ₃த₄நமுமுண்டாயிற்று; ஆஶ்ரிதவத்ஸலரான தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளவேணுமென்கிறார்.

வ்யா:— (கொழுங்கொடியித்யாதி₃) ஶ்ரத்₃தை₄யையுடைத்தான முல்லைச் செவ்வி மலரின் பரிமளத்தை அளைந்துகொண்டு

அவ:— இரண்டாம்பாட்டு. (கொழுங்கொடியித்யாதி₃) முல்லையின் பரிமளத்தை முகந்துகொண்டு கீழ்க்காற்றுவந்து தாமரைப்பூவில் கிடந்துறங்குகிற ஹம்ஸமிது₂னங்களைக் கிளப்பிற்றின; ஸ்ரீ க₃ஜேந்த்₃ராழ்வானுடைய விரோதி₄யையறுக்க அரைகுலையத் தலைகுலைய வந்து ரக்ஷித்தருளின தேவரீர் கண்வளர்ந்தருளுகிறதென்? திருப்பள்ளியுணர்ந்தருளவேணும் என்கிறார்.

வ்யா:— (கொழுங்கொடியித்யாதி₃) ஸஶ்ரத்₃த₄மான முல்லையினுடைய ஸஶ்ரத்₃த₄மான பூவையணவி, அல்லி

உ. அவ:— "முல்லைப் பூக்களின் மணத்தை முகந்துகொண்டு கீழ்க்காற்று வந்தது. தாமரைப் பூக்களில் கிடந்து உறங்குகின்ற ஹம்ஸமிது₂நங்களை இக்காற்று விழித்தெழச் செய்தது. போது விடிந்ததற்கான அடையாளமான இவை உண்டான பிறகும் மிக வேகமாக வந்து க₃ஜேந்த்₃ரனைக் காப்பாற்றிய தேவரீர் கண் வளர்ந்தருளலாமோ, பள்ளியெழுந்தருளவேணும்" என்கிறார்.

வ்யா:— (கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக் கூர்ந்தது குணதிசை மாருதமிதுவோ) செழுமையுடைய முல்லைக் கொடியினுடைய செழுமை நிறைந்த முல்லைப்பூக்களை அளைந்து

விடிகாற்றானது "நீங்களுறங்குகிறதென்?" என்று உணர்த்து வாரைப்போலே சூழ்ந்துகொண்டு முகங்களிலே அலையெறியா நின்றது; காலைப் பிடித்து உணர்த்துகிறபடி.

---

யுந்தாதும் அரும்புமான உ கந்தல்படாமே அருமிதியான மணத்தை வாங்கிக்கொண்டு "புது மாதவிமீதணவி" என்னுமாபோலே கீழ்த்திக்கில் காற்றானது கூர்ந்தது விஞ்சிற்று. கூருகையாவது-மிகுகை,

ஆதி₃த்யனுக்கு நேரே உறவான தாமரைப் பூவினுடைய விகாஸமேயன்றியே நிலத்தில் பூவான முல்லைப் பூவும் விகஸித்து, அதின் மணத்தைக் கொண்டு தேவரீரைத் திருப்பள்ளியுணர்த்துமாபோலே வந்துகொடு நின்றது. "இதுவோ" என்றது-ராஜாக்களுக்கு அந்தரங்க₃ரானவர்கள் வந்தவர்களைக் காட்டுமாபோலே பார்த்தருளீரென்கிறார். ஸ்பர்ஶேந்த்₃ரியக்₃ராஹ்யமானதை "இதுவோ"

---

கொண்டு காலைக்காற்றானது அப்பூவினுடைய அல்லியும், தாதும் அரும்புமான அக்கோதுகளைவிட்டு அதனுடைய ஸாரமான மணத்தை முகந்து "புது மாதவி மீதணவி" [திருவாய் 5-9-2] என்கிறபடியே கிழக்குத்திக்கிலிருந்து மிகுதியாக வீசிற்று. "இன்னமும் உறங்கலாமோ?" என்று உணர்த்துவாரைப்போலே காலைப்பிடித்து உணர்த்துகிறது. கூர்ந்தது—மிகுந்தது. சென்றபாட்டில் சொன்னபடி, ஸூர்யனுக்கு நேரே உறவான நீர்ப்பூவான தாமரைமாத்திரமல்லாமல், நிலத்தில் பூவான முல்லையும் மலரப்பெற்று, அதன் மணத்தை முகந்துகொண்டு தேவரீரைத்திருப்பள்ளியுணர்த்துவது போலே கீழ்க்காற்று வீசுகிறது. "இதுவோ" என்று அரசர்களுக்கு நெருங்கிய மந்திரிகள் முதலானோர் அரசர்களைக் காண வந்தவர்களைக் காட்டுவது போலே "இக்காற்றைக்கடாக்ஷித்தருள்வீர்" என்று காட்டுகிறார். தொடுவுணர்ச்சியை உணரும் த்வகி₃ந்த்₃ரியத்தாலே அறியப்படும் காற்றை "இதுவோ" என்கையாலே, காற்று எப்போதும் ஸஞ்சரிக்கும் தன் தன்மையை விட்டு, பெரியபெருமாளுக்குக் கைங்கர்யம் செய்வதற்காக நேரே நின்றது போலே இருக்கிறது.

---

அசு:— இரண்டாம்பாட்டு. (கொழுங்கொடியித்யாதி₃) a (கந்தல்) கல்மஷம்;

(எழுந்தன இத்யாதி₃) தாமரைப்பூவாகிற படுக்கையிலே பனியை மதியாதே படுக்கை வாய்ப்பாலே உறங்குகிற ஹம்ஸமிது₂நங்களானவை காலமுணர்த்த உணர்ந்தன. இத்தால் - அருமறை பயந்தவன்னத்தோடு ஸஜாதீயமான அன்னமெழுந்தன.

---

என்கையாலே - காற்று ஸததக₃தித்வம் தவிர்ந்து நின்றுப் போலேயிருக்கிறது.

(எழுந்தன மலரணையித்யாதி₃) இக்காற்று வீசினவாறே விடிந்ததாகாதேயென்று மலராகிற படுக்கையிலே பள்ளி கொள்ளுகிற ஹம்ஸமிது₂நங்களுணர்ந்தன. "பள்ளிகொள்" என்கிறது. உகந்தருளின நிலத்திலே உள்ளவையாகை யாலே உபசாரமாக வல்லது சொல்லாரிறே, "நபமில் சிறியாரில்லை இங்கு வர்த்திப்பாரில்" என்றிருப்பார்களே b பூம்படுக்கையிலே தனிப்படுக்கை தணலோடொக்குமா கையாலே மிது₂நமாயல்லது ஶயியாமை தோற்றுகிறது; மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாமே.

---

(எழுந்தனமலரணைப்பள்ளிகொள்ளன்னம்) தாமரைப் பூவாகிற படுக்கையிலே விடியற்காலவேளைப் பனியையும் கணிசிக்காமல் படுக்கையின் மென்மை, மணம் முதலானவற்றை அநுப₄வித்துக் கொண்டு உறங்குகிற ஆண்பெண்ணான இரட்டை அன்னங்கள் இந்த 'குணதிசை மாருதம்' வீசினவுடன் விடிந்தமையை அறிந்து உணர்ந்தன. நாடோடியான அன்னங்கள் உணர்ந்த பின்பும் அருமறை பயந்த அன்னமான தேவரீர் உணரவேண்டாவோ? என்று கருத்து. "அன்னமாய் அன்றங்கு அருமறை பயந்தான் அரங்கமாநகரமர்ந்தானே" [பெரியதிரு 5-7-3] என்று திருமங் கையாழ்வாரும் அருளினாரன்றோ. 'மலரணைத்துயிலும்' என்று கூறாமல் 'மலரணைப் பள்ளிகொள்' என்று கூறியது எம்பெருமான் உகந்தருளின பூ₄லோக வைகுண்ட₂த்தில் உள்ளவையாகையாலே கௌரவமாகவே சொல்லவேண்டும் என்னும் திருவுள்ளத்தாலே.

---

b அன்னமென்னுநிற்க மிது₂னத்துக்கு வாசகமெங்ஙனே யென்ன அருளிச்செய்கிறார் (பூம்படுக்கையித்யாதி₃)

கியுமெழுந்திராயென்றபடி. (தமிருஞ்சிறகித்யாதி₃) பனியிலே நனைந்த சிறகுகளை உதறிநின்றது.

---

(ஈன்பனிநனைந்த) உண்டான பனியாலே நனைந்த என்னுதல்; சொரிகிற பனியென்னுதல், c "ஒழுகு நுண் பனிக்கொடுங்கிய" இத்யாதி₃. (இருஞ்சிறகுதறி) பெரிய சிறகுகளை உதறிக்கொண்டு; பேடையைச் சிறகுக்குள்ளே வளர்த்தித் தன் சிறகையிட்டுக் கவித்துக் கொண்டாய்த்துக்

---

"அஹ்ருதஸஹஜதா₃ஸ்யாஸ் ஸூரயஸ் ஸ்ரஸ்தப₃ந்தா₄:
விமலசரமதே₃ஹா இத்யமீ ரங்க₃தா₄ம ।
மஹிதமநுஜதிர்யக்ஸ்தா₂வரத்வா: ஶ்ரயந்தே
ஸுநியதமிதிஹஸ்ம ப்ராஹுரேப்₄யோ நமஸ்ஸ்தாத் ॥"
[ர-ஸ்த 1-33]

[இயல்வான ஶேஷத்வம் என்றுமே நீங்கப்பெறுத நித்யஸூரிகளும், ப₃ந்த₄த்திலிருந்து விடுபட்ட முக்தர்களும், அழகியதான கடைசி தேஹத்திலிருக்கும் முமுக்ஷுக்களுமான இவர்கள் ஶ்ரீரங்கத்தில் சிறப்புற்ற மனிதர், திர்யக், ஸ்தா₂வரம் ஆகிய பிறவிகளை எடுத்துக்கொண்டு வாழ்கிருர்கள் என்பது நிச்சயம் என்று அறிவாளிகள் கூறுகிருர்கள். இவர்களுக்கு நமஸ்காரம்.] என்று பூர்வாசார்யர்கள் ஶ்ரீரங்க₃த்தில் வாழும் பறவைகள் முதலானவற்றையும் நித்யமுக்தர்களில் ஒருவராக அநுஸந்தி₄த்தார்களன்றே. பெரியதிருமலைநம்பி, "என்னை அழைக்க ஒருசிறியாரை அனுப்பக்கூடாதோ? நீரே வரவேண்டுமோ?" என்று கேட்ட எம்பெருமானாரிடம் "திருமலையில் என்னைக்காட்டிலும் சிறியார் இல்லை" என்று அருளிச்செய்தாரன்றே. 'எழுந்தன' என்று பன்மையில் அருளிச்செய்கையாலே அன்னம் என்னும் பதம் பேடையோடு கூடிய ஆண் அன்னத்தைக் குறிக்கிறது பூம்படுக்கையாகையாலே தனியாகப் படுத்தால் தணலைப்போல் சுடுமாகையாலே ஆணும் பெண்ணும் சேர்ந்தே படுத்திருக்கும் என்று

---

c பனிசொரியுமோவென்ன அருளிச்செய்கிருர் (ஒழுகுநுண்பனி) என்று.

(விழுங்கியவித்யாதி₃) 4.' परमापदमापन्नः'' (பரமாபத₃மாபந்ந:) என்று ஸ்வஶக்தி மாளும்படி, பி₃லத்₃வாரமென்று சொல்லலாம் படியிருக்கிற பெரிய பரப்பையுடைய முதலைவாயிலே அகப்பட்டு, அதினெயிற்றாலே நெருக்குண்டுமிகவும் நோவுபட்டு, துதிக்கை

---

கிடப்பது. நாடோடியான அன்னங்களெல்லாமுணர்ந்தன; அன்னமாயன்றங்கருமறை பயந்த தேவரீர் திருப்பள்ளியுணரவேண்டாவோ?

(விழுங்கிய வித்யாதி₃) முதலையின் கையிலே யானை அகப்பட்டதென்றாலோ தேவரீர் அரைகுலையத் தலைகுலையப் புறப்படலாவது? காலிலே முதலை கடிக்க ''விழுங்கிய'' என்கிறார்—

---

உணர்த்தப்படுகிறது '' மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ '' [திருவாய் 9-9-4] என்று பராங்குசநாயகியும் பிரிவிலே அருளிச்செய்தாளன்றோ. (ஈன்பனிநனைந்த) இது சிறகுக்கு விஶேஷணம். 'ஈன்பனி' என்றது ''விடியற்காலையில் உண்டானபனி'' என்றோ, 'மழைபோலே சொரிகிறபனி' என்றோ பொருள்படும். 'ஒழுகு நுண்பனிக்கொடுங்கிய பேடையை அடங்க அஞ்சிறைகோலி'' [பெரியதிரு 8-5-8] என்று பரகாலநாயகியும் பனிக்கு பயந்து ஒடுங்கிய பேடையை ஆண் அன்னம் தன் சிறையிலே அடக்கிக் கொண்டு துயில்வதாக அருளினாளன்றோ. (இருஞ்சிறகுதறி) பெரிய சிறகுகளை உதறிக்கொண்டு; கீழே எடுத்த பரகாலநாயகியின் பாசுரப்படியே, பேடையைச் சிறகுக்குள்ளே அடக்கிக் கொண்டு பள்ளிகொள்ளும் ஆண் அன்னம் அச்சிறகை உதறி எழுந்ததைக்காட்டுகிறது.

(விழுங்கிய முதலையின்......... கெடுத்த)

4. பரமாபத₃மாபந்நோ மநஸாऽசிந்தயத் ஹரிம்|
ஸ து நாக₃வர: ஸ்ரீமாந் நாராயணபராயண:||[வி-த₄ர் 69-47]

[ஶ்லாக்₄யமான ஆபத்தை அடைந்தவனும், கைங்கர்யஸ்ரீயை உடையவனும், நாராயணனையே மேலான க₃தியாகக்கொண்டவனுமான அந்த க₃ஜேந்திராழ்வான் மனத்தினாலே ஹரியை நினைத்தான்,] என்கிறபடியே தன் ஶக்தியெல்லாம் அழியும்படி குகைவாயில் போலே இருக்கும் பெரிய பரப்பை உடைய முதலைவாயிலே அகப்பட்டு, அதன் வெண்பற்களாலே கடிக்கப்பட்டு மிகவும் துன்புற்று, துதிக்கை முழுகும்படியான நிலையை கஜேந்த்ராழ்வான் அடைந்தவுடன் அவனுடைய பெரிய ஆபத்தைத் தீர்த்துவைத்து, ''கைம்மா துன்பம் கடிந்தபிரான்'' [திருவாய்

முழுகும்படியான து₃ரையிலே, பெரிய ஆபத்தைத் தீர்த்து, "கைம்மா துன்பம் கடிந்தபிரான்" என்று உபகார ஸ்ம்ருதியாலே க்ருதஜ்ஞர் ஈடுபடும்படியாக, கையில் பூவின்செவ்விபழியாமே திருவடிகளிலே இடுவித்துக்கொண்டு, அவனையடிமை

---

பசல்கள் கிணற்றினருகே போயிற்றென்றால் "இனியிழந்தேன்" என்பாரைப்போலே. (பிலம்புரை பேழ்வாய்) பி₃லத்₃வாரத்தோடொத்திருக்கிற பெரிய வாயின். (வெள்ளெயிறுற) அங்கு ஆமிஷமில்லாமையாலே மணலையிறே ப₄க்ஷிப்பது; ஆகையாலே சாணையிலிட்ட ஶஸ்த்ரம் போலே கூரானுமிருப்பது (அதன் விடத்தினுக்கு d அனுங்கி அழுங்கிய ஆனையினருந்துயர் கெடுத்த) ஆனையினுடைய காலைப்

---

2-9-1] என்று நம்மாழ்வார் போல்வார் தமக்குச் செய்த உதவியாக நினைத்து ஈடுபடும் படியாக, க₃ஜேந்திரன் கையில் பூ வாடுவதற்கு முன்பே அதைத் தன் திருவடிகளிலே இடச்செய்துகொண்டு அவனை அடிமை கொண்டு அவனுடைய பெருந்துயரைப் போக்கிய வரலாற்றை அருளிச்செய்கிறார்.

இந்த வரலாற்றை இங்கு அநுஸந்தி₄த்ததாலே, "முதலையின் வாயிலே யானை அகப்பட்டது என்றால்தான் தேவரீர் அரைகுலையத் தலைகுலைய ஓடி வருவீரோ? எங்களைப் போன்ற ஸம்ஸாரிகள் ஸம்ஸாரஸாக₃ரத்தில் அகப்பட்டுத் தத்தளிப்பது கண்டு ஓடிவரமாட்டீரோ?" என்னும் கருத்து தோன்றுகிறது. (விழுங்கிய) "காலிலே முதலை கஜேந்திரனைக் கடித்து நீரில் இழுத்தது" என்றே வரலாறிருக்க. 'விழுங்கிய" என்று இவர் அருளிச்செய்வது—குழந்தை கிணற்றின் அருகிலே போகும்போதே "ஐயோ! குழந்தை கிணற்றில் விழுந்து விட்டது" என்று பரிவாலே கூக்குரலிடும் தாயின் செயலை ஒத்தது. (பிலம்புரை பேழ்வாய்) குஹையின் வாயிலை ஒத்திருக்கிற பெரிய வாயினுடைய (வெள்ளெயிறுற) முதலைக்கு அம்மடுவிலே மாம்ஸம் கிடைப்பது அரிதாகையாலே, மணலையே கடித்துக் கடித்துத் தின்னும் பழக்கத்தாலே பற்கள் சாணையிலிட்ட ஆயுதம் போலே வெளுத்துக் கூராயிருக்கின்றன என்று கருத்து. (அதன் விடத்தினுக்கனுங்கி அழுந்திய ஆனையின் அருந்துயர் கெடுத்த)

---

d (அனுக்கா்) நோவு; (அழுங்கிய) அழுந்திய; நோவிலே அழுந்தின என்றபடி.

கொண்ட மஹோபகாரகராய், பிற்பாடர்க்கு உதவுகைக்காகக் கோயிலிலே நித்ய ஸந்நிதி₄ பண்ணுகிற தேவரீருணர்ந்தருளும்

---

பற்றின முதலையினுடைய பல்லின் விஷத்தாலேயனுங்கி நோவுபட்ட ஆனையுடைய. (அழுங்கிய) நோவுபட்ட. (அருந்துயர் கெடுத்த) e 10 "अतन्द्रितचमूपतिप्रहितहस्तम्" (அதந்த்ரித-சமூபதி ப்ரஹிதஹஸ்தம்) இத்யாதி₃. (அருந்துயர்) இனி அவ்வருகில்லை என்னும்படியான க்லேசமென்னவுமாம்; பெறுதற்கரிய துயரென்றுமாம். ஸர்வேஶ்வரனை வந்து விழப்பண்

---

யானையினுடைய காலைப்பற்றிய முதலையினுடைய பல்லின் விஷத்தாலே நொந்துபோய் மிகவும் துன்புற்ற யானையினுடைய; 'அனுங்கி அழுங்கிய' என்றதால் மிகவும் துன்புற்றதைக் காட்டுகிறது. (அருந்துயர் கெடுத்த)

10 அதந்த்ரித சமூபதி ப்ரஹிதஹஸ்த மஸ்வீக்ருத-
ப்ரணீத மணிபாது₃கம் கிமிதி சாகுலாந்த:புரம் |
அவாஹந பரிஷ்க்ரியம் பதக₃ராஜமாரோஹத:
கரிப்ரவரப்₃ரும்ஹிதே ப₄க₃வதஸ் த்வராயை நம:||

[ர-ஸ்த 2-57]

[கஜேந்த்ராழ்வானுடைய கூக்குரல் செவிப்பட்டவுடன், சேனை முதலியார் கொடுத்த கைலாகை மதியாமலும், கொண்டுவரப் பட்ட ரத்ன பாது₃கையை ஏற்காமலும். 'இதுவென்! இதுவென்!' என்று தி₃வ்ய மஹிஷிகள் திகைக்கவும், வாஹநாலங்காரமில்லாத பெரியதிருவடியின் மீது ஏருநின்ற எம்பெருமானுடைய வேக₃த்திற்கு நமஸ்காரம்.] என்று ஸ்ரீபராசரபட்டர் இவன் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து யானையின் அருந்துயர் கெடுத்த முறையை அருளிச்செய்தாரன்றோ. (அருந்துயர்) 'இதற்கு மேல் ஒருதுயரம் இல்லை' என்னும்படியான பெரிய துயரம் என்றும் பொருள் கொள்ளலாம்; அல்லது எவருக்கும் கிடைத்தற்கரிய பா₄க்₃யமான துயர் என்றும் பொருள் கொள்ளலாம். எம்பெருமானையே ஓடிவந்து விழப்பண்ணின துயராகையாலே இது பாக்கியமான துயரன்றோ. இவர் 'அருந்துயர்' என்றதுபோல் ரிஷியும்

---

e து₃:க்க₂த்தைப் போக்கினானேவென்ன அருளிச்செய்கிறார் (அதந்த்ரிதேத்யாதி₃)

3\. சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ
பாயிரு ளகன்றது பைம்பொழில் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே.

பதவுரை: — சூழ் திசை எல்லாம் — கண்டவிடமெங்கும், சுடர் ஒளி — ஸூர்ய கிரணங்களானவை, பரந்தன — பரவி விட்டன; துன்னிய — (ஆகாசத்தில்) நெருங்கிய, தாரகை —

---

போதையழகு காண ஆசைப்பட்ட அடியோங்களுடைய ஆர்த்தியெல்லாம் தீரும்படி உணர்ந்தருளவேணுமென்கிறார். 2.

---

னின நோவிறே. (அரங்கத்தம்மா இத்யாதி₃) இப்படி ஆர்த்தரானவர் கூக்குரல் கேட்கிற இடத்திலே உறங்குமத்தனையோ? ஒரு முதலை பிடித்தாலோ உதவலாவது? ஸம்ஸாரமாகிற பெருங் கடலிலே ஆழவிழுந்து இந்த்₃ரியங்களாகிற முதலைகள் ஐந்தின் வாயிலே விழுந்து அகப்பட்டாரை உணர்ந்தருளி ரக்ஷிக்க வேண்டாவோ? 2.

---

"பரமாபத₃ம்" [விஷ்ணுத₄ர்மம் 69-47] என்றார். (அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே) இப்படி ஸம்ஸாரத்தில் கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் முதலான பல முதலைகளால் நோவுபட்டவர்களை நோக்குவதற்காகவன்றோ திருவரங்கத்தில் பள்ளிகொள்வது; ஒரு முதலை பிடித்தால்தான் உதவலாமோ? ஸம்ஸாரமாகிற பெருங் கடலிலே கரையேற முடியாதபடி விழுந்து இந்த்₃ரியங்களாகிற ஐந்து முதலைகளின் வாயிலே அகப்பட்டுத் துன்புறுகிறவர்களை உணர்ந்து ரக்ஷிக்க வேண்டாமோ? "தேவரீர் பள்ளியெழும் அழகைக் காண ஆசைப்பட்ட எங்களுடைய வருத்தம் தீர உணர்ந்தருளவேணும்" என்றும் கொள்ளலாம். 2

நக்ஷத்திரங்களினுடைய, மீன் ஒளி—மிக்க ஒளியானது, சுருங்கி – குறைவுபட்டது மன்றி, படர் ஒளி—பரந்த ஒளியை யுடைய, பனி மதி இவன்—இக்குளிர்ந்த சந்திரனும், பசுத் தனன்—ஒளி மழுங்கினன்; பாய் இருள்—பரந்த இருட் டானது, அகன்றது – நீங்கிற்று; வைகறை மாருதம் இது— இந்த விடியற்காற்றானது, பை—பசுமை தங்கிய, பொழில் — சோலைகளிலுள்ள, கமுகின்—பாக்குமரங்களினுடைய, மட லிடை கீறி மடலைக் கீறினதாலே, வண் பாளைகள் நாற— அழகிய பாளைகளானவை மணம் கமழ, (அப்பரிமளத்தை முகந்து கொண்டு) கூர்ந்தது—வீசா நின்றது; அடல் – பெரிய பலத்தை உடையதாய், ஒளி திகழ்தரு — தேஜஸ்ஸு விளங்கா நின்றுள்ள, திகிரி—திருவாழியாழ்வானை, அம் தட கை—அழகிய பெரிய திருக்கையிலே உடைய, அரங்கத் தம்மா! பள்ளியெழுந்தருளாய்—,

---

அவ:—மூன்றாம்பாட்டு. நக்ஷத்ராதிகள் ஒளிமழுங்கும்படி ஆதித்யனுதித்தான்; கையுந் திருவாழியுமான அழகை அநு பவிக்கும்படி திருப்பள்ளியுணர்ந்தருளவேணுமென்கிறார்.

---

அவ:—மூன்றாம்பாட்டு. (சுடரொளியித்யாதி) ஆதித்ய கிரணங்கள் எங்கும் பரந்தன; நக்ஷத்ராதிபதியான சந்த்ர னும் விவர்ணனானான்; திருச்சோலையில் படல்விரிந்த பாளை யின் மணத்தைக்கொண்டு விடிகாற்றானது வந்தது; கையும் திருவாழியுமான அழகைக்கொண்டு உணர்ந்தருளவேணு மென்கிறார். முதற்பாட்டில் கீழ்த்திக்கில் உதயகிரியிலே

---

3. அவ:—"ஸூர்யனுடைய கிரணங்கள் எங்கும் பரவிவிட் டன; ஒளிகுன்றிப்போன நக்ஷத்திரங்களுக்கு நாயகனான சந்த்ர னும் ஒளிமழுங்கினான்; திருவரங்கத்துச் சோலைகளில் மடல் விரிந்த பாளையின் மணத்தை எடுத்துக்கொண்டு விடியற்காலைக்காற் றானது வந்து வீசுகிறது; கையும் திருவாழியுமான அழகை அடியார் களுக்கு அநுபவிப்பித்துக்கொண்டு பள்ளியெழுந்தருளவேணும்" என்கிறார். முதற்பாட்டில் 'கிழக்குத்திக்கில் உதயகிரியிலே ஸூர்

வ்யா:-(சுடரித்யாதி₃)பார்த்தபார்த்த இடமெங்கும் ஆதி₃த்ய கிரணங்கள் பரம்பிற்று; அத்தாலே நக்ஷத்ராதி₃களுடைய

---

வந்தணைந்தானென்றது; இதில்—நேராகவு கித்து, தன்னுடைய தேஜஸ்ஸை எங்கும் பரப்பிக்கொண்டு வந்து தோற்றினனென்கிறார்.

வ்யா:— (சுடரொளி பரந்தன சூழ்திசையெல்லாம்) சூழ்ந்த திக்குகளெங்கும், சுடரொளியானது — ஆதி₃த்யனுடைய தேஜஸ்ஸானது விஸ்த்ருதமாய்த்து. 11. 'तेजसां राशिमूर्जितम्'' (தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்) என்றும், ''பயிலும் சுடரொளி'' என்றும் சொல்லுகிறபடியே தேவரீருடைய திருமேனி யொளியானது எங்குமொக்க விஸ்த்ருதமாம்படியாக உணர்ந்தருளலாகாதோ? என்று கருத்து. (துன்னிய

---

யன் உதித்தான்' என்கிறார். இப்பாட்டில் 'அதற்குமேலே, நன்றாக உதித்து, தன்னுடைய ஒளியை எல்லா இடங்களிலும் பரப்பிக்கொண்டு வந்து தோன்றினான் என்கிறார்.

வ்யா:— (சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்) பார்த்த பார்த்த இடமெங்கும் ஸூர்யனின் சுடர்விடும் ஒளியானது பரவிற்று.

11. தம் த்₃ருஷ்ட்வா தே தத₃ா தே₃வா: ஶங்க₂சக்ரக₃த₃ாத₄ரம்।
அபூர்வ ரூபஸம்ஸ்த₂ாநம் தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்॥
[வி-பு 1-9-67]

[ஶங்க₂சக்ரக₃த₃ாத₄ரனாய், அபூர்வமான திருமேனி அமைப்பை உடையவனாய், உறுதியானவனாய், தேஜோராஶியான அந்த ப₄க₃வானைக் கண்ட தே₃வர்கள் அப்போது(துதிக்கத்தொடங்கினர்)] என்றும், ''பயிலும் சுடரொளி'' [திருவாய் 3-7-1] என்றும் சொல்லுகிறபடியே, கோடி ஸூர்யப்ரகாஶமான தேவரீருடைய திருமேனி ஒளியானது எல்லாவிடங்களிலும் பரவும்படியாக விழித்தெழவேண்டாவோ? என்று கருத்து. (துன்னியதாரகை மின்னொளி சுருங்கி) நெருங்கி நிற்கும் நக்ஷத்திரங்களுடைய மிகுந்த ஒளியானது ஸூர்ய கிரணங்களாலே மறைக்கப்பெற்று சுருங்கிப்போய். (பட

தேஜஸ்ஸு தோற்றதபடியாயிற்று. அவ்வளவன்றிக்கே (படரொளி இத்யாதி₃) இரவெல்லாம் ஸாம்ராஜ்யம் பண்ணின சந்த்₃ரனும் ஒளி மழுங்கினான்.

---

இத்யாதி₃)நெருங்கின நக்ஷத்ரங்களினுடைய உபரஞ்செய்கிற தேஜஸ்ஸானது ஸங்குசிதமாய், விஸ்த்ருதமான ஒளியையுடைய குளிர்ந்த சந்த்₃ரனும்,(பசுத்தனன்) விவர்ணனானான்; கருகினானென்று கருத்து. "தாரகையின் புறந்தடவியப்பால் மிக்கு" என்றும், 12. "चन्द्रकान्ताननं रामं" (சந்த்₃ர காந்தாநநம் ராமம்) என்றும் ஸர்வபதா₃ர்த்த₂ங்களையும் த₄ரிப்பிக்கப் பண்ணும் திருவடிகளையுடையராய், ஸகலகலா பரிபூர்ணராய், நிஷ்களங்கனான சந்த்₃ரனைப் போலேயிருக்கிற குளிர்ந்த திருமுகத்தையுடையரான தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளலாகாதோ?

---

ரொளி பசத்தனன் பனிமதி இவனோ) இரவிலே பரவிய ஒளியை உடைய குளிர்ந்த சந்த்₃ரனும் ஒளிமழுங்கினான். நக்ஷத்திரங்களுடைய ஒளியைப்போலே நக்ஷத்திர நாயகனுடைய ஒளியும் சுருங்கிற்று என்று கருத்து. "இருவிசும்பினூடு போயெழுந்து-மேலைத் தண்மதியும் கதிரவனும் தவிரவோடி, தாரகையின்புறம் தடவி, அப்பால் மிக்கு மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை"[திருநெடு 5] என்கிறபடியே எல்லாப் பொருள்களையும் வியாபித்து தரிக்கச் செய்யும் திருவடிகளை உடையவராகையாலே, நக்ஷத்திரம் முதலான எல்லாப் பொருள்களுக்கும் நாயகராய்,

12. சந்த்₃ரகாந்தாநநம் ராமமதீவ ப்ரியத₃ர்ஶநம் [ரா-அ 3-29] [சந்திரன் போன்று அழகியமுகமுடையவனாய், மிகவும் இனிய காட்சியை உடையவனான ராமனை (த₃ஶரத₂ன் கண்டான்)] என்கிறபடியே, குறைந்து நிறையும் கலைகளை உடையவனாய், களங்கமுடையவனான சந்த்ரனைப்போலல்லாமல் எல்லாக் கலைகளும் நிறைந்தவராய், களங்கமற்ற சந்த்ரனைப்போலே இருக்கையாலே சந்த்ரனைக் காட்டிலும் அழகியதாய், குளிர்ந்ததான திருமுகத்தை உடைய தேவரீர் பள்ளியெழுந்தருளலாகாதோ? என்று கருத்து.

---

அரு:—மூன்றாம் பாட்டு (சுடரொளியித்யாதி₃) உ (பரஞ்செய்கிற) ஆகாஶத்துக்குப் பரபா₄க₃ம் செய்கிற.

(பாயிருளகன்றது) அந்தச் சந்த்₃ரனுக்கு விகாஸஹேதுவாய்ப் பரப்பின இருளானது, மஹாராஜாக்கள் தோற்றினால் க்ருத்ரிமர் ஒளிக்குமாபோலே மறைந்தது. (பைம்பொழில் கமுகினித்யாதி₃)

---

ஆகாசப்பரப்பெல்லாம் b முப்பல் (முத்துப்பந்தல்) விரித்தாப் போலேயிருக்கிற நக்ஷத்ரங்களினுடைய தீ₃ப்தியும் மறைந்து, இவற்றுக்கு நிர்வாஹகனான சந்த்₃ரனுடைய பரந்த தீ₃ப்தியும் போய்த்து; தேவரீர் அமலங்களாக விழித்தருளாமையாலே, சந்த்₃ரன் தன் பரிகரமும் தானும் வேற்றுருக்கொண்டான்.

(பாயிருள்) வ்யாபித்த இருள். (அகன்றது) நிரஸ்தமாய்த்து. (பைம்பொழிலித்யாதி₃) கலக்கந்தெளிந்தால் தந்தாமுடைய போ₄க₃ம் c ஒருக்குவாரைப் போலே. (மடலிடைக்கீறி வண் பாளைகள் நாற) பாளைக்கு வண்மை

---

விண்ணில் முத்துப்பந்தல் விரித்ததுபோலேயிருந்த நக்ஷத்திரங்களின் ஒளியும் மறைந்து, அவற்றின் நாயகனான சந்த்₃ரனுடைய விரிந்த ஒளியும் அழிந்தது "'அவன் கண்களாலே அமலங்களாக விழிக்கும்' [திருவாய் 1-9-9] என்கிறபடியே தேவரீர் விழித்தெழுந்து கடாக்ஷிக்காமையாலே, சந்த்₃ரன் தானும் தன் துணையான நக்ஷத்திரங்களோடு உருமாறிப்போய்விட்டான்" என்றும் கருத்துரைக்கலாம்.

(பாயிருள்) இரவில் எங்கும் பரவியிருந்த இருள்; அந்தச் சந்த்₃ரனுடைய ப்ரகாஶத்திற்குக் காரணமாய்ப் பரவியிருந்த இருள். (அகன்றது) மஹாராஜாக்கள் வெளியில் வந்தால் கள்ளர்கள் ஒளிவதுபோலே ஸூர்யன் தோன்றியவுடன் இருள் மறைந்தது. (பைம்பொழில் கமுகின்......மாருதமிதுவோ) கலக்கம் தெளிந்தவுடன் தம்முடைய போ₄க₃த்திலே ஈடுபடுவாரைப் போலே, விடியற்காலைக் காற்றானது, இருளகன்றவுடன் பசுமையுடைய சோலைக் கமுகுகளின் பாளைகள் விரிய, அவற்றின் மணத்தை முகந்துகொண்டு எங்கும் வீசுகின்றது. (மடலிடைக் கீறி வண்பாளைகள் நாற) என்ற

---

b (முப்பல்) முத்துக்கட்டின மேற்கட்டி. c (ஒருக்குகை) நடத்துகை.

பசுமையையுடைத்தான சோலைக்கமுகுகளின் பாளைகளானவை விரிய, அதின் பரிமளத்தை முகந்துகொண்டு விடிவோரைக்காற்றானது எங்கும் வ்யாபியாநின்றது.

(அடலொளியித்யாதி₃) திருவாழியாலே ப்ரதிபக்ஷத்தைப் போக்கினாப்போலே கையும் திருவாழியுமான அழகைக்காட்டி

---

யாவது—காற்றுக்குத் தன பக்கலுள்ளத்தைக் கொடுக்கையிறே. (வைகறை) என்று—விடியற்காலம். (மாருதம், காற்று; விடிகாற்று வருகையும், கமுகிலுண்டான பாளைகள் விகஸிதமாகையும், இதிலுண்டான மணத்தைக் காற்று கொண்டு வருகையாலே மணம்விஞ்சிற்று. கூருகையாவது-மிகுகை. ''மன்றாடு தென்றலுலா'' என்று-பொதுவான காற்றன்றியே விடிந்தமைக்கு அடையாளம் தெரியக் காற்று வரச்செய்தேயும் கண்வளர்ந்தருளவேணுமோ?

(அடலொளியித்யாதி₃) ஆதி₃த்ய கிரணங்கள் மின்மினியாம்படியிறே திருவாழியாழ்வானொளி; பெரிய மிடுக்கை

---

விடத்தில் பாளைகளுக்குச் சொன்ன வண்மையாவது காற்றுக்குத் தன்னிடமுள்ள மணத்தைக் கொடுக்கையே ஆகும். (வைகறை) என்று விடியற்காலத்தைச் சொல்லுகிறது. விடியற்காலைக் காற்று வந்தவுடன் பாக்குமரங்களிலுள்ள பாளைகள் மலர்ந்து வெடிக்க, அதனால் உண்டாகும் மணத்தைக் காற்று கொண்டு வருகையாலே மணம் மிகுந்தது. கூர்ந்தது—மிகுந்தது. ''மன்றாடு தென்றலுலாம் மதிளரங்கம்'' [பெரியாழ் திரு 4-8-9] என்கிற படியே திருவரங்கத்தில் எப்போதும் வீசும் காற்றல்ல இது. விடிந்ததற்கு அடையாளமான மணம் மிகுந்த இக்காற்று வீசிய போதிலும் கண்வளர்ந்தருளலாமோ? என்று கருத்து.

(அடலொளி......பள்ளியெழுந்தருளாயே) திருவாழியாழ்வானைக் கொண்டு எதிரிகளைப் போக்கினதுபோலே, கையும் திருவாழியுமான அழகைக்காட்டி எங்களுடைய உடலிலுள்ள எதிரிகளான இந்திரியங்களுக்கு வசப்பட்டிருக்கும் தன்மையைப் போக்கி, தேவரீருடைய அழகை நாங்கள் அநுபவிக்கும்படி பள்ளியெழுந்தருளவேணுமென்று அருளிச்செய்கிறார். (அடலொளி

4. மேட்டிள மேதிகள் தளைவிடு மாயர்கள்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்
ஈட்டிய விசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவ ரேறே!
மாமுனி வேள்வியைக் காத்தவ பிரதம்
ஆட்டிய வடுதிற லயோத்தியெம் மரசே!
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே.

---

ஸஹஜஸத்ருவான இந்த்₃ரியபாரவஶ்யதையைப்போக்கி, தேவரீ ழகை அநுப₄விக்கும்படி திருப்பள்ளி யுணர்ந்தருளவேணும் என் கிறார். 3.

---

யுடைத்தாய், ஒளி திகழா நிற்பதாய், தேஜஸ்ஸு விளங்கா நின்றுள்ள திகிரியையுடைத்தாய், வெறும்புறத்தில் ஆலத்தி யெறிக்க வேண்டும்படியான அழகையுமுடைய திருக்கை யிலே. (தடக்கை) திருவாழியாழ்வானுக்கு இடம்போரும் படியான திருக்கை. (அரங்கத்தம்மா) ஆர்த்தரானுர்க்கு முகங்கொடுக்க வந்த விடத்தே கிடந்துறங்குமத்தனையோ? தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளவேணுமென்கிறார். 3.

---

திகழ்தரு திகிரி) ஸூர்ய கிரணங்கள் மின்மினி போலே ஆம்படி இருப்பதன்றோ ஸுதர்சனுழ்வானின் ஒளி; ஆகையாலே அதை 'அடலொளி' என்கிறார். (அடலொளிதிகழ்தருதிகிரி அம்தடக்கை) எதிரிகளை அடக்கக்கூடிய பெரிய பலமுடையதாய், பேரொளி யாய் விளங்குவதாய், மற்ற ஒளிகளை அடக்கும் தேஜஸ்ஸிலும் மிக்கதான ஸுதர்சனத்தை உடையதாய், ஸுத₃ர்சனம் இல் லாதபோதும் த்₃ருஷ்டி கழிக்க வேண்டும்படியான அழகை உடைய பெரிய திருக்கையிலே (தடக்கை) மிகப்பெரிய ஸுதர்ச ஞழ்வானுக்கு இடம் போரும்படியிருக்கும் பெரிய திருக்கையை உடைய. (அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே) ஸம்ஸாரத் துன்பங்களால் வருந்துகிறவர்களுக்கு முகம் கொடுப்பதற்காக வந்து திருவரங்கத்தில் படுகாடு கிடக்கும்போது உறக்கம் கொள் ளலாமோ? தேவரீர் பள்ளியுணர்ந்தருளவேணும் என்கிறார். 3.

பதவுரை:—மேடு இள மேதிகள்—உயரமும் இளமையும் உடைய எருமைகளை, தளை விடும்— (மேய்கைக்குக்) கட்டவிழ்த்து விடுகிற, ஆயர்கள்—இடையர் (ஊதுகிற), வேய்ங் குழல் ஓசையும்—புல்லாங்குழலின் நாதமும், விடை—எருதுகளின் (கழுத்திற்கட்டியுள்ள), மணி — மணிகளினுடைய, குரலும்—ஓசையும் (ஆகிய), ஈட்டிய இசை—இவ்விரண்டும் கூடிய ஒலியானது, திசை பரந்தன—திக்குகளெங்கும் பரவிவிட்டது; வயலுள்—கழனிகளிலுள்ள, சுரும்பு இனம் — வண்டுகளின் திரள், இரிந்தன— ஆரவாரித்துக்கொண்டு கிளம்பின; இலங்கையர் குலத்தை —ராக்ஷஸவர்க்கத்தை, வாட்டிய—உருவழித்த, வரி சிலை—அழகிய சார்ங்கத்தையுடைய, வானவர் ஏறே—தேவாதிதேவனே! மா முனி—விச்வாமித்ர மஹர்ஷியினுடைய, வேள்வியை - யாகத்தை, காத்து—ரக்ஷித்து, அவபிரதம் ஆட்டிய—அவப்ருதஸ்நாநம் செய்வித்து நிறைவேற்றிய, அடு திறல் — (விரோதிகளை) அழிக்கவல்ல பலத்தையுடையவனாய், அயோத்தி எம் அரசே—அயோத்தியாபுரியை ஆளுகையாலே எங்களுக்கு ஸ்வாமியானவனே! அரங்கத்தம் மா பள்ளி எழுந்தருளாய்—

---

அவ:– நாலாம்பாட்டு. சக்ரவர்த்தித்திருமகனாயவதரித்தருளி விரோதி நிரஸநபூர்வகமாக ஆச்ரிதஸம்ரக்ஷணம்பண்ணியருளி

---

அவ:— நான்காம்பாட்டு. (மேட்டிளமேதிகளித்யாதி) ''எருமை சிறுவீடு'' என்கிறபடியே சிறுவீடன்றியே பெருவீடும் விடும்படியாய், இளங்கன்று மேய்க்க ஒருப்பட்டுத் தளைவிடுகிற ஆயர் ஊதுகிற குழலினோசையும்,

---

4. அவ:— ''எருமை சிறு வீடு'' [ திருப்பாவை—8] என்கிற படியே விடியற்காலை வேளையில் சிறிது நேரம் மேயவிடும் சிறு வீடு அல்லாமல், எருமைகளைப் பெரிய மேய்ச்சலாகிற பெரு வீடு விடும் காலமாய், இளங்கன்றுகளை மேய்க்கத்தொடங்கி அவற்றைக் கட்டவிழ்த்து விடுகிற ஆயர்கள் ஊதும் குழலின் ஓசையும், பசுக்களைத் தொடர்ந்து ஓடும் எருதுகளின் கழுத்தின்

ளுப் போலே த்வதநுபவவிரோதிகளைப் போக்கி அநுபவி (ப்பி?) க்கத் திருப்பள்ளியுணர்ந்தருள வேணுமென்கிறார்.

வ்யா:—(மேட்டிள மேதிகளித்யாதி) கொம்புகள் அங்குரியா நின்றுள்ள இளையதான எருமைகளும், அவற்றை நியமிக்கக்

---

டாருகளின்மேலே செருக்கியோடுகிற விடையினுடைய கழுத்தில் மணியோசையும், ''கார்பணியினுவாடல்'' என்கிறபடியே மணிக்குரலும் திக்குகளெங்கும் பரந்தது; மதுபாநம் பண்ணின வண்டுகள் ஆரவாரித்துக்கொண்டு கிளம்பிற்றின; இவற்றின் ஆர்ப்பரவமறப்போய் அதிக்ரமித்துச் செல்லாநின்றது; விரோதி நிரஸநஶீலராய், ஸர்வரக்ஷகரான தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளவேணும் என்கிறார்.

வ்யா:— (மேட்டிளமேதிகள்) இளங்கன்றுயிருக்கச் செய்தே ஓங்கியிருப்பனவான எருமைக்கன்று. இவற்றினுடைய. (தளை விடுமாயர்கள்) தளைவிடுகையாவது-கட்டு

---

மணி ஓசையும் எல்லா திக்குகளிலும் பரவிற்று. பூக்களில் தேனைப்பருகின வண்டுகள் ரீங்காரமிட்டுக்கொண்டு கிளம்பின. இந்த ஓசைகளின் ஒன்றுகூடிய ஒலி எல்லா திக்குகளிலும் பரவிவிட்டது. சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்து, அடியார்கள் தேவரீரை அநுபவிப்பதற்கு விரோதிகளை அழித்து அவர்களைக் காத்தது போலே, நாங்கள் உன்னை அநுபவிப்பதற்குத் தடையாயிருப்பவற்றைப் போக்கி எங்களை அநுபவிக்கச் செய்வதற்காகப் பள்ளியெழுந்தருளவேணும் என்கிறார்.

வ்யா:— (மேட்டிள மேதிகள்) 'மேடு' என்று உயரத்தையும் 'இள' என்று இளமையையும் சொல்லுகிறது. இளமையாய் இருந்தபோதிலும் ஓங்கி வளர்ந்திருக்கும் இளங்கன்றுகள். ''கற்றுக் கறவை'' [ திருப்பாவை—11 ] என்று ஆண்டாள் அருளிச்செய்தது போலே. (மேட்டிள மேதிகள்) கொம்புகள் முளைக்கத்தொடங்கிய இளம் எருமைகள் என்றும் பொருள் கொள்ளலாம், (தளைவிடும் ஆயர்கள்) இந்த எருமைகளுடைய

கடவ இடையர் ஊதுகிற குழலோசையும், அதுக்குமேலே மேயப் புறப்பட்ட பசுக்களின் நடுவில் ரிஷப₄ங்களின் கழுத்தின் மணித்₄வநியுமாய், இசைபோலே திரண்ட த்₄வநி எல்லா திக்குகளி

---

விடுகை, சிறுவீடன்றியே விடிந்துமேய்கையாலே பராக்கற்று மேயுமே; பின்பு அவர்களுக்குப் பராக்கற்றபடியாலே குழலூதுமித்தனையிறே.

(விடைமணிக்குரலும்) பசுக்களும் விட்டு இவற்றுக்குக் கடவதான விடைமணியோசையும்; 13. ''ज्ञानेन हीनः पशुभिः समानः''(ஜ்ஞாநேநஹீந:பஶுபி₄ஸ்ஸமாந:)என்னக்கடவதிறே. இப்படிக்கொத்த ஜ்ஞாநஹீநமான பதா₃ர்த்த₂ங்கள் விட்டு

---

கட்டை விடுவிக்கும ஆயர்கள். ''எருமை சிறு வீடு'' [திருப்பாவை-8] என்று ஆண்டாள் அருளியது போலே சிறு வீடல்லாமல் விடிந்து மேய்கையாலே பெருவிடாய், பட்டி திரியாமல் மேய்கின்றன இவ்வெருமைகள். (வேய்ங்குழலோசையும்) அவை பட்டி திரியாமல் ஒருமுகப்பட்டு மேய்கையாலே அவைகளை மேய்க்கவந்த ஆயர்கள் பொழுது போவதற்காகக் குழலூதிக் கொண்டிருப்பதைச் சொல்லுகிறது.

(விடைமணிக்குரலும்) மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்களின் நடுவே அந்தப் பசுக்களோடு தொடர்புள்ள காளைகள் அவற்றை நோக்கி ஓடுகையாலே எழுந்த கழுத்தில் கட்டிய மணியின் ஓசையும் குழலோசையோடு கலந்து கேட்கிறது.

13. ஆஹாரநித்₃ரா ப₄யமைது₂நாநி
துல்யாநி க₂ல்வத்ர ஸமஸ்தஜந்தோ: |
ஜ்ஞாநாத்₃ விஶிஷ்டோ ஹி நர: பரேப்₄யோ
ஜ்ஞாநேந ஹீந: பஶுபி₄ஸ் ஸமாந: ||

[நரஸிம்ஹ புராணம் 16-13]

[ஆஹாரம், நித்திரை, ப₄யம், ஸ்த்ரீபுருஷஸங்க₃மம் என்பவை இங்கு எல்லா ஜந்துக்களுக்கும் ஸமானம். மற்றவைகளைக் காட்டிலும் மனிதன் அறிவினால் மேலானவனாயிருக்கிறான். ஞானமற்றவன் பசுக்களுக்கு ஸமானமானவன்.]என்று ஞானமற்றவர்களுக்கு உதாரணமாகச் சொல்லப்பட்ட பிராணிகளும் அவற்றின் பின்னே திரியும் ஆயர்களுங் கூட வெளியில் புறப்பட்டிருக்கும்

தமிழ் இலக்கிய... நூலகம்
வ.எண்: 25.41
நாள்: 27.10.0க5

ளுள்ள வயலெல்லாம் பரந்தன.(இரிந்தன சுரும்பினம்) அலருகிற காலபுஷ்பங்களில் மதுவைப் பாநம்பண்ணின வண்டுகளா னவை ஶப்3திக்கத் தொடங்கிற்றின.

(இலங்கையரித்யாதி3) து3ர்வர்க்கத்துக்கெல்லாம் புகலிட மான லங்கைக்கு நிர்வாஹகனான ராவணனுடைய குலத்தை

---

ஸஞ்சரியா நின்றன. ஸர்வஜ்ஞரான தேவரீர் உணர்ந்தருள வேண்டாவோ? இப்படிப்பட்ட குழலோசையாலும் மணி யோசையாலும், (ஈட்டியவிசை திசைபரந்தன) திரண்ட த்4வநிகளானவை திக்குகளெங்கும். பரந்தன-விஸ்த்ருத மாய்த்து. (வயலுள் a இரிந்தன சுரும்பினம்) சோலைக்குள்ளி லன்றியே வெளிநிலமான வயலில் தடாகங்களிலுண்டான தாமரை செங்கழுநீரிலே மதுபாநம்பண்ணின வண்டுக ளானவை ஆரவாரித்துக்கொண்டு b சிதறிற்றின.

(இலங்கையர்குலத்தை வாட்டிய) லங்கையிலுண்டான ராவண ஸந்தாநத்தை வாட்டிய; வாட்டுகையாவது —

---

போது எல்லாம் அறிந்த தேவரீர் விழித்தருள வேண்டாவோ? என்று கருத்து. (ஈட்டிய இசைதிசை பரந்தன) முற்கூறிய குழலோசையும், மணியோசையும் ஒன்று சேர்ந்து சங்கீத ஒலி போலே எல்லாத்திக்குகளிலும் பரவின; பரந்தன—வியாபித்தன. (வயலுள் இரிந்தன சுரும்பினம்) முன் சொன்ன ஒலிகள் சோலைக்குள் எழுந்தவை; சோலைக்கு வெளியில் உள்ள வயல் களில் உள்ள குளங்களில் மலர்ந்திருக்கும் தாமரை செங்கழு நீர் முதலான காலையில் பூக்கும் பூக்களிலே உள்ள தேனைப் பருகிய வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டு பறக்கின்றன.

(இலங்கையர் குலத்தை வாட்டிய வரிசிலை வானவரேறே) தீயவர்கள் அனைவருக்கும் சேருமிடமாயிருந்த இலங்கைக்கு அதிபதியான ராவணனுடைய குலத்தை உற்றார் உறவினரோடு அழித்த சார்ங்கம் என்னும் வில்லையுடையவராய், “பிரமன் முத

---

அரு:— நாலாம்பாட்டு. (மேட்டிளமேதிகளித்யாதி3) a, b (இரிந்தன) சிதறிற்றின.

ஸபரிகரமாக மாய்த்த ஸ்ரீராமரங்கத்வத்தை உடையராய், ப்ரஹ்மாதிகளுடைய அபேக்ஷிதம் செய்யப்பெற்றோமென்னும் மேனாணிப்பையும் உடையவரே!

---

நிஶ்ஶேஷமாக முடிக்கை; கரியாக்குகை. ''வாட்டிய'' என்றால் கரியாக்குமோவென்னில்; வீரபத்நியாகையாலே ''கிள்ளிக்களைந்தானை'' என்னுமாபோலே, இவரும் தம்முடைய வையாத்யத்தாலே விரோதித்தார் (க்குச்)?சொல்லுப்படியே அநாயாஸமாகச் செய்தபடியைக்கொண்டு ''வாட்டிய'' என்றதித்தனை; இவை எரிசிதறும் சரமாகையாலே தீப்தபாவகஸங்காஶங்களாகையாலே-அவைகளைக் கரியாக்கியல்லது விடாதே;

---

லான தேவர்களுடைய பிரார்த்தனையை நிறைவேற்றப் பெற்றோம்'' என்னும் களிப்பாலே விளங்கி நிற்பவரே! (இலங்கையர் குலத்தை வாட்டிய) இலங்கையிலுள்ள ராவணனைக் குலத்தோடு வாட்டிய; வாட்டுகையாவது — அடியோடு அழிக்கை; அதாவது சாம்பலாக்குகை. சாம்பலாக்குகையைக் குறிப்பதற்கு 'வாட்டிய' என்றால் போதுமோ? எனில்: ''பொல்லாவரக்கனைக் கிள்ளிக்களைந்தானை'' [ திருப்பாவை 13 ] என்று ஆண்டாள் ராவணஸம்ஹாரத்தைச் சொல்லும்போது வீரபத்நியாகையாலே ராமன் அநாயாஸமாக ராவணாதிகளை அழிப்பதைக் காட்டுவதற்காக, 'கிள்ளிக்களைந்தானை' என்று கூறியதையும், ராவணனோடு எதிரிட்ட ராமபிரான் தம்முடைய வீரத்தை சுக்கிரீவனுக்கு வெளிப்படுத்தும்போது ''அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம்'' [ ரா-யு 18-24 ] [ தீயவர்கள் அனைவரையும் விரல்நுனியாலே கொல்லுவேன். ] என்று தான் விளையாட்டாக எதிரிகளை அழிக்கவல்லவன் என்று சொல்லி அப்படியே செய்தபடியையும் போலே, இவ்வாழ்வாரும் 'வாட்டிய' என்கிறார். ராமபாணங்கள் ''எரி சிதறும் சரம்'' [ பெரியாழ்திரு 4-3-8 ] என்றும், ''தீப்தபாவகஸங்காஶை:'' [ ரா-யு16-22 ] என்றும் சொல்லுகிறபடியே அக்னியை வீசும் அம்புகளாகையாலே, எதிரிகளைச் சாம்பலாக்கியே தீருமன்றோ.

விஶ்வாமித்ர ப4க3வானுடைய யாக3த்துக்கு விக்4ந கர்த்தாக்களாய், ராவணவத4த்துக்கு அடியான தாடகாதாடகேயரை

---

c 14 ''नेयमस्ति'' ! (நேயமஸ்தி) யிறே; d 15. ''सीतायास्तेजसा दग्धा'' (ஸீதாயாஸ்தேஜஸா த3க்3த4ா) விறே; e 16. ''काञ्चनभूषणैः'' (காஞ்சநபூ4ஷணை:) என்னக்கடவதிறே.

---

14. நேயமஸ்தி புரீ லங்கா ந யூயம் ந ச ராவண:।
யஸ்மாதி3க்ஷ்வாகுநாதே2ந ப3த்3த4ம் வைரம் மஹாத்மநா ॥
[ரா-ஸு 48-25]

[மஹாபுருஷனும், இக்ஷ்வாகுகுலநாதனுமான ராக4வனேடு விரோத4ம் வைக்கப்பட்டதாகையால், இந்தலங்காபுரியும், நீங்களும், ராவணனும் அஸத்ஸமராய்விட்டீர்கள்.] என்று ராவணன் லங்கையில் இருக்கும்போதே, அவன் இல்லை என்று அனுமன் சொன்னது போலே இங்கு 'வாட்டிய' என்னும் பத3த்திற்கும் 'அழிந்த' என்று பொருள் கொள்ளலாம்.

15. ஸீதாயாஸ் தேஜஸா த3க்3த4ாம் ராமகோபப்ரபீடி3தாம் ।
த3ஹ்யமாநாமிமாம் பஶ்ய புரீம் ஸாட்ட ப்ரதோளிகாம் ॥
[ரா-ஸு 51-37]

[ஸீதையின் தேஜஸ்ஸாலே எரிக்கப்பட்டதும், ராமனுடைய கோபத்தால் பீடிக்கப்பெற்றதுமான இந்நகர் மாடங்களோடும் வீதிகளோடும் எரியப்போவதைப் பார்.] என்று அநுமனே இலங்கை எரியப்போவதாகக் கூறினுனன்றே.

16. தீ3ப்தபாவகஸங்காஶை: ஶிதை: காஞ்சநபூ4ஷணை: ।
ந த்வாமிச்சா2ம்யஹம் த்3ரஷ்டும் ராமேண நிஹதம் ஶரை: ॥
[ரா-யு 16-22]

---

e ஶப்3த3ம் ''வாட்டிய'' என்று சொல்லாநிற்க, த3க்3த4மாக என்று அர்த்த2ம் கொள்ளும்போது, இப்படி ஒன்றை ஒன்ருகச்சொன்னஇடமுண்டோவென்ன, லங்கையும் ராவணனுமிருக்க இல்லையென்று திருவடி சொன்னுனென்கிருர் (நேயமஸ்தியிறே) என்று, d த3க்3த4மானதுக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிருர் (ஸீதாயா இத்யாதி3) e,f ''காஞ்சநபூ4ஷணை:'' என்று

நிரஸித்து. (அவபிரதமாட்டிய) ஸமாராத₄ந ரூபமான கர்த்தவ்யம் தலைக்கட்டி ஶத்ருபக்ஷம் மண்ணுண்ணும்படி

f (வரிசிலை வானவரேறே) த₃ர்ஶநீயமான வில்லையுடைய வானவரேறே! ராக்ஷஸரை நிரஸித்து அநுகூலனான ஸ்ரீவிபீ₄ஷணாழ்வானை வைத்தாப்போலே இந்த்₃ரனுடைய g அமராவதியை த₄ரிப்பித்து இந்த்₃ரனுக்கு ஸ்வர்க்க₃லோகத்தையும் கொடுத்தபடி. (மாமுனியித்யாதி₃) முனிகளாகிறார் மநநஶீலரிறே. h ''நினைந்திருந்தே சிரமம்தீர்ந்தேன்'' i 17. ''एहि पश्य शरीराणि' (ஏஹி பஶ்ய ஶரீராணி) இத்யாதி₃. எங்கள் பக்க

[எரியும் நெருப்புப்போன்றவையும், கூர்மையானவையும், பொன்னால் அலங்கரிக்கப்பெற்றவையுமான அம்புகளைக்கொண்டு ராமனாலே நீ கொல்லப்படுவதை நான் காணவிரும்பவில்லை.] என்று விபீ₄ஷணனும் எரியும் நெருப்புப் போன்ற அம்புகளாலே ராவணன் அழியப் போவதை அவனுக்கு உணர்த்தினானன்றோ. (வரிசிலை வானவரேறே) அழகிய வில்லையுடைய வானவர்தலைவனே! அரக்கரை அழித்து, அன்பனான விபீ₄ஷணனுக்குப் பட்டாபி₄ஷேகம் செய்வித்தது போலே, இந்திரனுக்கும் அழிந்து கிடந்த அவன் தலைநகரான அமராவதியைப் புனருத்₃த₄ாரணம் செய்து அவனுக்கு ஸ்வர்க்க₃லோகத்தையும் கொடுத்ததை 'வானவரேறே!' என்னும் பத₃த்தால் உணர்த்துகிறார். (மாமுனி வேள்வியைக் காத்து) மாமுனியான விஶ்வாமித்திரருடைய யாக₃த்தை ரக்ஷித்து. 'முனிவர்' என்னும் பத₃ம் எப்பொழுதும் மனனம் (சிந்தனம்) செய்பவரைக் குறிக்கும். ''நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன்'' [பெரியாழ் திரு 5-4 8] என்கிறபடியே எம்பெருமானையே மனனம் செய்து அவனாலே தங்களுடைய தாபங்களை ஆற்றிக்கொள்கிறவர்கள் 'மாமுனிகள்' ஆகிறார்கள்.

17. ஏஹி பஶ்ய ஶரீராணி முநீநாம் பா₄விதாத்மநாம் ।
ஹதாநாம் ராக்ஷஸைர் கோ₄ரைர் ப₃ஹூநாம்
ப₃ஹுதா₄ வநே ॥ [ரா-ஆ 6-16.]

அம்புகள் அழகாயிருக்குமா போலே ''வரிசிலை''யென்று வில்லும் அழகாயிருக்குமென்றபடி; g (அமராவதீ) இந்த்₃ரனுடைய பட்டணம். h (நினைந்திருக்கை) ரக்ஷகனாக நினைக்கை. i அப்படி நினைத்திருப்பார்களோவென்ன அருளுகிறார் (ஏஹிபஶ்யேத்யாதி₃

யாவைரிடுக்கை உடையராய், திருவயோத்₄யைக்கு நிர்வாஹகராய் வைத்து அவ்வவதாரத்துக்குப்பிற்பாடருமிழக்க வேண்டாதபடி

ஆர்ள்ளதெல்லாம் குழைச்சரக்கு; உன் அம்பு பார்த்திருந்தோமென்ன வல்லவர்களிறே; அப்படிப்பட்ட மஹர்ஷிகள் வந்தாலோ போகலாவது? (மாமுனி வேள்வியைக்காத்து) லங்கையை அழிக்கைக்கடியான வீரஶ்ரத்₃தை₄யைச் சொல்லுகிறார். தந்தாம் கார்யங்களைத் தாந்தாமே மநநம்பண்ணுமவர்கள் முனிகள்; இவனுக்கு மாமுனித்வமாவது-தன்னுடைய தபஸ்ஸையழியமாறி அவர்களை ஶபித்து, தன்னுடைய பாரதந்த்ர்யத்தையுமழித்து, ப₄க₃வத்ஸ்வாதந்த்ர்யத்தையுமழியாதே. சக்ரவர்த்தித்திருமகனைக்கொண்டே கார்யம் தலைக்கட்டிக்கொள்ளுகை. அத்₄வரத்ராணம்பண்ணி அவரைக்கொண்டே அவப்₄ருத₂ஸ்நாநம் பண்ணி அதுக்

[ராம! (இங்கு) வருவாயாக; பரமாத்மாவை தியானம் செய்பவர்களும், வனத்தில் கோ₄ரமான ராக்ஷஸர்களால் பலவித₄மாக ஹிம்ஸிக்கப்பட்டவர்களுமான பல முனிவர்களுடைய ஶரீரங்களைப் பார்ப்பாயாக.] என்கிறபடியே "எங்களுக்கு எங்களை ரக்ஷித்துக்கொள்ள வல்லமையில்லை; உன்னுடைய அம்பைக்கொண்டே எங்களை ரக்ஷித்துக்கொள்ள விரும்புகிறோம்" என்று சொல்லுகிறவர்களே மாமுனிகள் ஆவார். "அப்படிப்பட்ட மஹரிஷிகள் வந்தால்தான் எழுந்திருந்து வருவாயோ?" என்று கருத்து. (மாமுனி வேள்வியைக் காத்து) இலங்கையை அழிப்பதற்குக் காரணமான வீரத்தில் உறுதியைச் சொல்லுகிறார். தம்முடைய காரியங்களைத் தாமே எண்ணிச் செய்கிறவர்கள் முனிகள். விஶ்வாமித்ரர் ப்₃ரஹ்மரிஷியாவதற்குமுன் தம்முடைய தவத்தையெல்லாம் செலவிட்டு, தம்முடைய விரோதி₄களுக்குச் சாபம் கொடுத்து, தன்னுடைய ப₄க₃வத்பாரதந்த்ரியத்தையும் அழித்து, எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ரியத்தையும் அழிக்கும் முனியாகவே இருந்தார். ப்₃ரஹ்மரிஷியான பின்பு இப்படியெல்லாம் செய்யாமல் சக்ரவர்த்தித் திருமகனைக்கொண்டே தன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்பவரானார். அதனாலேயே அவர் இங்கு மாமுனி

(அவரைக்கொண்டு) என்றது—பெருமாளுடைய திறலானது பெருமாளைக்கொண்டு அவனை அவப்₄ருத₂ஸ்நாநம் பண்ணுவித்த

திருவயோத்₄யையிலுங்காட்டில்கோயிலே விரும்பின ஸர்வாதி₄க

கீடான ப்ரதிபக்ஷத்தை முடிக்கைக்கடியான திறலையுடைய பராபி₄ப₄வநஸாமர்த்₂ய முடையருமாய், 18. "दशवर्षसहस्राणि" (த₃ஶவர்ஷஸஹஸ்ராணி) என்றுப்போலே தீர்த்₂ம் ப்ரஸாதி₂க்கையன்றிக்கே, பிற்பாடராளும் பெறும்படியாகக் கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற இதுக்கு ப்ரயோஜநம் வேண்டாவோ? விரோதி₄நிரஸநம் பண்ணிற்றோமாகில் இனி யென்னென்று கிடக்கலாமோ? அப்படியே ராக்ஷஸராலே

எனப்படுகிறார். (வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய அயோத்தியெம் அரசே) அந்த மாமுனியினுடைய யாகத்தை ரக்ஷித்து அவரைக்கொண்டு யாகத்துக்கு அவப்₄ருத₂ஸ்நானம் செய்துகொள்ளும்படி செய்து அதற்குத் தக்கவாறு எதிரிகளை அழிக்கைக்கு உறுப்பான "பராபி₄ப₄வநஸாமர்த்₂யம்" [எதிரிகளை அடக்கும் திறமை] எனப்படும் ப₃லத்தை உடையவராய்.

18\. த₃ஶவர்ஷஸஹஸ்ராணி த₃ஶவர்ஷ ஶதாநி ச ।
ராமோ ராஜ்யமுபாஸித்வா ப்₃ரஹ்மலோகம் க₃மிஷ்யதி ॥
[ரா–பா₃ 1-97]

[பதினோராயிரம் வருடம் ராமபிரான் ராஜ்யத்தை ஆண்டு பரப்₃ரஹ்மமாகிற தன் லோகத்தை அடைவான்.] என்கிறபடியே நீண்ட காலம் அரசாட்சி செலுத்திய எம்பெருமானே! மாமுனி வேள்வியைக்காத்தது, அவபிரதம் ஆட்டுவித்தது ஆகியவற்றைத் திறலின் செயலாகவும் கொள்ளலாம். அல்லது அயோத்திக்கு அரசனின் செயல் என்றும் கூறலாம். "அவரைக் கொண்டே" என்று பெரியவாச்சான்பிள்ளை அருளியதற்கு 'பெருமாளைக்கொண்டு' என்று அரும்பத உரையில் விவரிக்கப்பட்டது. "எம் அரசே" என்றதால் அந்த ராமபிரானைப் போலே ஒருகாலத்தில் அவதாரத்தை முடித்துக் கொண்டு பரமபத₃த்திற்கு எழுந்தருளாமல், பிற்பட்ட எங்களைப் போன்றவர்களும் அநுப₄விக்கலாம்படியாகக் கோயிலிலே பள்ளி கொண்டிருக்கும் இதற்குப் பயன்வேண்டாமோ? "விரோதி₄களான அரக்கரை அழித்துவிட்டோம். இனிச்செய்யவேண்டியதில்லை" என்று படுத்திருக்கலாமோ? அப்போது அரக்கராலே துன்புற்ற

தென்று திறலுக்கு விஶேஷணம்; அப்படிப்பட்ட திறலுடையவரென்றபடி.

5. புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தன ராதலி லம்மா!
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

பதவுரை:— பூ— பூத்திருக்கும், பொழில்களின் வாய் — சோலைகளிலுள்ள, புட்களும்— பறவைகளும், புலம்பின— (உணர்ந்து) ஆரவாரம் செய்யாநின்றன; கங்குல்— இர வானது, போயிற்று - கழிந்தது; புலரி—காலைநேரம், புகுந்

ரான தேவரீர் உணர்ந்தருளி அடிமைகொண்டருளவேணும் என்கிறார். 4

ரீடிதரான தேவஜாதிகள் வந்தால் உங்களுக்கு நான் செய்தபடி அழகிதோவென்று வினவியருள வேண்டாவோ? என்கிறார். 2*. ''उत्तिष्ठ नरशार्दूल'' (உத்திஷ்ட நரஶார்தூல) என்று கொண்டு பண்டேயெழுப்பின ரிஷிகள் வந்தெழுப்பி னாலோ தேவரீர் திருப்பள்ளி உணர்ந்தருளப் பார்க்கிறது? அடியோங்களை ரக்ஷிக்கைக்காக எழுந்திருந்தாலாகாதோ? 4.

தேவர்கள் இப்போது வந்திருக்கும்போது ''உங்களுடைய விரோதிகளை நான் நன்ருகப் போக்கிவிட்டேனு?'' என்று கேட்டருள வேண்டாமோ? என்னும் கருத்துக்கள் உணர்த்தப்படுகின்றன. (அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே) 22-வது பக்கத்திலுள்ள 2* ப்ரமாணத்தின்படி முன் எழுப்பின விஶ்வாமித்ரர் போன்ற மஹரிஷிகள் வந்து எழுப்பினுல்தான் பள்ளியெழுந்தருள்வீரோ? அடியோங்களை ரக்ஷிப்பதற்காகப் பள்ளியெழுந்திருக்கலாகாதோ? என்று கருத்து. ''அயோத்தி யெம்மரசே அரங்கத்தம்மா'' என்றதற்கு திருவயோத்தியைக் காட்டிலும் திருவரங்கத்தை விரும்பின எம்பெருமானே! என்று தமிழ்ப் ர் உரை அருளிச் செய்வர். 4

தது - வந்தது; குணதிசை - கீழ்த்திசையிலே, கனை - கோ₄ஷஞ் செய்கின்ற, கடல்—கடலினுடைய, அரவம் — ஓசையானது, கலந்தது—வியாபித்தது; களி—தேனைப் பருகிக் களிக்கின்ற, வண்டு-வண்டுகளானவை,மிழற்றிய-ஶப்₃தி₃க்கப்பெற்றதாய், கலம்பகம் புனைந்த-பலவகைப்பூக்களாலே தொடுக்கப்பட்டதாய், அம்—அழகியதான, அலங்கல் தொடையல் கொண்டு—அலங்கல் மாலைகளை ஏந்திக்கொண்டு, அமரர்கள் — தே₃வர்கள், அடி இணை பணிவான் -(தேவரீருடைய) திருவடியிணைகளில் வணங்குவதற்காக, புகுந்தனர்-வந்து நின்றனர்; ஆதலில்—ஆகையாலே, அம்மா—ஸர்வஸ்வாமின்! இலங்கையர் கோன் வழிபாடு செய்கோயில் — லங்கேஶ்வரனான விபீ₄ஷணாழ்வான் த₃ாஸவ்ருத்திபண்ணப்பெற்ற கோயிலிலே (கண் வளர்ந்தருளுகிற), எம் பெருமான்! — எங்கள் ஸ்வாமியே! பள்ளி எழுந்தருளாயே—

---

அவ:— ஐந்தாம்பாட்டு. தே₃வஜாதியானது கற்பகங்களில் பூக்களெல்லாந் தொடுத்து மந்த்ரபுஷ்பம் பண்ணிப் பரிமாறுகைக்காக "அருள் பாடிடுவது எப்போதோ" என்று அவஸர

---

அவ: — ஐந்தாம்பாட்டு. (புலம்பினவித்யாதி₃) முன்னில் பாட்டிலே- ''வயலுளிரிந்தன சுரும்பினம்'' என்றது; இப்பாட்டிலே-போதுவைகினல் உணரக்கடவதான பக்ஷிகளுமுணர்ந்தன என்கிறது. முன்னில்பாட்டில் உணர்ந்த

---

5. அவ:— "தேவர்கள் கற்பகமரங்களின் பூக்களைக்கொண்டு மாலை தொடுத்து வேதமந்திரங்களைச் சொல்லிச் சாத்தித் தொண்டு புரிவதற்காக 'எம்பெருமான் நியமிப்பது எப்போதோ?' என்று எதிர் பார்த்துக்கொண்டு வந்து நின்றுர்கள்; தேவரென்றும், அரக்கரென்றும், மனிதரென்றும் ஏற்றத்தாழ்வு பாராமல் அடிமைகொண்டருளும் தேவரீர் பள்ளியெழுந்து அடியோங்களுடைய கைங்கரியத்தை ஏற்றுக்கொள்ளவேணும்'' என்கிறுர். முன் பாட்டிலே "வயலுள் இரிந்தன சுரும்பினம்'' என்று வயலிலுள்ள வண்டுகள் உணர்ந்ததைக் குறித்தார். இப்பாட்டில் வயலுக்குள்ளே இருக்கும் சோலை

ப்ரதீக்ஷராய் வந்து நின்றார்கள்; ஜந்மாதி₃களில் தாழ்வு ஏற்றம் பாராதே அடிமை கொண்டருளும் தேவரீர் உணர்ந்தருளி அடிமை கொண்டருள வேணுமென்கிறார்.

வ்யா:—(புலம்பினவித்யாதி₃) திருச்சோலையில் பக்ஷிகளானவை உணர்ந்து ஆரவாரியாநின்றன. (போயிற்றுக்கங்குலித்

---

வற்றுக்கும் இப்பாட்டிலுணர்ந்தவற்றுக்கும் ப₄க₃வத் ப்ரவணர்க்கும் ஸம்ஸாரிகளுக்குமுள்ள வாசிபோருங்காணும். வயலிலுள்ளவைபோலன்றிறே; சோலையாய் அதிலே பூம்பொழிலாயிருக்கச்செய்தே உணருகிறனவிறே. போதுவைகினபடி.

வ்யா:— (புலம்பின புட்களும்) "வண்டினமுரலுஞ் சோலை மயிலினமாலுஞ் சோலை கொண்டல்மீதணவுஞ் சோலை" என்றாரிறே. அவையெல்லாம் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே சில பாட, சில ந்ருத்தகீ₃த வாத்₃யங்கள் பண்ண, அதுக்கு இசையச் சிலராடச் சிலர் கொண்டாடவிருந்ததிறே

---

களில் இனிதாக உறங்குகின்றனவாய்,போது விடிந்த பின்பே உணரக்கூடியவையான பறவைகளும் உணர்ந்தன என்கிறார். சென்ற பாட்டில் உணர்ந்தவற்றிற்கும் இப்பாட்டில் உணருபவைகளுக்கும் உள்ள வாசி எம்பெருமானிடம் ஈடுபட்டவர்களுக்கும், ஶப்₃த₃ம் முதலான விஷயங்களில் ஈடுபட்டிருக்கும் ஸம்ஸாரிகளுக்கும் உள்ள வாசி போன்றது. வண்டுகள் வயலில் உள்ளவையாகையாலே ஸூர்யன் உதித்தவுடன் எழுந்துவிடும். சோலையாய் அதிலும் பூஞ்சோலையாயிருக்கும் இங்கு வாழும் பறவைகள் பொழுது விடிந்த பின்பே உணரும்.

வ்யா:— (புலம்பின புட்களும்) "வண்டின முரலுஞ் சோலை மயிலின மாலுஞ்சோலை கொண்டல் மீதணவுஞ் சோலை குயிலினம் கூவுஞ் சோலை" [திருமாலை 14] என்று இவர் திருமாலையில் அருளியபடியே திருவரங்கத்திலே எல்லாக்காலத்திலும் வண்டுகள் பேரானந்தத்தாலே பாடவும், மயில்கள் அதற்குத்தக்கபடி நடனமாடவும், மேகங்கள் தூரியம் முழங்கவும், குயில்கள் கொண்டாடவுமா

யாதி$_{3}$) ஸர்வரையுமபி$_{4}$பவிக்கக்கடவ தமஸ்ஸுக்கு ஆச்ரயமான ராத்ரியானது வாஸனையோடே போய்த்து. (புகுந்தது புலரி) ஸத்வோத்தர மாகையாலே ஆராத$_{4}$ன யோக்$_{3}$யமான காலமும் ஸந்நிஹிதமாய்த்து. (கலந்ததித்யாதி$_{3}$) கீழைத்திக்கிலே கோ$_{4}$ஷிக்கையே ஸ்வபா$_{4}$வமான ஸமுத்$_{3}$ர கோ$_{4}$ஷம் எங்கும் வ்யாபித்தது.

---

அங்கு; இங்கு "பெரியபெருமாள் இப்போது வைகவும் பள்ளிகொள்வதே!" என்று கூப்பிடுமாபோலே இருக்கிறது. (போயிற்றுக்கங்குல்) முன்புபோலே அகன்ற மாத்ரமேயன்றிக்கே ராத்ரியானது நிஶ்ஶேஷமாய்த்து; புகுந்தது a புலரி) தமஸ்ஸு நேராகப்போனால் பின்பு ஸத்வமேயாயிருக்குமாபோலே. b ஆகையாலிறே "பகற்கண்டேன்" என்றது. c (கலந்தது குணதிசைக் கனைகடலரவம்) கோ$_{4}$ஷமாத்ரமன்றிக்கே எங்குமொக்க வ்யாபித்தது.

---

யிருக்கும். இங்கு இப்போது பறவைகள் புலம்புவது "பெரிய பெருமாள் இப்படி விடிந்த பின்பும் பள்ளிகொள்வதே!" என்று கூவுவதுபோல உள்ளது. (போயிற்றுக் கங்குல்) அனைவரையும் தூக்கத்தில் ஆழ்த்தக்கூடிய இருளுக்கு இருப்பிடமான இரவானது "பாயிருளகன்றது" என்று மூன்றாம்பாட்டில் சொன்னது போல அகன்றது மாத்திரமல்லாமல் அடியோடு போயிற்று. (புகுந்தது புலரி) தமோகு$_{3}$ணத்தை வளர்க்கும் இருள் அடியோடு போனால் பின்பு ஸத்வகு$_{3}$ணத்தை வளர்க்கும் காலை நேரம் வருவதே இயல்வன்றோ. "பகற் கண்டேன் நாரணனைக் கண்டேன்" [இர. திருவ 81] என்று ஸத்வகு$_{3}$ணத்தினால் உண்டாகும் ப$_{4}$க$_{3}$வத்ஸாக்ஷாத்காரம் 'பகல்' எனப்பட்டதன்றோ. உமது திருவாராத$_{4}$னத்திற்குத் தகுதியுள்ள காலை நேரம் வந்துவிட்டது என்றும் கருத்து. (கலந்தது குணதிசைக் கனைகடலரவம்) கீழைத்திக்கில் முழங்குவதையே இயல்வாகக்கொண்ட கிழக்குக்கடலின் ஒலி வெறும் முழக்கமாயிராமல் உமக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுவதுபோல எங்கும் வியாபித்தது.

---

அரு:— ஐந்தாம்பாட்டு. (புலம்பினவித்யாதி$_{3}$) a புலரி–விடிவு; b விடிவென்றால் ஜ்ஞானத்தைக் காட்டுமோ? என்ன அருளிச்செய்கிறார் (ஆகையாலிறேயித்யாதி$_{3}$) c ஸமுத்$_{3}$ரம் மிகவும் த்$_{4}$வநிக்கை விடிவுக்கடையாளம்.

(களிவண்டித்யாதி$_3$) மது$_4$பாநம் பண்ணிக் களிக்கிற வண்டுகளோடே கூடின நாநாவித$_4$ புஷ்பங்களைத் தொடுத்து அந்த மாலைகளை ஏந்திக்கொண்டு தேவர்களுடைய எல்லார்க்கும் நாத$_2$னான தேவரீர் திருவடிகளிலே சாத்துகைக்கு அருள் பாடிடுவது எப்போதோவென்று புகுந்து நின்றார்கள்.

---

(களிவண்டித்யாதி$_3$) d உறவு முறையாரைப் பட்டினிவிட்டு விருந்தூணரைக் d$_2$ காலும் கலமும் வைத்து ஊட்டுவாரைப் போலேயிறே தேவரீர்படி,

ப்ரயோஜநாந்தரபரரான தே$_3$வர்கள் தந்தாம் பத$_3$ப்$_4$ரம்சம் வாராமைக்காக, நன்றாய்ச் செறிந்து வண்டுகள் மது$_4$பாநம் பண்ணிக் களித்துப் பாடிக்கொண்டு ஸேவியாநிற்பதாய், கலம்பகனாயிருந்துள்ள தொடையலங்கல்கள் கொண்டு வந்தார்கள்; அவர்களுக்காகிலும் முகங்கொடுத்தருளீரோ? என்கிறார். ( ஆதலில் e அம்மா ) என்மாலை சாத்தாதபோதும்

---

(களிவண்டு மிழற்றிய.........அமரர்கள் புகுந்தனர்) தேனைப் பருகிக் களிக்கிற வண்டுகளோடே கூடிய பலவிதமான தேவலோக புஷ்பங்களாலே தொடுக்கப்பெற்ற கதம்பமாலைகளை ஏந்திக் கொண்டு தேவர்கள் அனைவரும் தேவாதி தேவனான தேவரீருடைய திருவடிகளில் சாத்துவதற்காக உம்முடைய நியமநத்தை எதிர்பார்த்து வந்து நின்றார்கள். வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகள் பட்டினிகிடந்தாலும் விருந்தாளிகளுக்கு விருந்திட்டு வெற்றிலைபாக்கு முதலானவற்றைக் கொடுத்து உபசரிப்பவர்களைப் போன்ற இயல்புகொண்டவரன்றோ தேவரீர். எங்களுக்காக அல்லாவிடினும் விருந்தாளிகளான அந்தத் தேவர்களுக்காகவாவது முகங் கொடுத்தருளவேணும். மற்ற பயன்களை விரும்புகின்றவர்களாய், தங்களுடைய பதவி நழுவாமலிருப்பதற்காக வந்து பணிபவர்களன்றோதேவர்கள். (ஆதலில் அம்மா) ஆகையாலே அனைவருக்கும் ஸ்வாமியான தேவ

---

dதமக்கு முகங்கொடாமல் ப்ரயோஜநாந்தர பரர்க்கு முகங்கொடுக்கையைப் பற்ற அருளிச்செய்கிறார் (உறவு முறையாரித்யாதி$_3$). d$_2$(கால்)தாலக்கால்; e அம்மானுதல். அம்மானுகையாலே மாலை சாத்தவேணும். ... ... 5.

(ஆதலில்) ஆகையாலே, பராவரேஶரான தேவரீர்—(இலங்கையர்கோனித்யாதி₃) ராவணநுஜனென்று பாராதே லங்காதி₄பதியான ஸ்ரீ விபீ₄ஷணாழ்வானாலே கொண்டாடப்பட்ட கோயிலிலே அஸ்மதா₃தி₃களுக்கு முகந்தரவிருக்கிற தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளவேணுமென்கிறார். அத₂வா, ஸ்ரீ விபீ₄ஷணாழ்வானை அடிமைகொண்டாப்போலே அடியோங்களையும் அடிமைகொண்டருளவேணும் என்கிறாராகவுமாம். 5.

''என்னையனன்று'' என்னவொண்ணாதிறே. இப்படி விண்ணப்பஞ்செய்யும் இவர்பேச்சு இனிதாயிருந்தவாறே பள்ளிகொண்டருள; (இலங்கையர்கோன் வழிபாடுசெய் கோயில்) பள்ளிகொண்டருளவேணுமென்றவன் தானே வந்து ''எழுந்திரும்'' என்றாலோ திருப்பள்ளியுணர்ந்தருளுவது? வழிபாடு செய்கையாவது—திருவுள்ளக்கருத்தறிந்து அடிமைசெய்கையிறே. (இலங்கையர்கோன் வழிபாடுசெய்கோயில்) இதுவுமோரேற்றமிறே இங்குத்தைக்கு; (எம்பெருமான்) ஆஶ்ரிதபராதீ₄நரான தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளவேணுமென்கிறார். ... 5.

**ரீர்; என்னுடைய மாலையை ஏற்றுக்கொள்ளாதபோதும் நீர் என்னுடைய ஸ்வாமியன்று என்று சொல்லமுடியாதே. [ஸ்வாமி என்றே வ்யாக்₂யானம் செய்கையாலே, 'அம்மான்' 'அரங்கத்தம்மான்' என்ற பாடம் பொருத்தமாயுள்ளது] இப்படி விண்ணப்பம் செய்யும் இவருடைய பேச்சு இனிதாயிருக்கையாலே அதைக் கேட்டுக்கொண்டு கண் திறக்காமல் இருந்தார் பெரிய பெருமாள். அதற்காக விண்ணப்பிக்கிறார்—(இலங்கையர்கோன் வழிபாடு செய் கோயில்) இராவணனின் தம்பி என்னும் தாழ்வையும் பாராமல் உம்மால் இலங்கை அரசனாக நியமிக்கப் பெற்று, உம்மை இங்கே அழைத்து வந்து 'பள்ளிகொண்டருள வேணும்' என்ற விபீஷணன் தானே வந்து ''பள்ளியெழுந்தருள் வீர்'' என்றால்தான் பள்ளியெழுந்தருள்வீரோ? வழிபாடு செய்கையாவது எம்பெருமானுடைய திருவுள்ளக் கருத்தை அறிந்து கைங்கர்யம் செய்வதன்றோ ''ஸ்ரீராமபிரானிடமிருந்துகுலத₄னமான உம்மைப் பெற்று இலங்கைக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்ற விபீஷணனின் எண்ணத்தை மாற்றி இங்கேயே பள்ளிகொண்டது எங்களைப்போன்றவர்களுக்கு அருள்புரிவதற்கன்றோ; விழித்தெழுந்**

6. இரவியர் மணிநெடுந் தேரொடு மிவரோ
இறையவர் பதினொரு விடையரு மிவரோ
மருவிய மயிலின னறுமுக னிவனே
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டி
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்
அருவரை யனையநின் கோயில்முன் னிவரோ
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே.

பதவுரை — மணி—சிறந்ததாய், நெடு — பெரிதான, தேரொடும் — தேரோடுகூட, இரவியர் — பன்னிரண்டு ஆதித்யர்களும், இறையவர்-ஸம்ஸாரிகளுக்கு நிர்வாஹகர்களான, பதினொரு விடையரும்-ஏகாதசருத்ரர்களும், மருவிய-பொருந்திய, மயிலினன்—மயில்வாஹநத்தையுடைய, அறுமுகன் — ஸுப்ரஹ்மண்யனும், மருதரும் — மருத்கணங்களான நாற்பத்தொன்பதின்மரும், வசுக்களும்-அஷ்டவஸுக்களும், வந்து வந்து —ஒருவர்க்கொருவர் முந்திக்கொண்டு வந்து, ஈண்டி—நெருங்கி நிற்க, (இவர்களுடைய வாஹநமான) புரவியோடு தேரும்—குதிரைகள் பூண்ட ரதங்களும், பாடலும் ஆடலும்— பாட்டும் ஆட்டமுமாய், குமரதண்டம் புகுந்து—தேவஸேநா ஸமூஹங்கள் வந்து புகுந்து, ஈண்டிய வெள்ளம்—நெருங்கியிருக்கிற திரளானது, அரு வரை அனைய-பெரிய மலைபோன்ற, கோயில்-கோயிலில், நின்முன்-தேவரீர் திருக்கண்ணோக்கத்திலே, இவரோ, இவனோ-இதோ நிற்கின்றனர். அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்—.

---

எங்களுக்கு அருள்புரியவேண்டும்'' என்று கருத்து. விபீஷணனை வானை அடிமைகொண்டதுபோலே அடியோங்களையும் அடிமை கொண்டருள வேணும் என்று நஞ்ஜீயர் கருத்துரைப்பர். (எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே) ஸ்ரீரங்கமாஹாத்மியத்தின்படி விபீஷணனை அடியானுக்கு வசப்பட்டிருக்கும் தேவரீர் அடியோங்களுடைய பிரார்த்தனையை ஏற்றுப் பள்ளியெழுந்தருள வேணும் என்கிறார்.

அவ:—ஆறும்பாட்டு. தே₃வஸேநாபதியோடே கூட, ஜக₃த்துக்கு நிர்வாஹகரான ஸகல தே₃வதைகளும் ஸபரிகரராய்க் கொண்டு ஸ்வாபி₄மத ஸித்₃த்₄யர்த்த₂மாக ஆஶ்ரயிக்க வந்து நின்றார்கள்; தேவரீர் உணர்ந்தருளி விஶேஷகடாக்ஷம் பண்ணியருளவேணுமென்கிறார்.

வ்யா:—(இரவியரித்யாதி₃). த்₃வாத₃ஶாதி₃த்யர்கள் தங்களுடைய விலக்ஷணமாய்ப் பெரிதான தேரோடே வந்தார்கள்

---

வ்யா: — ஆறும்பாட்டு. (இரவியரித்யாதி₃) தேவரீர் பணிக் கடைத்த ஆதி₃த்யனேயன்றிக்கே, மற்றும் சோம்பியிருக் கிற ஆதி₃த்யர்களும் வந்தார்கள், a (இறையவரித்யாதி₃) 19. b' पशूनामधिपतिः'' (பஶூநாமதி₄பதி:) என்கிறபடியே - நான்

---

6. அவ:—''தே₃வஸேநாபதியான முருகனோடுகூட உலகை ஆட்சி புரியும் எல்லா தேவர்களும் தங்களுடைய வாஹநம் முத லான பரிகரங்களோடுகூடத் தங்கள் விருப்பம் நிறைவேறுவதற் காக தேவரீரை ஆஶ்ரயிக்க வந்து நின்றார்கள். உணர்ந்தருளி அவர்களுக்கு விசேஷகடாக்ஷம் செய்தருளவேணும்'' என்கிறார்.

வ்யா:—(இரவியர்மணி நெடுந்தேரொடும் இவரோ) ''கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்'' [திருப்பள்ளி–1] என்று தேவரீரால் நியமிக்கப்பட்டு உதித்து மறையும் ஸூர்யன் மாத்தி மல்லாமல், சோம்பியிருக்கிற மற்ற ஆதி₃த்யர்களும் வந்தார்கள் இன்னமும் படுத்திருக்கலாமோ? என்று கருத்து. (இறையவ பதினொரு விடையருமிவரோ) உலகை நிர்வஹிக்கும் பதினொ உருத்திரர்கள் தங்களுடைய வாஹநங்களோடுகூட வந்து நின் றார்கள். விடையர்–ருஷப₄வாஹனர். (இறையவர்)

19. ஸோऽப்₃ரவீத் வரம் வ்ருணை அஹமேவ
பஶூநாமதி₄பதிரஸாநீதி தஸ்மாத்₃ ருத்₃ர:
பஶூநாமதி₄பதி:|| [யஜு-ஸம் 6 2-3]

[''நானே பசுக்களைப்போன்ற ஸம்ஸாரிகளுக்கு அதி₄பதியாயிருக் கக்கடவேன் என்னும் வரத்தை நான் தே₃வர்களான உங்களி

---

அரு:- ஆறும்பாட்டு. (இரவியரித்யாதி₃) a,b ''இறையவர் என்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (பஶூநாமித்யாதி₃

(இறையவரித்யாதி3) ஜக3த்துக்கு நிர்வாஹகரான ஏகாத3ஶ ருத்3ரர்கள் தங்களுடைய வாஹநங்களான ருஷபங்களும் தாங்களுமாக வந்து நின்றார்கள். (மருவியவித்யாதி3)தே3வஸேநாதிபதியான ஸுப்3ரஹ்மண்யன் தன் வாஹநமான மயிலும் தானுமாய் வந்து நின்றான். (மருதருமித்யாதி3) தே3வதாவிஶேஷமான மருத்3க3ணங்கள் நாற்பத்தொன்பதின்மரும், அஷ்டவஸுக்களும், ஒருவர்க்கொருவர் முற்கோலிக்கொண்டு வந்து திரண்டனர்.

---

கேவலம் பஶுஸமராயிருப்பார்க்குக் கடவனாகவேணுமென்றானிறே. (மருவிய மயிலினன்) அவர்கள் தேர்களினின்றும் ருஷபங்களினின்றும் இழியவுங்கூடும்; இவனை மயிலோடே கூடக் கருப்பிடித்தது என்னும்படியாயிருக்கை. தே3வஸேநாபதியிறே. (மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி) மருத்3தே3வதைகளும், அஷ்டவஸுக்களும், முற்பட்டார் முற்பட்டபடியே வந்து திரண்டு. (புரவியோடித்யாதி3) தேர் ப்ரஸ்துதமாகையாலே தேர்பூண்ட புரவியென்னவுமாம்.

---

மிருந்து வரிக்கிறேன்'' என்று அந்த ருத்3ரன் உரைத்தான்.]

என்கிறபடியே ''நான் பசுக்களை ஒத்திருப்பாருக்குப் பதியாக வேண்டும்'' என்று தேவர்களிடம் வரம் வேண்டினானன்றோ உருத்திரன். (மருவிய மயிலினன் அறுமுகனிவனே) தேவஸேநாபதியான முருகன் தன் வாஹநமான மயிலும் தானுமாய் வந்து நின்றான். 'மருவிய' என்கையாலே ஆதி3த்யர்கள் தங்கள் தேர்களிலிருந்தும், உருத்திரர்கள் ரிஷபங்களிலிருந்தும் இறங்கினாலும், முருகன் மயிலை விட்டு இறங்காமையாலே 'மயிலோடு கூடவே பிறந்தவனோ?' என்று தோன்றுகிறது—என்னும் கருத்து உணர்த்தப்படுகிறது. (மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி) தேவதைகளில் ஒரு வகையினரான மருத் (வாயு)க3ணங்கள் நாற்பத்தொன்பது பேரும், எட்டு வஸுக்களும், ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு வந்து திரண்டனர். (புரவியோடாடலும் பாடலும் தேரும்) 'புரவியோடு தேரும்' என்று தேவர்களுக்கு வாஹனமான குதிரைகளையும் தேர்களையும் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

(புரவியோடித்யாதி) தேவர்களுடைய வாஹநமான புரவி பூண்ட தேரும் பாட்டுக்களும் ஆட்டமுமாய், தேவஸேநாபதி

---

அன்றியே, அவ்வவரேறிவந்த வாஹநமென்னவுமாம். (குமர தண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்) "தேவஸேநாபதி" என்று முன்னே சொல்லுகையாலே, "குமரன்" என்று அவன்பேராய், "தண்டம்" என்று-தண்டுக்குப்பேராய், இத்தால்-தேவஸேநாஸமூஹத்துக்குப்பேராய், தேவஸேநாபதி வந்தால் தேவஸேநையும் வரக்கடவதிறே. அங்ஙனன்றியே தேவ ஜாதியாகையாலே ஷோடஶவயஸ்கராயிருப்பர்களிறே. இனி c "தண்டம்" என்கிறது - அவ்வவருடைய பெரியதிரளை; அவ்வவராயுத பேதங்களையென்னவுமாம்.

(ஈண்டியவெள்ளம்) நால்வரிருவரோ? வெள்ளமாயன்றோ கிடக்கிறது? (அருவரையித்யாதி) அணியினார் செம்பொனாய அருவரையனைய கோயிலிறே. த்வாதஶாதித்

---

அல்லது குதிரை பூட்டிய தேரைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். போகத்தை விரும்பும் தேவர்களாகையாலே ஆடல் பாடலோடு வந்து நிற்கிறார்கள். (குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்) 'அறுமுகன்' என்று முன்னடியில் எடுக்கையாலே, 'குமரன்' என்பது அவனுடைய மற்றொரு பெயராய், 'தண்டம்' என்று அவனுடைய ஸேனையைச் சொல்லுவதாய், தேவஸேநாபதியாகிய அவனோடு கூட அளவிடவொண்ணாத திரளாய் தேவஸேனையும் வந்தது என்று கருத்து. அன்றிக்கே, 'குமர' என்னும் பதம் என்றும் பதினாறு வயதாயிருக்கும் தேவர்கள் அனைவரையும் குறிப்பதாய், 'தண்டம்' என்று அவர்களுடைய பெரிய திரளையோ, வெவ்வேறு ஆயுதங்களையுமோ குறிப்பதாகவும் கொள்ளலாம்.

(ஈண்டிய வெள்ளம்) நால்வரிருவரோ? கணக்கிட முடியாதபடி வெள்ளமாயன்றோ திரண்டு கிடக்கிறது; (அருவரையனைய நின் கோயில்) "அணியினார் செம்பொனாய அருவரையனைய கோயில்"

---

c (தண்டம்) ஸமூஹமாதல், ஆயுதமாதல்.

யான ஸுப்3ரஹ்மண்யனோடே திரண்டு பரிச்சேத்3க்கவொண்ணுதபடி திரளாய்க்கொண்டு மஹாமேருவை ஒத்திருந்துள்ள கோயிலில் திருக்கண்ணுக்கத்திலே ப்ரத2ம கடாக்ஷத்துக்காக வந்து நின்றார்கள். ப்ரயோஜநாந்தரபரரோடு அநந்ய ப்ரயோஜநரோடு வாசியற ஸர்வர்க்கும் நிர்வாஹகராய்க் கொண்டு கோயிலிலே கண் வளர்ந்தருளுகிற தேவரீர் உணர்ந்தருளி விசேஷ கடாக்ஷம் பண்ணியருளவேணும் என்கிறார். ... ... 6.

---

யர்கள், ஏகாத3ஶ ருத்3ரர்கள, தே3வஸேநாபதியான ஸுப்3ரஹ்மண்யன், மருத்துக்களாகிறதே3வதைகள், அஷ்ட வஸுக்கள், மற்றுஞ் சொல்லிச்சொல்லாத தே3வதைகளுடைய ஸபரிகரராய், தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளும் போதில் ப்ரத2மகடாக்ஷத்தை நினைத்து, ''நான்முற்பட, நான்முற்பட'' என்று எல்லாரும்திரண்டுவந்து நின்றார்கள்; திருப்பள்ளியுணர்ந்தருளிக் கடாக்ஷித்தருளவேணும் என்கிறார். .... ... 6.

---

[திருமாலை 21] என்று இவரே திருமாலையில் அருளிச்செய்தபடியே பெரிய மேருமலை போன்ற திருவரங்கம் பெரிய கோயிலைச் சொல்லுகிறது. (கோயில் முன்னிவரோ) பன்னிரண்டு ஆதித்யர்கள், பதினொரு உருத்திரர்கள், தேவஸேநாபதியான முருகன், மருத்துக்களாகிற தேவதைகள், எட்டு வஸுக்கள், இவர்களில் அடங்காத மற்ற தேவதைகள் ஆகிய அனைவரும் வாஹநம் முதலான தங்கள் பரிகரங்களோடுகூட தேவரீர் திருப்பள்ளியெழும்போது முதல் கடாக்ஷத்தைப் பெறவேண்டும் என்று '' நான் முந்தி, நான் முந்தி'' என்று திரண்டு வந்து நின்றார்கள். (அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே) ''மற்ற பயன்களை விரும்புகிறவர்கள், உம்மைத்தவிர வேறுபயன் கருதாதவர்கள் ஆகிய அனைவர்க்கும் ஸ்வாமியாய், கோயிலிலே பள்ளிகொண்டிருக்கும் தேவரீர் பள்ளியெழுந்து இவர்களைச் சிறப்பாகக் கடாக்ஷிக்க வேணும்'' என்கிறார். 6.

7. அந்தரத் தமரர்கள் கூட்டங்க ளிவையோ
அருந்தவ முனிவரும் மருதரு மிவரோ
இந்திர னானையும் தானும்வந் திவனோ
எம்பெரு மானுன கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்
அந்தரம் பாரிட மில்லைமற் றிதுவோ
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே.

பதவுரை:-எம் பெருமான்—எனக்கு ஸ்வாமியான, உன் கோயிலின் வாசல்—தேவரீருடைய திருக்கோயிலின் வாசலிலே, இந்திரன் தானும்—தேவேந்திரனும், ஆனையும்—(அவனது வாஹனமான) ஐராவத யானையும், வந்து—வந்திருப்பது மன்றி, அந்தரத்து அமரர்கள்—அண்டத்துக்குள் இரா நின்ற தேவர்களும், கூட்டங்கள்—இவர்களுடைய பரிவாரங்களும், அரு தவம் முனிவரும்—மஹா தபஸ்விகளான ஸநகாதி மஹர்ஷிகளும், மருதரும்—மருத்கணங்களும், இயக்கரும் — யக்ஷர்களும், சுந்தரர் நெருக்க — கந்தருவர் நெருக்கவும், விச்சாதரர் நூக்க—வித்யாதரர்கள் தள்ளவும், திருவடி தொழுவான் மயங்கினர்—(தேவரீருடைய) திருவடிகளைத் தொழுவதற்காக வந்து மயங்கி நின்றனர்; அந்தரம்—ஆகாசமும், பார்—பூமியும், இடம் இல்லை—இடைவெளியில்லாமலிருக்கிறது; அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய்.

அவ:-ஏழாம்பாட்டு. முதற்பாட்டில் ஸங்க்ரஹேண சொன்னத்தை இப்பாட்டுத் தொடங்கி மேலில் பாட்டுக்களாலுமாக விஸ்தரிக்கிறார். கீழ்ச்சொன்ன தேவதைகளுக்கு நிர்வாஹகனான இந்த்ரனும், வித்யா ப்ரவர்த்தகரான ஸப்தருஷிகளும்,

அவ:-ஏழாம்பாட்டு. (அந்த்ரமித்யாதி) முன்னிற்பாட்டில் தேவஸேநாபதியானவன் தன் வாஹநத்தோடும் தன் பரிகரங்களோடும் வந்தமை சொல்லிற்று; இப்பாட்டில்-தேவஜாதிக்கு நிர்வாஹகனான இந்த்ரன் தன் வாஹநத்தோடே ஸபரிகரனாய் வந்தபடி சொல்லுகிறது.

...ருப்பள்ளியெழுச்சி திருவடித்தொழ ஸபரிகரராக ஆகாசாவ...ரம் இடம் அடையும்படி வந்து புகுந்தார்கள்; திருப்பள்ளி...ார்ந்தருளி இவர்களை அடிமைகொண்டருளவேணுமென்கிறார்.

வ்யா:— (அந்தரமித்யாதி₃) அபி₄மாநிகளான அந்தர ஜாதி...டையத் தங்களுடைய பரிசரமும் தாங்களும் பு₄க்₃நாபி₄மாந...த் திரண்டு வந்து நின்றார்கள். இத்தால்—கீழ்ச்சொன்ன

---

...வஜாதியை மெய்க்காட்டுக் கொள்ள தேவரீரிட்ட வகை செ...ய்வானாய் வந்தானென்கிறது; 8. "भीषास्मात्" (பீ₄ஷாஸ்மா...) இத்யாதி₃ப்படியே.

வ்யா:-"இந்திரனானையுந் தானும் வந்திவனோ" என்கிற ...ம் அர்த்த₂க்ரமத்தாலே முதலாகக்கடவது; இப்படி

---

7. அவ:—முன்பாட்டில் சுருக்கமாகச் சொன்னதை இப்பாட்டு...ம் மேல் இரண்டு பாட்டுக்களிலும் விரிவாக அருளிச்செய்கிறார். முந்திய பாட்டில் தேவஸேநாபதியானவன் தன் வாஹநத்தோடும் பரி...ரங்களோடும் வந்ததைச் சொல்லிற்று. இப்பாட்டில் தேவர் ...னவருக்கும் தலைவனான இந்திரன் தன் வாஹநங்களோடும் பரி...ரங்களோடும் வந்தபடியைச் சொல்லுகிறது. தேவர்களை ஆள்வதற்காக தேவரீர் நியமித்தபடி காரியம் செய்பவனாக இந்திரன் வந்தான் என்கிறது.

8. பீ₄ஷாऽஸ்மாத் வாத: பவதே | பீ₄ஷோதே₃தி ஸூர்ய:||
பீ₄ஷாऽஸ்மாத₃க்₃நிஶ்சேந்த்₃ரஶ்ச | ம்ருத்யுர்தா₄வதி பஞ்சம:||

[ தைத்-ஆந 8-1.]

[இந்தப் பரமபுருஷனிடத்தில் ப₄யத்தாலேயே காற்று அடிக்கிறது; (இவனிடத்தில்) ப₄யத்தாலேயே ஸூர்யன் உதி₃க்கிறான்; அக்₃னியும் இந்திரனும் ஐந்தாமவனான ம்ருத்யுவும் இவனிடத்தில் ப₄யத்தினாலேயே தங்கள் காரியத்தைச் செய்கிறார்கள்.] என்று இந்திரன் பரமபுருஷனின் நியமனப்படியே காரியம் செய்பவன் என்று சொல்லப்பட்டதன்றோ.

வ்யா:—அர்த்த₂த்தை நோக்கும்போது தேவர்தலைவனான இந்திரனைச் சொல்லும் மூன்றாவது அடி அவனுடைய பரிகரங்களான தேவர்களையும் ரிஷிகளையும் சொல்லும் முதல் இரண்டடிகளுக்கு முன்னால் வைத்துப் பொருள்கொள்ளத்தக்கது; இப்படிக்கொள்ள

அதி₄காரிகளான தே₃வதைகளையொழிய அநுக்தமான தே₃வ தாக₃ணத்தை அருளிச்செய்கிறார் (அருந்தவமித்யாதி₃) ஒருத்த

---

யாமோவென்னில்; இப்பாட்டுக்குத் தாத்பர்யம் - இந்த்₃ரனை வந்தபடி சொல்லுகையாகையாலே முதலாகக்கடவது. a அக்₃ந்யாஹிதரென்னக்கடவதாயிருக்கச்செய்தே ஶப்₃த₃ச் சேர்த்தி அர்த்த₂ச்சேர்த்திக்காக ஆஹிதாக்₃நியாரென்றதிறே. b ப்ரணவம் ஶப்₃த₃த: ஆத்மஸ்வரூபம் சொல்லிற்றேயாகிலும் அர்த்த₂த: ப₄க₃வத் ஸ்வரூபமிறே சொல்லுகிறது. '' ராஜ புருஷன்'' என்றால் புருஷன் விஶேஷணமாய் ராஜாவின் பக்கலிலே ப்ராத₄ாந்யம் கிடக்குமாபோலே.

---

லாமோ? எனில்: இப்பாட்டுக்குத் தாத்பர்யார்த்த₂ம் இந்திரன் வந்ததைச் சொல்லுவதாகையாலே, மூன்றுமடியையே முதலில் கொள்ளவேண்டும். அக்₃நியில் எப்போதும் ஹோமம் செய்து கொண்டேயிருக்கும் அந்தணர்களை ''அக்₃ந்யாஹிதர்'' என்று சொல்லவேண்டியிருந்தபோதிலும் முன்பின்னாக மாற்றி ''ஆஹிதாக்₃நிகள்'' என்று சொல்லுவது போன்றது இங்கு அடிகளை முன் பின்னாக மாறுடிச் சொல்லுவது. ''அகாரவாச்யனுக்கே அடிமை யாயிருப்பவன் மகாரவாச்யனான ஜீவன்'' என்னும் பொருளை யுடைய ப்ரணவத்தின் சொல்லை நோக்கும்போது அது ஜீவனைச் சொல்லுவதாகத் தோன்றியபோதிலும், 'அகாரவாச்யனான பரம புருஷனுக்கே அடிமைப்பட்டவன் ஜீவன்' என்னும் பொருளை நோக்கும்போது ப₄க₃வத்ஸ்வரூபமே அதில் ப்ரத₄ானமாகச் சொல் லப்படுகிறது என்று தேறுகிறதன்றோ. அதுபோல் இங்கும் பொருளுக்கே ப்ராத₄ாந்யம் கொள்ளவேண்டும். ''ராஜபுருஷன்'' என்னும் சொல்லைப் பார்க்கும்போது புருஷஶப்₃த₃ம் விஶேஷ் யமாய், ராஜ ஶப்₃த₃ம் விஶேஷணமாயிருக்கையாலே புருஷனுக்கே ப்ராத₄ாந்யம் தோற்றும். ஆனால் 'ராஜாவுக்கு அடிமைப்பட்ட மனிதன்' என்று அதன் பொருளை நோக்கும் போது புருஷன் அப்ரத₄ாநமானவனாகவும் ராஜா ப்ரத₄ானமாகவும் தேறுவதையும் இங்கு உத₃ாஹரணமாகக் கொள்ளலாம்.

---

அரு:-ஏழாம்பாட்டு, (அந்தரமித்யாதி₃) a அர்த்த₂ம் வ்யுத் க்ரமமாயிருக்க, ஶப்₃த₃ம் சேர்ந்தவிடமுண்டோ? என்ன அருளிச்செய்கிறார் (அக்₃ந்யாஹிதேத்யாதி₃) b ஶப்₃த₃ம் ஒன்றாயிருக்க, அர்த்த₂ப்ராத₄ாந்யமாகச் சொன்னவிடமுண்டோ வென்ன (ப்ரணவமித்யாதி₃)

ராலும் செய்து முடிக்கவொண்ணாத தபஸ்ஸையுடைய ஸநகாதிகளும் இந்த்ராதிகளுக்கு ப்ரத்யாஸந்நரானமருத்கணங்களும் வந்து நின்றார்கள். (இந்திரன் இத்யாதி) ஸர்வாத்யக்ஷனான தேவேந்த்ரன் தன் வாஹநமான ஐராவதமும் தானுமாய் வந்துநின்றான்.

---

(அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ) அந்தரம் அண்டம் ஆகாஶம் என்று-தேவலோகத்துக்குப் பேர், ''கேசவன் தமர்'' என்கிறதல்லவே. அவர்கள் வர்த்திக்கிற தேஶத்தையிட்டுச்சொல்லுமித்தனையிறே தேவர்களை; பன்மை-கூட்டங்களின் பன்மை. (அருந்தவ முனிவர்) ஸப்த ரிஷிகளாகவுமாம்; பெறுதற்கரிய தபஸ்ஸைப்பண்ணி விரோதிநிவ்ருத்தி பண்ணினவர்களென்னவுமாம். (மருதரு

---

(இந்திரனானையும் தானும் வந்திவனே) தேவர்களுக்குத் தலைவனான இந்திரனும் அவனது வாஹநமான ஐராவதம் என்னும் யானையோடு வந்து முன்னே நிற்கின்றான் என்று கருத்து. (அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ) 'அந்தரம், அண்டம், ஆகாஶம்' ஆகிய ஶப்தங்கள் தேவலோகத்தைக் குறிக்கும். தங்களை உயர்ந்தவர்களென்று அபிமானிக்கும் 'அந்தர' ஜாதிகளான தேவர்களனைவரும் தங்களுடைய பரிகரங்களோடுகூட அபிமான மற்று தேவாதிதேவனான உன் கோயிலின் முன் திரண்டு நிற்கின்றனர். முன் பாட்டில் அதிகாரிகளான தேவதைகள் சொல்லப் பட்டார்கள். இங்கு மற்ற தேவர்கள் சொல்லப்படுகிறார்கள். ஸ்வரூபத்திற்குத் தக்க ஸ்வாமித்வம் இருந்தால் 'கேசவன்தமர்' என்று பாகவதர்களைச் சொல்லுவதுபோலே, இவர்களையும் இந்திரன்தமர் என்று சொல்லலாம்; அப்படியல்லாமையாலே 'அந்தரத்தமரர்கள்' என்று அவர்கள் வாழுமிடத்தையிட்டு அழைக்கப் படுகிறார்கள். 'கூட்டங்கள்' என்று பல கூட்டங்களாகச் சொல்லுகையாலே முன் சொல்லப்பட்ட ஒவ்வொரு அதிகாரிக்கும் அடங்கியவர்கள் பலர் இருக்கிறார்கள் என்று விளங்குகிறது (அருந்தவ முனிவர்) இந்திரனுக்கு அடங்கிய ஸப்தரிஷிகளைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம்; எவராலும் செய்து முடிக்கவொண்ணாத தவத்தைப் புரிந்து தம்முடைய இந்திரியங்களை அடக்கியிருக்கும் ஸநகர் முதலானவர்களைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (மருதருமிவரோ) இந்திரனுக்கு நெருங்கிய மருத்துக்கள் எனப்படும் தேவதைகள். முன்பாட்டில் 'மருதர்' என்று சொல்லப்பட்டவர்களுக்கு அடங்கினவர்களை இங்கு குறிப்பதாகக் கொள்ளலாம். 'கூட்டங்

(எம்பெருமானித்யாதி₃) ஸர்வேஶ்வரனான தேவரீருடைய கோயில் திருவாசல். (சுந்தரர் நெருக்கவித்யாதி₃)க₃ந்த₄ர்வர்கள் நெருக்க, அவர்களுடனே வித்₃யாத₄ரரும் நூக்க, யக்ஷருமொன்றாகத் திருப்பள்ளியுணர்ந்தருளும்போதை அழகுகண்டு திரு

---

மிவரோ) மருத்₃தே₃வதைகள்; ''கூட்டங்கள்'' என்கிறது மூன்றிடத்திலும் வைத்துக்கொள்ளலாம்.

(எம்பெருமானுன கோயிலின் வாசல்) அணைந்தார்கள், வந்தார்களென்கிறவளவல்ல; பார்த்தருளீர்! திருவாசலிலே வந்தார்கள்; ''பின்னிட்டசடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய'' என்கிறபடியே. (சுந்தரர் நெருக்க) தே₃வஜாதியிலே ஒரு பே₄த₃ம். ''சுந்தரம்'' என்று—அழகாய் அத்தாலே-பாடுவாரென்னவுமாம். சுந்தரரென்று க₃ந்த₄ர்வர். (c விச்சாதரர் நூக்க) அதிலே முன்கை வலியராயிருப்பார் சிலர். (இயக்கரும் மயங்கினர்) யக்ஷரென்று

---

கள்' என்பதை அந்தரத்தமரர்கள், அருந்தவமுனிவர், மருதர் என்னும் மூன்றிடங்களிலும் கூட்டிப் பொருள்கொள்ளவேண்டும்.

(எம்பெருமானுன கோயிலின் வாசல்) ''அமரர்கள் புகுந்தனர்'' [5] என்ற பரட்டில் சொன்னதுபோலே அருகில் வந்தது மாத்திரமன்று, உன் கோயிலின் வாசலுக்கே வந்து விட்டார்கள் கடாக்ஷிக்கவேணும்'' என்று கருத்து. (உன கோயிலின் வாசல்) ''பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்'' [பெரு. திரு 4—3] என்று சொல்லப்பட்டதுபோலே பூ₄லோகவைகுண்ட₂மான கோயிலின் வாசலும் ஆயிற்று என்று கருத்து. (சுந்தரர்நெருக்க) தேவர்களில் ஒரு வகையான 'சுந்தரர்கள்' மற்றவர்களோடு நெருக்கினூர்கள். சுந்தரம் என்று அழகாய் 'சுந்தரர்' என்று அழகாகப் பாடுகிறவர்களைக் குறிக்கிறது. 'சுந்தரர்' என்று உருவத்தில் அழகான கந்தர்வர்களைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். (விச்சாதரர் நூக்க) முன்கைவலிமையுடைய வித்₃யாத₄ரர்கள் மற்றவர்களைத் தள்ளிக்கொண்டு வருகிறார்கள். (இயக்கரும் மயங்கினர்) மென்மையானவர்களான யக்ஷர்

---

c விச்சாதரர்—வித்₃யாதரர். ''அந்தரம்-பார்-மற்று-இடமில்லை'' என்று அந்வயம்.

வடித் தொழுது திருப்பல்லாண்டு பாடுகைக்குண்டான ஆசையாலே ஒருவர்க்கொருவர் முற்கோலி மேல்மேலென நெருக்குண்டு மோஹியாநின்றார்கள். (அந்தரமித்யாதி₃) ஆகாஶத்திலும் பூ₄மியிலும் இடமில்லாதபடியாய்த்து. த்₃வாரா த்₄யக்ஷராலும் நிற்கை யரிதாம்படி நெருக்குப்படாநின்றார்கள். ஸர்வஸ்வாமியான தேவரீர் உணர்ந்தருளி அடிமை கொண்டருளவேணுமென்கிறார். 7.

---

கொண்டு ம்ருது₃ப்ரக்ருதிகளாயிருப்பார் சிலர். (மயங்கினர்) நெருக்கம் பொறுக்கமாட்டாமையாலே மோஹித்தார்கள். இவர்கள் இங்ஙனே படவேணுமோவென்றால்—(திருவடித் தொழுவான்) தேவரீரைத் திருவடித் தொழுகையிலுள்ள நசையிருந்தபடி. உள்நெருக்கத்தைக் கண்டோமென்றால், புறம்புதான் நெருக்கற்றிருக்கிறதோவென்கிறார் மேல்—(அந்தரமித்யாதி₃) ஆகாஶத்தோடு பூ₄மியோடு வாசியற விவரமற நெருங்கிற்று; தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளிப் பார்த்தருளீரென்கிறார். 7.

---

கள் நெருக்கத்தைப் பொறுக்கமுடியாமல் மயங்கிப்போனார்கள். 'மயங்கினர்' என்பதைக் கலந்தனர் என்று பொருள்கொண்டு 'யக்ஷர்களும் அவர்களோடு ஒன்றாகக் கலந்தார்கள்' என்றும் பொருள் கொள்ளலாம். இப்படி இவர்கள் இவ்வளவு பாடு படுவதற்குக் காரணமென்ன? எனில்: (திருவடித்தொழுவான்) தேவரீரைத் திருவடி தொழுகையில் உண்டான ஆசையாலே இப்படிப் பட்டார்கள். பள்ளியுணரும்போதுள்ள அழகை முதலில்கண்டு, முதல் கடாக்ஷத்திற்கு இலக்காக வேண்டுமென்னும் ஆசையாலே இப்படிப் பட்டார்கள் என்றும் கொள்ளலாம். உள்ளே மாத்திரம் இப்படி நெருக்கமல்ல; வெளியிலும் நெருக்கமாகவே இருக்கிறது என்கிறார் மேலே. (அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ) ஆகாஶத்தோடு பூ₄மியோடு வேற்றுமை இல்லாமல் இடை வெளியே இல்லாமல் நெருக்கமாய் இருக்கிறது. "துவார பாலர்களும் நிற்க இயலாதபடி நெருக்குப்படாநின்றார்கள்" என்பர் நஞ்ஜீயர். (அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே) அனைவருக்கும் ஸ்வாமியான தேவரீர் விழித்தெழுந்து கடாக்ஷித்து அடிமை கொண்டருளவேணும். 7.

8. வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலை யொண் கண்ணாடி முதலா
எம்பெரு மான்படி மைக்கலம் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ
தோன்றின னிரவியும் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்தில்நின் றகல்கின்ற திருள்போய்
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே.

பதவுரை—வழங்க (தேவரீருக்கு) ஸமர்ப்பிப்பதற்காக, வாயுறை—அறுகம்புல்லும், மா—சிறந்த, நிதி—ஶங்க, நிதி, பத்₃மநிதி₄களும், (கையிலே உடையராய்க்கொண்டு), வம்பு அவிழ்—மணம் மிகுந்த, வானவர்—தேவர்களும், கபிலை—காமதே₄நுவும், ஒண்—ஒளி பொருந்திய, கண்ணாடி முதலா—கண்ணாடி முதலாக, எம்பெருமான்—ஸ்வாமியான தேவரீர், காண்டற்கு—கண்டருளுகைக்கு, ஏற்பன ஆயின—தகுதியாயுள்ளவையான, படிமைக் கலம் கொண்டு—உபகரணங்களெல்லாவற்றையுங்கொண்டு, நல்முனிவர்—மஹரிஷிகளும், தும்புரு நாரதர்—தும்புரு நாரத₃ர்களும், புகுந்தனர்—வந்து நின்றார்கள்; (இதுவுமன்றி) இரவியும்—சூரியனும், துலங்கு ஒளி—(தனது) மிக்க தேஜஸ்ஸை, பரப்பி—எங்கும் பரவச் செய்துகொண்டு, தோன்றினன்—உத₃யமானான்; இருள்—இருளானது, அம்பரதலத்தில் நின்று - ஆகாஶத்தினின்றும், போய் அகல்கின்றது—நீங்கிப்போயிற்று; அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாய்—

---

அவ:- எட்டாம்பாட்டு. தேவரீர் திருவாராத₄நத்துக்கு அநுரூபமான ப்ராத:காலமானது ஸந்நிஹிதமாய்த்து; ஆராத₄நாங்க₃மாய்க் கண்டருளுகைக்கு ஸத்₃ருஶமான உபகரணங்கள்

---

அவ:— எட்டாம்பாட்டு. (வம்பவிழித்யாதி₃) முன்னில் பாட்டில் இந்த்₃ரன் ஸபரிகரனாய் வந்தபடி சொல்லிற்று;

---

8. அவ:— முன்பாட்டில் இந்திரன் தன் பரிகரங்களோடு வந்தபடியைப் பேசிற்று; இந்தப்பாட்டில், "திருவாராதனத்திற்குப் பொருத்தமான காலவேளை வந்துவிட்டபடியாலே, திருவாராதனத்

கொண்டு அநந்ய ப்ரயோஜநரான ருஷிகள் வந்து நின்றார்கள்; திருப்பள்ளியுணர்ந்தருளி அவற்றைக் கண்டருள வேணும் என்கிறார்.

வ்யா:- (வம்பவிழித்யாதி₃)பரிமளிதமான ஸ்வர்க்க₃த்திலே வர்த்திக்கக்கடவ தே₃வர்கள் மோ₂க்ஷ₃ராஸங்கள் கொண்டு வந்து நின்றார்கள். (மாநிதியித்யாதி₃) ஶங்க₂நிதி₄ பத்₃மநிதி₄களும, கபிலா ஸுரபி₄களும், திருக்கண்ணாடி முதலாக ஸர்வஸ்வாமியான தேவரீர் கண்டருளுகைக்கு ஸத்₃ருஶமான உபகரணங்களு

---

இப்பாட்டில்-திருப்பள்ளியுணர்ந்தருளினால் கண்டருளக் கடவ உபகரணங்களை மங்க₃ளார்த்த₂மாக அவரவர்கள் கொடுவந்து நின்றார்களென்கிறது,

வ்யா:— (வம்பவிழ்வானவர் வாயுறைவழங்க) வானவர் தே₃வஜாதி.a(வம்பவிழ்வானவர்)bநித்யமானயௌவனத்தை யுடையவர்களென்னுதல்; c ஸௌக₃ந்த்₄யத்தையுடையவர்கள்; தந்தாம் பத₃ங்களுக்குத்தக்க பூமலர்களை உடையவர்களென்னுதல். (வாயுறைவழங்க) "வாயுறைவழக்க" என்றதை மெலித்து "வாயுறைவழங்க" என்றாக்கி, அவர்களுடைய d நியமநப்ரகாரத்தை நினைக்கிறது; "வாயுறை" என்

---

திற்கு அங்கமாக உள்ள உபகரணங்களை வேறு பயன் கருதாத ரிஷிகளும், தேவர்களும் மங்களத்தின் பொருட்டுக் கொண்டு வந்து நின்றார்கள்" என்கிறது.

வ்யா:— (வம்பவிழ்வானவர் வாயுறை வழங்க) மணம் மிக்கதேவர்கள் தேவரீருக்கு ஸமர்ப்பிப்பதற்காக அறுகம்புல்லைக்கொண்டு வந்தார்கள். 'வம்பு' என்று மணத்தைச்சொல்லுகிறது; அல்லது புதுமையைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். என்றும் இளமையோடு இருக்கும் தேவர்கள் என்று கருத்து. அல்லது மலர்களைச் சொல்லுவதாகவும் கூறலாம். தங்கள் பதவிகளுக்குத் தக்கவாறு பாரிஜாதம் முதலிய மலர்களைக் கைக்கொண்டவர்கள் என்று கருத்து. (வாயுறை வழக்க) என்று பாடமானால் அதில் வல்லொற்றை மெல்லொற்றாக்கி 'வாயுறை வழங்க' என்று கொண்டு பொருள் கொள்ளவேண்டும்.

---

அரு:—எட்டாம்பாட்டு (வம்பவிழித்யாதி₃)a"வம்பு"என்று புதிதாய், b யௌவநமாதல், c பரிமளமாதல். dநியமநப்ரகாரம்-உத்₃தே₃ஶ்ய விஷயத்தைக் கிட்டும்போது கையும் அறுகம்புல்லுமாகக் கிட்டவேணுமென்கிற நியதி e (வம்பவிழ்) வாயுறைக்கு விஶேஷ

படையக் கொண்டு அங்கப்ரயோஜநரான ருஷிகள் வந்து அவஸர ப்ரதீக்ஷராய் நின்றார்கள்.

---

றது-அறுகம்புல. e ''வம்பவிழ்'' என்றது-ஸம்ரத்3த4மாயிருக்கை. (மாநிதி) ''நிதி'' என்று-ஶங்க2நிதி4 பத்3மநிதி4யாகவுமாம்; 'நிதி' யென்று நவரத்நாதி3களாகவுமாம்; 'மாநிதி'யென்றது-மஹார்க்க4மென்றபடி. நித்யதா3நத்துக்கு த4நராஶிகளைச் சொல்லிற்றாகவுமாம்.

(கபிலை) பசுக்கள் வரக்கடவதிறே f வழக்கத்துக்குறுப்பாக; வாயுறை, மாநிதி, கபிலை. g மற்றும் சொல்லிச்சொல்லாத உபகரணங்களெல்லாம் வந்தன; கண்டருளுகைக்குறுப்பாகத் திருக்கண்ணாடி தொடக்கமானவையும் எல்லாம் வந்தன.

---

''சக்ரவர்த்தியைப் பார்க்கவரும்போது வெறுங் கையுடன் செல்லக் கூடாது'' என்னும் நியமத்தையொட்டி அவருடைய பசுவுக்கு உணவான அறுகம்புல்லைக்கொண்டு வருகிறார்கள் என்று கருத்து. 'வம்பவிழ்' என்றதை வாயுறைக்கு (அறுகம்புல்) விசேஷணமாகவும் கொள்ளலாம். அறுகம்புல்லைக் கொண்டு வரும்போது ஸரத்3தை4யோடு மணம் மிக்க அல்லது புதிய அறுகம்புல்லைக் கொண்டு வருகிறார்கள் என்று கருத்து. (மாநிதி) பெரியநிதியாகிற நவரத்னம் முதலானவற்றைக் கொண்டு வருகிறார்கள். 'நிதி' என்று ஶங்க2நிதி4 பத்3மநிதி4 என்னும் தேவலோகநிதி4களைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். 'மாநிதி' என்று அவை விலைமதிப்பற்றவை என்று காட்டுகிறது. எம்பெருமான் தினந்தோறும் தன் அடியார்களுக்கு வழங்குவதற்காகப்பெரிய ஐச்வர்யங்களான த4னம், தா4ன்யம் முதலானவற்றைக்கொண்டு வருவதாகவும் கொள்ளலாம். 'மாநிதி'யை தேவர்கள் கொண்டு வரும் பொருள்களில் சேர்க்காமல், மேலே சொல்லப்படும் முனிவர்கள் கொண்டுவரும் பொருள்களில் சேர்த்து நஞ்ஜீயர் உரையிட்டார்.

(கபிலை) தானத்திற்கு உபயோகப்படும்படி பசுக்களையும் ராஜாக்களைப் பார்க்கவருகிறவர்கள் கொண்டு வருவது உண்டன்றோ; பாட்டின் தொடக்கத்திலிருந்து 'ஏற்பனவாயின' என்பதுவரை கபிலையாகிற பசு, அதற்கு வழங்கக் கூடிய அறுகம்புல், மாநிதி4, மற்ற பல உபகரணங்கள், எம்பெருமான் கண்டருளுகைக்கு உறுப்பான திருக்கண்ணாடி முதலான எல்லாம் வந்தன என்று அருளிச்செய்கிறார்.

---

ணமாகவுமாம். f (வழக்கத்துக்கு) தா3நத்திற்குறுப்பாக. g எம்பெருமான் காண்டற்குப் படிமைக்கலமாவது - மற்றுமுண்டான உபகரணபதா3ர்த்த2ம்.

(தும்புரு நாரதரித்யாதி₃) மங்க₃ளகீ₃தங்கள் பாடுகைக்குத் தும்பு₃ரு நாரத₃ர்களும் வந்து நின்றார்கள். (தோன்றினனிரவி யுமித்யாதி₃) மிக்க தேஜஸ்ஸையுடைய ஆதி₃த்யனும் தன்

---

(ஏற்பனவாயின கொண்டு) தேவரீர்க்கு ஸத்₃ருஶமானவை-அநுரூபமானவை. (நன்முனிவர்) அத்தலைக்குப் பாங்கான வற்றையே மநநம் பண்ணுமவர்கள்.

(தும்புரு நாரதர் புகுந்தனரிவரோ) பெருமாள் பள்ளி கொண்டருளின பின்பு h இசை கேட்டருளுமாபோலே. (தோன்றினனிரவியுந் துலங்கொளி பரப்பி) ''அவ்வோ பணிக்குக் கடவர்கள் எடுத்து வந்தார்கள்; அவற்றைக் கண்டருளவேணும்'' என்று காட்டுவாரைப்போலே, ஸஹஸ்ர கிரணங்களாகிற பந்தத்தைக்கொண்டு ஆதி₃த்யனும் வந்தான். (அம்பரதலத்திலித்யாதி₃) இருளானது ஒரு பயண

---

'படிமைக்கலம்' என்றது மற்ற உபகரணங்கள். (ஏற்பனவாயின கொண்டு) தேவரீருடைய பெருமைக்குத் தகுதியாயிருப்பவற்றைக் கைக்கொண்டு. (நன்முனிவர்) எம்பெருமானுக்கு எது உகப்பு என்பதையே நினைத்திருக்கும் முனிவர்கள். 'வேறுபயன் கருதாத ரிஷிகள்' என்று நஞ்சீயர்.

(தும்புரு நாரதர் புகுந்தனரிவரோ) பெருமாள் பள்ளிகொண்டருளும்போது தாலாட்டுப் பாடல்களைக் கேட்டு உவப்பது போலே, பள்ளி உணரும்போதும் மங்க₃ளகீ₃தங்களைக் கேட்டு உகப்பதற்குத் தும்புருவும் நாரதரும் வந்து நின்றனர். (தோன்றினனிரவியும் துலங்கொளிபரப்பி) ''அந்தந்தக் கைங்கர்யங்களைச் செய்ய வந்தவர்கள் அந்தந்த உபகரணங்களைக் கொண்டு வந்தார்கள். அவற்றைக் கண்டருள வேணும்'' என்று ராஜாக்களுக்குப் பந்தமெடுத்துக் காட்டுவாரைப்போலே ஸூர்யனும் தன் ஆயிரம் கிரணங்களாகிற பந்தத்தைக்கொண்டு இந்தப் பணிசெய்வாரைக் காட்டுவதற்கு வந்தான். (அம்பரதலத்தில் நின்று அகல்கின்றது இருள்போய்) முன்

---

h இசைகேட்டருளுகை – தாலாட்டுக்கேட்டு உகக்குமாபோலே, உணர்ந்தருளும்போதும் பாட்டுக்கேட்கைக்காகப் பாடவந்தார்களென்றபடி.

8.

9. ஏதமில் தண்ணுமை யெக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமிக்
கீதங்கள் பாடினர் கின்னரர் (கெ)கருடர்(கள்)
கந்தரு வர்அவர் கங்குலு ளெல்லாம்
மாதவர் வானவர் சாரண ரியக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்
ஆதலி லவர்க்குநா ளோலக்க மருள
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே.

**பதவுரை;**— ஏதம் இல் — குற்றமற்ற, தண்ணுமை — சிறுபறையும், எக்கம்— ஒற்றைத்தந்தியுடைய வாத்தியமும், மத்தளி — மத்தளமும், யாழ் – வீணையும், குழல் — புல்லாங் குழல்களுமாய், திசை — தி$_3$க்குகளெங்கும், முழவமோடு—

---

மீதேஜஸ்ஸைப் பரப்பிக்கொண்டு வந்து தோன்றினன். (அம்ப மித்யாதி$_3$) ஆகாஶத்தினின்றும் இருள் போயிற்று. ப$_3$ாஹ்ய மான அந்த$_4$காரமிறே அவனால் போக்கலாவது; ஸர்வரக்ஷகரான தேவரீர், ஆந்தரமான அந்த$_4$காரத்தைப்போக்க, திருப்பள்ளி யுணர்ந்தருள வேணுமென்கிறார். 8

---

மெழவாங்கிற்று என்றாப்போலேயிறே முன்பு சொல்லிற்று. அவ்வளவல்ல; ஆகாஶத்திலும் ஸஞ்சரிக்கவொண்ணாதபடி நிரஸ்தமானபடி சொல்லுகிறது. ப$_3$ாஹ்யமான இருளானது நிரஸ்தமானால் ஆந்தரமான இருளைப் போக்கியருளவேண் டாவோ? தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளி அமலங்களாக விழித்தருளீரென்கிறார். 8

---

பாட்டுக்களில் 'இருள் மறையத்தொடங்கிற்று' என்று சொல்லப்பட்டது. அந்த அளவோடு நில்லாமல் ஆகாசத்திலே நடையாட முடியாதபடி இருள் முழுவதும் மறைந்ததைச் சொல்லுகிறது; இங்கு (அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே) வெளியிருளானது அடியோடு நீங்கின பின்பு தேவரீர் விழித்தெழுந்து உள்ளிருளைப்போக்கியருள வேண்டாமோ? என்கிறார். 'அமலங்களாக விழிக்கும்' [திருவாய் 1-9-9] என்கிறபடியே, திக்குகளிலுள்ள மலங்களெல்லாம் நீங்கும்படி தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளவேணும் என்கிறார். 8

இவற்றின் முழக்கத்தோடு, இசை கெழுமி கீதங்கள் பாடினர்— இசை நிறையும்படி பாட்டுக்கள் பாடக்கடவரான, இன்னரர்—கின்னரர்களும், கருடர்—கருடர்களும், கந்தருவர் அவர்- அதோ நிற்கும் க₃ந்த₄ர்வர்களும், கங்குலுள் எல்லாம்— இரவெல்லாம், மாதவர்—மஹரிஷிகளும், வானவர்—தே₃வர்களும், சாரணர் — சாரணர்களும், இயக்கர் — யக்ஷர்களும், சித்தரும் — ஸித்₃த₄ர்களும், திருவடி தொழுவான் — (தே₃வரீருடைய) திருவடிகளில் வணங்குகைக்காக, மயங்கினர் — (நெருக்கத்தில் வருந்தி) மோஹமுற்றனர்; ஆதலில் — ஆகையாலே, அவர்க்கு — அவர்களுக்கு, நாள் ஓலக்கம் அருள — பகலோலக்கமருளுகைக்காக, அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாய் —

---

அவ:— ஒன்பதாம்பாட்டு. திருப்பள்ளி உணர்ந்தருளும் போதையழகு கண்டு திருவடித்தொழவும், அழகோலக்கம் இருக்கும்படி கண்டு அடிமை செய்யவும் வேணுமென்று தந்தாமுடைய பரிகரமான மங்க₃ளவாத்₃யங்களும் வீணைகளுமாய் உகளித்துக்கொண்டு யக்ஷக₃ந்த₄ர்வாதி₃கள் வந்துநின்றார்கள்; அடியேனுக்காகத் (அழகோலக்கமாக?) திருப்பள்ளியுணர்ந்தருளி அடிமைகொண்டருள வேணுமென்கிறார்.

---

அவ:— ஒன்பதாம்பாட்டு. (ஏதமிலித்யாதி₃) முன்னிற்பாட்டில் நித்யத₃ானத்துக்குறுப்பானவையும் மற்றும் கண்டருளக்கடவனவும் வந்தனவென்றது; இப்பாட்டில்-தேவரீர் திருப்பள்ளியெழுச்சிக்கு ந்ருத்தகீ₃தவாத்₃யங்களுக்குக் கடவரானவர்கள் வந்தார்களென்கிறது.

---

9. அவ:— முன்பாட்டில் எம்பெருமான் தினந்தோறும் தானம் வழங்குவதற்கு உபயோகப்படும் பொருள்களும், மற்றும் கண்டருளக் கூடிய கண்ணாடி முதலான உபகரணங்களும் வந்தன என்றது. இப்பாட்டில் ''தேவரீர் திருப்பள்ளியுணரும்போது உள்ள அழகைக் கண்டு திருவடித்தொழவும், மண்டபங்களிலே வீற்றிருக்கும்போது கண்டு அடிமை செய்வதற்காகவும் தத்தமது கருவிகளான மங்க₃ளவாத்₃யங்களையும், வீணைகளையும் ஆநந்த₃த்துடன் ஏந்திக்கொண்டு யக்ஷர்கள் க₃ந்த₄ர்வர்கள் முதலானவர்கள் வந்து நின்றார்கள். அவர்களுக்காகவும் அடியேனுக்காகவும் திருப்பள்ளியுணர்ந்து அடிமைகொள்ள வேண்டும்'' என்கிறார்.

வ்யா:—(ஏதமிலித்யாதி3) நிர்த்தோ3ஷமான மங்க3ளவாத்3யவிசேஷங்களும், ஏகதந்த்ரீ-எக்கம்; மத்தளி என்னவுமாம் ஒரு பறை விசேஷம்; யாழ் விசேஷங்களும், குழல் விசேஷங்களுமாய், தி3க்குக்களெங்கும் முழங்கிக்கொண்டு மங்க3ளமான கீ3தங்கள் பாடக்கடவரான கிந்நராதி3களும், க3ந்த4ர்வர்களும்

---

ல்யா:— (ஏதமில்தண்ணுமை) ஏதமென்று-குற்றம், இல் என்று இல்லாமை; குற்றமற்ற வாத்3யமென்கிறது. "தண்ணுமை" என்றது-சிறுபறை. ஒருதலைப்பறை. எக்கம்—தாளம்; ஏகதந்த்ரியென்னவுமாம்; மத்தளி-சிறுமத்தளி. "யாழ்" என்று-இசைக்கு முன்னோட்டுக் கொள்வதொன்று; "குழல்" என்று ஜாத்யேகவசநம். (முழவம்) பெருவாயன்; பெருமத்தளியென்றுமாம். இவற்றிலுண்டான நாத3மானது தி3க்குகள் தோறும் கெழுமிற்று-நிறைந்தது. ஏதமில்-தண்ணுமை, ஏதமில்-எக்கமென்று எல்லாவற்றிலும் வைத்துச் சொல்லலாம். (கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்) எல்லாரும் விடிவோறே வருவாரும், விடிந்து வருவாருமிறே; இவர்களைத் திருவுள்ளம் பற்றியருளவேணும்.

---

வ்யா:—(ஏதமில்தண்ணுமை)குற்றமற்ற தண்ணுமை முதலான வாத்3யங்கள். ஏதமென்று குற்றத்தைக் குறிக்கிறது. 'ஏதமில்' என்றது குற்றமற்றது என்றபடி. இதுமேலே உள்ள வாத்3யங்கள் அனைத்துக்கும் விசேஷணம். "தண்ணுமை" என்பது 'சிறுபறை' அல்லது ஒருபுறம் மட்டும் அடிக்கக்கூடிய பறையைக் குறிக்கிறது. 'எக்கம்' என்று ஏகதந்த்ரியாய் ஒரு நாணை உடையதொரு வாத்3யம் அல்லது தாளத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். 'மத்தளி' என்பது இருபுறமும் அடிக்கக்கூடிய தோல் கொண்ட வாத்3யம். 'யாழ்' என்பது ஒருவகை வீணையாய், இசைக்கு முன்னால் வாசிக்கக்கூடியது. 'குழல்' என்பது புல்லாங்குழல். குழல் முதலானவற்றை ஜாத்யேகவசநமாகக் கொண்டு ஒவ்வொரு வகையிலும் பல உள்ளதாகக் கொள்ளலாம். (முழவம்) பெருவாயன் எனப்படும் எக்காளம். பெரிய மத்தளம் என்றும் கொள்ளலாம். முற்கூறிய வாத்3யங்களின் முழக்கத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். (இசைதிசை கெழுமி) இவற்றால் உண்டான ஒலியானது எல்லாத்திசையிலும் நிறைந்தது. (கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்) மங்க3ளகா3னம் பாடுகின்றவர்களான கின்னரஜாதியினரும் க3ருட3ஜாதியினரும் கா3னத்தைப் பாடினர். சிலர் விடியற்காலை வருகிறவர்கள், சிலர் விடிந்த பிறகு வருகிறவர்கள்.

மஹா தபஸ்ஸையுடைய ரிஷிகளும், அநுக்தரான தேவர்களும், சாரணயக்ஷஸித்தர்களுமடைடப் புகுந்து திருவடித்

---

(கின்னரர் கெருடரித்யாதி) மங்களகாநம் பாடுவார். அதில் தலைவரான கந்தர்வர்களுள்ளிட்டவர்களைப் பார்த்தருளீர். (கங்கலுளெல்லாம்) ராத்ரியெல்லாம். (மாதவர்) மஹாதபஸ்ஸையுடைய ரிஷிகள். (வானவர்) வைமாநிகரான தேவர்கள். (சாரணர்) தேவஜாதி தன்னிலே உலாவித் திரியுமவர்கள். (இயக்கர்) யக்ஷரென்று-தேவஜாதியிலே சிலர்; (சித்தர்) ஸித்தர்கள்; (சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான்) வைமாநிகரான தேவஜாதியோடு பெரிய தபஸ்ஸுக்களைப் பண்ணினமதிப்பரான ரிஷிகளோடு யக்ஷஸித்த சாரணரென்கிற தேவர்களோடு கிந்நரர் கெருடரென்கிற மங்களகாநம் பாடுவாரோடு இவர்களில்

---

(கின்னரர் கெருடர்கள் கந்தருவர் அவர்) மங்களகானம் பாடுகின்றவர்களில் தலைசிறந்தவர்களான கந்தர்வர்கள் உள்ளிட்ட இவர்களனைவரையும் கடாக்ஷித்தருளவேணும். (கங்குலுளெல்லாம்) இரவுமுழுவதும். (மாதவர்)பெருந்தவம் செய்த ரிஷிகள். (வானவர்)விமானங்களில் வானத்தில் ஸஞ்சரிக்கும் தேவர்கள். (சாரணர்) தேவஜாதியிலே உல்லாசமாக உலாவித்திரியும் ஒருவகை தேவஜாதியினர். 'சரதி இதி சாரண:' [உலாவித்திரிகின்றபடியாலே 'சாரணர்' எனப்படுவர்] என்று வ்யுத்பத்தி. (இயக்கர்) யக்ஷர் என்று தேவர்களிலே ஒருவகை. (சித்தர்)தேவர்களிலே ஸித்தர்கள்என்றுஒருவகை. (சித்தரும்மயங்கினர் திருவடித்தொழுவான்) விமாநத்தில் ஸஞ்சரிக்கும் தேவர்களோடு, பெரிய தவம்பண்ணி மதிப்புடைய ரிஷிகளோடு, யக்ஷர், ஸித்தர், சாரணர் என்கிற தேவர்களோடு, கின்னரர், கருடர் என்கிற மங்களகானம் பாடுவாரோடு, இவர்களுக்குத் தலைவரான கந்தர்வரோடு சிறியவர்,

---

அரு:- ஒன்பதாம்பாட்டு. (ஏதமிலித்யாதி) a, b (மயங்கினர்)

தொழுகையிலுண்டான த்வரையாலே நெருக்காநின்றார்கள். ஸர்வரக்ஷகரான தேவரீர் உணர்ந்தருளி அழகோலக்கமாக இருந்து அடிமை கொண்டருளவேணுமென்கிறார். 9.

---

தலைவரான கந்தர்வரோடு வாசியற சிறியார் பெரியாரென்னாதே தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளும் போதில் ப்ரதம கடாக்ஷத்தைநினைத்து ஒருவர்க்கொருவர்முற்கோலி b நெருக்குண்ணாநின்றார்கள்; மங்களவாத்யங்கள், குழல்கள் இவைகொண்டு அடிமை செய்யுமவர்களும் திருப்பள்ளியெழுச்சிக்கு உதவவந்தார்கள். (ஆதலிலித்யாதி) c "நன் மணிவண்ணனூர்" என்கிறபடியே திருப்பள்ளி உணர்ந்தருளி எல்லாரும் வாழும்படி கடாக்ஷித்தருளவேணுமென்கிறார். 9.

---

பெரியவர் என்னும் வேற்றுமை இல்லாமல் தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளும் ஸமயத்தில் முதல் கடாக்ஷத்தைப் பெறவிரும்பி ஒருவருக்கொருவர் 'நான் முந்தி நான் முந்தி' என்று நெருக்கா நின்றார்கள்; மங்களவாத்யங்கள், குழல்கள் ஆகியவற்றைக் கொண்டு அடிமை செய்பவர்களும் திருப்பள்ளியெழுச்சிக்கு உதவ வந்தார்கள். (ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே)

நன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும்
பொன்மணியும் முத்தமும் பூமரமும்—பன்மணி நீ
ரோடு பொருதுருளும் கானமும் வானரமும்
வேடு முடைவேங் கடம். [நான் திருவ-47]

என்று திருவேங்கடமுடையான் தாழ்ந்தார் பலருக்கும் முகங் கொடுப்பது போலே, தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளி உயர்ந்தார், தாழ்ந்தார் என்னும் அனைவரும் வாழலாம்படி கடாக்ஷித்தருளவேணுமென்கிறார். 9.

---

நெருக்குண்டு மோஹியாநின்றார்கள். c (நன்மணிவண்ணனூர்) என்றது - திருவேங்கடமுடையான் நாநாஜாதிகளையும் கடாக்ஷிக்குமாபோலே தேவரீரும் கடாக்ஷித்தருளவேணும். 9

10. கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன விவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தன னிவனோ
துடையிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி யென்னும்
அடியனை அளியனென் றருளியுன் னடியார்க்
காட்படுத் தாய்பள்ளி யெழுந்தரு ளாயே.

பதவுரை:—புனல் சூழ்—திருக்காவேரி தீர்த்தத்தாலே சூழப்பட்ட, அரங்கா-ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுமவனே! கடி—பரிமளமுடைய, கமலம் மலர்கள்—தாமரைப் பூக்களானவை, மலர்ந்தன—(நன்றாக) மலர்ந்து விட்டன; கதிரவன்—(தாமரையை மலர்த்தவல்ல) ஸூர்யனானவன், கனை கடல்—கோஷஞ் செய்கையையே இயற்கையாகவுடைய கடலில், முளைத்தனன்—உதயகிரியிலே வந்து தோன்றினான்; துடி இடையார் — உடுக்கைபோன்ற (நுண்ணிய) இடையையுடைய மாதர், சுரி குழல்—(தமது) சுருண்டமயிர் முடியை, பிழிந்து உதறி—(நீர்ப் பசையறப்) பிழிந்து உதறிவிட்டு, துகில் உடுத்து — (தம்தம்) ஆடைகளை உடுத்துக் கொண்டு, ஏறினர்—கரையேறிவிட்டார்கள்; தொடை ஒத்த-ஒழுங்காகத் தொடுக்கப்பெற்ற, துளவமும்—திருத்துழாய் மாலையும், கூடையும் — பூக்குடலையும், பொலிந்து தோன்றிய — விளங்கா நிற்கப்பெற்ற, தோள்—தோளையுடைய, தொண்டரடி பொடியென்னும் — 'தொண்டரடிப்பொடி' என்ற திருநாமமுடைய, அடியனை — தாஸனை, அளியன் என்று அருளி-கிருபை பண்ணுகைக்கு உரிய பாத்திரம் என்று திருவுள்ளம் பற்றி (அங்கீகரித்தருளி), உன் அடியார்க்கு—தேவரீருடையார்களான பாகவதர்களுக்கு, ஆள் படுத்தாய் — ஆளாக்க வேணும்; (அதற்காக) பள்ளி எழுந்தருளாய்—திருப்பள்ளியைவிட்டு எழுந்தருளவேணும்.

அவ:— பத்தாம்பாட்டு. நிக3மத்தில் — முதல்பாட்டுத் தொடங்கிச் சொன்ன தே3வர்களோடு ரிஷிகளோடு வாசியற தேவரீர் பக்கல் ஒரு ப்ரயோஜநங்கொண்டு மீளுமவர்களன்றிக்கே, தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளும்போதை முக2 விகாஸமே ப்ரயோஜநமாயிருக்கிற அடியேனுக்காகத் திருப்பள்ளியுணர்ந்தருளவேணுமென்று ப்ரார்த்தி2த்து முடிக்கிறார்.

---

அவ:— நிக3மத்தில்; (கடிமலரித்யாதி3) உபக்ரமோபஸம்ஹாரங்கள் சேர்ந்திருக்கிறது. எங்ஙனேயென்னில்; "அடியேன் செய்யும் விண்ணப்பம்" என்று தொடங்கி "மாறன் விண்ணப்பம் செய்த" என்றும், "நமக்கே பறை தருவான்" என்று தொடங்கி "அங்கப் பறைகொண்ட" என்றும், 20. "नाथाय मुनये" (நாத2ாய முநயே) என்று

---

அவ:— கடைசிப்பாட்டான இதில் "முதல் பாட்டிலிருந்து சொல்லப்பட்ட தேவர்கள் ரிஷிகள் முதலானவர்கள் தேவரீரிடம் ஒரு பயனைப்பெற்றுத்திரும்பிப் போகக் கூடியவர்கள்; அப்படியல்லாமல் தேவரீர் திருப்பள்ளியெழும் போது உள்ள முகமலர்த்தியே பயனாக இருக்கிற அடியேனுக்காகப்பள்ளியெழுந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்து இந்த திவ்யப்ரபந்தத்தை நிறைவு படுத்துகிறார். சிறந்த ப்ரப3ந்த4ங்களில் முதலும் முடிவும் தொடர்புள்ளவையாய் இருக்கும். நம்மாழ்வார் திருவிருத்தத்தைத் தொடங்கும் போது "அடியேன் செய்யும் விண்ணப்பம்" [திருவிருத்தம்-1] என்று தொடங்கி நிறைவுபடுத்தும் போது "மாறன் விண்ணப்பம் செய்த" [திருவிருத்தம் 100] என்று முடித்தார். ஆண்டாள் திருப்பாவையைத் தொடங்கும் போது "நம்க்கே பறைதருவான்" [திருப்பாவை-1] என்று தொடங்கி, நிறைவுப்படுத்தும் போது "அங்கப் பறைகொண்டவாற்றை" [திருப்பாவை 30] என்று முடித்தாள். ஆளவந்தார் ஸ்தோத்ரரத்நத்தைத் தொடங்கும் போது

20. நமோऽசிந்த்யாத்3பு4தாக்லிஷ்டஜ்ஞாநவைராக்3ய ராஶயே |
நாத2ாய முநயேऽகா3த4ப4க3வத்3ப4க்திஸிந்த4வே ||

[ஸ்தோ-ர-1]

[(இப்படிப் பட்டதென்று) நினைக்கமுடியாததும், ஆஶ்சர்யமானதும், (ப4க3வானுடைய அருளாலே) எளிதாகக் கிடைத்ததுமான ஞானத்தினுடையவும் வைராக்3யத்தினுடையவும் குவியல் போன்றவராகவும், ப4க3வானை மனனம் செய்பவராகவும், ஆழ்ந்த ப4க3வத்3 ப4க்திக்குக் கடலாகவுமிருக்கிற நாத2முனிகளுக்கு நமஸ்காரம்.]

வ்யா:— (கடிமலரித்யாதி₃) ஊரிலே தாமரையாயுள்ளவை யெல்லாம் அலர்ந்து தோன்றி மது₄வெள்ளமிடாநின்றன,

---

தொடங்கிப் பின்பு முடிக்கிறவிடத்திலும் 21. ''पितामहं नाथमुनिं विलोक्य'' (பிதாமஹம் நாத₂முநிம் விலோக்ய) என்றும்—உபக்ரமோபஸம்ஹாரங்கள் சேரக் கிடக்குமாபோலே, இவரும் உபக்ரமோபஸம்ஹாரங்கள் சேரத் தலைக்கட்டாநிற்கச் செய்தே இவருக்கோரேற்ற முண்டு; இப்ரப₃ந்த₄ந்தன்னில் பாட்டுக்குப்பாட்டு போது வைகினபடி சொல்லுகையாயிற்று-கருத்து.

முதற்பாட்டிலே செய்தது-ஆதி₃த்யனானவன் உத₃ய பர்வதத்தை வந்தணுகினான்; ''தே₃ஶாந்தரம் போன பிள்ளைகள் வாராநின்றார்கள்'' என்று கேட்டால் அவர்க

---

என்று தம்முடைய பாட்டனாரான நாத₂முனிகளை அநுஸந்தி₄த்துத் தொடங்கி, நிறைவு படுத்தும் போதும்

21. அக்ருத்ரிமத்வச்சரணாரவிந்த₃ -
ப்ரேமப்ரகர்ஷாவதி₄மாத்மவந்தம் |
பிதாமஹம் நாத₂முநிம் விலோக்ய
ப்ரஸீத₃ மத்₃வ்ருத்தமசிந்தயித்வா || [ஸ்தோ-ர 65]

[என்னுடைய நடத்தையை நினைக்காமல், உன்னுடைய திருவடித் தாமரைகளில் இயற்கையாயிருக்கும் மேலான அன்பிற்கு எல்லை நிலமாயிருப்பவரும், ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்தவரும், எனக்குப் பாட்டனுருமாகிய நாத₂முனிகளைக் கடாக்ஷித்து (எனக்கு) அருள் புரியவேண்டும்.] என்று நாதமுனிகளைப் பார்த்து இரங்கியருள வேணும் என்று முடித்தார். இப்படி முதலும் முடிவும் இந்த ப்ரப₃ந்த₄ங்களில் ஒத்திருப்பது போலே இவரும் முதல் பாட்டிலும் ஸூர்யன் உதித்ததையும் தாமரை மலர்ந்ததையும் கூறியது போலே, கடைசிப்பாட்டிலும் அதைக் கூறுகிறார். ஆனால் இந்த ப்ரப₃ந்த₄த்திற்கு ஒரு சிறப்புண்டு. மேல் மேலே உள்ள ஒவ்வொருபாட்டும் முந்திய பாட்டைக் காட்டிலும் பொழுது விடிந்ததைச் சொல்லுவதாய் அமைந்துள்ளது. அந்த முறையில் முதற் பாட்டிலும் முடிவுப்பாட்டிலும் ஸூர்யனையும் தாமரையையும் சொன்னபோதிலும் இரண்டுக்கும் ஒரு வேற்றுமை உண்டு. ''ஸூர்யன் உத₃யகி₃ரியை நெருங்கினான். 'வெளிநாட்டுக்குச் சென்றபிள்ளைகள் வருகின்றார்கள்' என்று கேட்டால் அவர்க

(கதிரவனித்யாதி₃) அந்தத்தாமரையை அலர்த்தக்கடவ ஆதி₃த்யனும் கீழ்தி₃க்கிலே கே₄ாஷிக்கையே ஸ்வபா₄வமாகவுடைய ஸமுத்₃ரத்தில் உத₃யகி₃ரியிலே வந்துதோன்றினான். (துடியிடையாரித்யாதி₃) கண்டாரைப் பிச்சேற்றவல்ல இடையையும், மயிர்முடியையும் உடைய ஒருதரத்தில் பெண்களெல்லாம் நீராடித் தந்தாம் பரியட்டங்கள் தாந்தாமே சாத்திச் சமைந்தார்கள்.

---

ளுடன் ஸ்பர்ஶமுடைய மநுஷ்யருக்கு முக₂த்திலே விகாஸமுண்டாமாபோலேஆதி₃த்யனோடேதாமரைக்கு ஒருசேர்த்தியுண்டிறே; அத்தாலே முன்பு நின்ற மாத்ரையில் சிறிது விகஸிக்கக்கோலி அது கட்டு நெகிழ்கிறவளவிலே சி₂த்₃ர(ஜ்ர)த்தின் வழியே தேன் ப்ரவஹித்ததென்றிறே சொல்லிற்று. இதில் அவ்வளவுமன்றியே, இத்தாமரையோடு சேர்த்தியுடைய ஆதி₃த்யனும் உதித்து மேலே போனான்; தாமரைகளும் கழிய அலர்ந்தன வென்று போது வைகினபடி சொல்லுகிறது.

வ்யா:— (கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ) கடியென்று நறுநாற்றம். க₃ந்த₄முண்டாகச் சொல்லவேணுமோ? வாசஞ்செய் பூங்குழலாளுடைய வாஸஸ்த₂ாநமன்றோ. (மலர்ந்தன இவையோ) முன்பு சொன்னமாத்ர

---

ளோடு உறவுடைய மனிதர்களுக்கு முகம்மலருவது போலே, ஸூர்யன் உதித்ததைக் கண்டவுடன் அவனோடு உறவுடைய தாமரை சிறிது மலரத்தொடங்கிய போது அந்த இடைவெளியின் வழியாகத் தேன் ஒழுகிற்று'' என்று முதல் பாட்டில் சொல்லிற்று. இக்கடைசிப்பாட்டில் ''தாமரையோடு உறவுடைய ஸூர்யனும் உதித்து மேலே கிளம்பினான்; தாமரைகளும் முழுவதும் மலர்ந்தன'' என்று பொழுது மிகவும் விடிந்துவிட்டதைச் சொல்லுகிறது.

வ்யா:- (கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தன இவையோ) நறுமணமுள்ள தாமரைகள் இதோ மலர்ந்துள்ளன. 'கடி' என்று நறுமணத்தைக் குறிக்கிறது. ''வாசஞ் செய் பூங்குழலாள் திரு'' [திருவாய் 10-10-2] என்கிறபடியே நறுமணமே வடிவெடுத்தவளான பெரிய பிராட்டியாருக்கு இருப்பிடமாகையாலே தாமரைகளுக்கு நறுமணமுண்டு என்று சொல்லவும் வேண்டுமோ? (மலர்ந்தன இவையோ) முதற்பாட்டில் ''மதுவிரிந்தொழுகின''

இத்தால்-பெரிய பெருமாள் சிவட்கென்ன உணருகைக்காகப் பழைய யமுனை நீராட்டை ஸ்மரிப்பிக்கிறார். "பெரிய பெருமாளாகிறார்-க்ருஷ்ணன்; நம்பெருமாளாகிறார்-சக்ரவர்த்தித்திருமகன்"

---

மேயல்ல. தேவரீர் கண்டருளவல்ல வளம்பூ. (கதிரவன் கனைகடல் முளைத்தன னிவனோ) முன்பும் இவன் ப்ரஸ்துதனான விடத்தில் 'இவனோ' என்றவிடமில்லை; இவனை வினவியருளீர்; அவனுக்கு தாரகம் தேவரீர் குஶலப்ரஶ்நம் பண்ணுகையன்றோ.

உ இவர்கள் தந்தாமுடைய ஸத்தாதாரகமிழக்குமளவல்ல; இவர்களை வினவியருளாதே தேவரீருடைய ஸத்தாதாரகமிழக்கப்புகாநின்றீர் என்கிறார் மேல்; (துடியிடையா

---

என்று மலரத்தொடங்கிய நிலையைச்சொல்லிற்று. இங்கு நன்கு மலர்ந்ததைச் சொல்லுகிறது. தேவரீர் கண்விழித்தவுடன் கடாக்ஷிக்க வேண்டிய வளம் மிக்க பூ எங்கும் நிறைந்துள்ளது. (கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ) இங்கு தாமரையை மலர்த்தும் ஸூர்யனும், கிழக்குத்திக்கிலே முழங்குவதையே இயல்பாகக் கொண்ட கடலிலே உதயகிரியிலே வந்து தோன்றினான். முதற் பாட்டில் "கதிரவன் குணதிசைச்சிகரம் வந்தணைந்தான்" என்று சொன்னபோது "இவனோ" என்று சொல்லவில்லை. இங்கு "இவனோ" என்கையாலே இவனை க்ஷேமம் விசாரித்தருள வேண்டும். தேவரீர் அப்படிக் குஶலப்ரஶ்நம் பண்ணுவதாலன்றோ அவனுக்கு உயிர்தரிக்கும் என்கிறார்.

ஸூர்யன் தன்னுடைய தாரகத்தை இழக்கலாகாது என்று அருளினார் முதலடியில். இனி இரண்டாமடியில் பெரியபெருமாள் சடக்கென உணருவதற்காக, கோழியழைப்பதன் முன்னம் குடைந்து யமுனையில் நீராடப் போந்த கோபிகளின் வஸ்த்ரங்களை அபஹரித்துக் குருந்த மரத்தில் ஏறியிருந்த வரலாற்றை நினைவுபடுத்துவதன் மூலம் 'உம்முடைய தாரகத்தை நீர் இழக்காதே கொள்ளும்' என்கிறார். (துடியிடையார் சுரிகுழல் பிழிந்துதறித் துகிலுடுத்தேறினர்) கண்டவர் ஈடுபடும் உடுக்கை போன்ற நுண்ணிய இடையையும் சுருண்ட மயிர் முடியையும் உடைய அழகிய பெண்கள் காவிரியில் நீராடி, தம்முடைய வஸ்த்ரங்

---

அரு:— பத்தாம்பாட்டு. (கடிமலரித்யாதி) உ மேலில் பதத்துக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி)

என்றருளிச்செய்வர். (சூழ்புனலரங்கா) விரஜையையும், யமுனை யையும், ஸரயுவையும் மறப்பிக்கும்படியான திருப்பொன்னி யாலே சூழப்பட்ட கோயிலை நிரூபகமாகவுடைய தேவரீர். ‡பெரு மாளுக்கு நிரூபகதர்மமிருக்கிறபடி.

---

ரித்யாதி₃) "தோழியும் நானும் தொழுதோம்" "கோலங்கரிய பிரானே குருந்திடைக் கூறை பணியாய்" என்கிற இந்த ரஸம் இழக்கப்புகாநின்றீர். இத்தால்-பழைய மடுவின் கரையையும், குருந்திலேறின படியையும் நினைக் கிறது. கோவலனாய் வெண்ணெயுண்ட வாயனிறே பள்ளி கொள்ளுகிறவன். (சூழ்புனலரங்கா) நீர்ச்சிறை(நீரை)யிட்டுக் கொண்டு கண்வளர்ந்தருளலாமோ?

---

கலைத் தாயே சாத்திக்கொண்டு கரையேறினார்கள். "தோழியும் நானும் தொழுதோம" [நாச் திரு 3-1] "கோலங்கரிய பிரானே! குருந்திடைக் கூறை பணியாய்" [நாச்திரு 3-5] என்கிற கிருஷ்ணாவதாரரஸத்தை இழக்காமல் விழித்தருளவேணும் என்று கருத்து. "கோவலனாய் வெண்ணெய் உண்டவாயன்" [அமல னாதிபிரான்-10] என்று திருப்பாணாழ்வார் பெரியபெருமாளைக் கண்ணனாகவே அருளிச்செய்தாரன்றோ. "பெரிய பெருமாளாகிறார் க்ருஷ்ணன்; நம்பெருமாளாகிறார் சக்ரவர்த்தித்திருமகன்" என்று படட்டர் அருளிச்செய்வர் என்பது நஞ்சீயர் வ்யாக்₂யானம் (சூழ்புன லரங்கா) பரமபத₃த்தில் விரஜையையும் ப்₃ருந்த₃ாவனத்தில் யமுனை யையும் அயோத்தியில் ஸரயுவையும் மறக்கச்செய்யும் படியான காவிரியாலே சூழப்பட்ட திருவரங்கத்தையிட்டு நிரூபிக்கத்தக்க தேவரீர் நீராலே சிறையிட்டுக் கொண்டு கண்வளர்ந்தருளலாமோ?

"சூழ்புனலரங்கா" என்று பெருமாளுக்கு நிரூபகத்தைச் சொன்னார். இனி தமக்கு நிரூபகத்தைச் சொல்லிக் கொள்ளுகிறார். (தொடையொத்த துளவமும்) தொடுக்கும் போதே எம்பெருமா னுக்கு ஒத்திருக்கும்படி தொடுத்த துளவமாலையும்; திருமாலை தொடுத்தால் திருக்குழலுக்கும், திருமார்புக்கும் தக்க அளவாயி ருக்கும்படி. 'ஒத்த துளவமாலை' என்கையாலே மாலை பீதாம்பரம் முதலானவையெல்லாம் நித்ய ஸூரிகளான சேதநர்களாகவே இருக்கிறார்கள் என்று உணர்த்தப்படுகிறது.

ஸ்ரக்₃வஸ்த்ராப₄ரணைர் யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமை:
சிந்மயைஸ் ஸ்வப்ரகாஶைஶ்ச அந்யோந்யருசிரஞ்ஜிதை:
[பௌஷ்கரஸம்ஹிதை]

---

‡ (பா) ஆழ்வார்க்கு. (இப்பாடத்தில் இது மேலுக்கு அவதாரிகை)

(தொடையொத்தவித்யாதி₃) தொடுக்கிறபோதே அங்குத்தைக்கு ஸத்₃ருஶமாம்படி தொடுத்த திருமாலைகளும், திருப்படலிகையுமாய். (தோன்றியவித்யாதி₃) ரக்ஷகரான பெருமாளுக்குக் கோயில் நிரூபகமானாப்போலே ஆழ்வாருக்கு நிரூபகதர்ம

(தொடையொத்த துளபமும்) திருமாலையெடுத்தால் திருக்குழலுக்கும் திருமார்வுக்கும் அளவாயிருக்கை. b திருமாலையாயும் திருப்பரியட்டமாயும் நிற்கிறாப்போலே சேதநவர்க்க₃மிறே. (கூடையும் பொலிந்து தோன்றிய தோள்) ''ஆழியும் சங்குமுடைய நங்களடிகள்'' என்று அவை அவனுக்கு ஶேஷித்வஸூசகமிறே. 22.''महात्मनः शङ्खचक्रासिपाणेः'' (மஹாத்மநஶ் ஶங்க₂சக்ராஸிபாணே:) என்னுமாபோலேயிறே ஶேஷபூ₄தனானவனுக்கும் c திருப்படலிகை ஸூசகமாயிருக்

[தனக்குத் தகுந்தவையும், ஒப்பற்றவையும், ஞானமயமாயிருப்பவையும், ஸ்வயம் பிரகாசமானவையும் ஒன்றுக்கொன்று (சேர்த்தியினாலுண்டான) காந்தியினால் அழகாயிருப்பவையுமான மாலைகளோடும் வஸ்திரங்களோடும் ஆப₄ரணங்களோடும் கூடியிருப்பவன் பரமபுருஷன்] என்று சொல்லப்பட்டதன்றோ. (கூடையும் பொலிந்து தோன்றிய தோள்) ''ஆழியும் சங்குமுடைய நங்களடிகள்'' [பெரிய திரு 11-2-6]

22. வர்ஷாயுதைர் யஸ்ய கு₃ணா ந ஶக்யா
வக்தும் ஸமேதைரபி ஸர்வலோகை: ।
மஹாத்மந: ஶங்க₂சக்ராஸிபாணேர்
விஷ்ணோர் ஜிஷ்ணோர் வஸுதே₃வாத்மஜஸ்ய ॥

[பா₄ர-கர்ண 83-65]

[மஹாபுருஷனும், ஶங்க₂சக்ரங்கள், வாள் ஆகியவற்றைக் கையில் ஏந்தியிருப்பவனும், ஸர்வவ்யாபியும், ஜயசீலனும், வஸுதே₃வ புத்திரனுமான எவனுடைய கு₃ணங்கள் பதினாயிரம் வருஷங்களிலும் எல்லா உலகங்களும் கூடியும் பேசமுடியாதவையோ] என்கிறபடியே தலைவனான எம்பெருமானுக்கு சங்கசக்ரங்கள் அவனுடைய தலைமையை உணர்த்தும் அடையாளங்களாக இருப்பது போலே, தா₃ஸனான சேதனனுக்கும் பூக்கூடை ஶேஷத்வத்தைக் குறிக்கும் அடையாளமாக இருக்கிறது.

b திருமாலைகள் அங்குத்தைக்கு அநுரூபமாகக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (திருமாலையாயுமித்யாதி₃) c (படலிகை) திருப்

மிருக்கிறபடி. 5*. ''खनित्रपिटकाधरः'' (கூ2நித்ரபிடகாத4ர:) என்றும் 6*. ''लक्ष्मणो लक्ष्मिसंपन्नः'' (லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:) என்

கிறபடி. d 23. ''खनित्रपिटकाधरः'' (கூ2நித்ரபிடகாத4ர: இத்யாதி. (தொண்டரடிப்பொடி) [துளவத் தொண்டாய] திருத்துழாய்க்கெழுதிக்கொடுத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு

5* த4நுராதா3ய ஸஶரம் கூ2நித்ரபிடகாத4ர:|
அக்3ரதஸ்தே க3மிஷ்யாமி பந்தா2நமநுத3ர்ஶயந் ||
[ரா-அ 31-25]

[மண்வெட்டியையும் கூடையையும் தரித்தவனாய், அம்புடன் வில்லையும் எடுத்துக்கொண்டு வழியைக் காட்டிக்கொண்டே உன் முன் செல்வேன்] என்று இளையபெருமாளுக்குக் கூடை அடையாளமாகச் சொல்லப்பட்டதன்றே. (தொண்டரடிப்பொடி) ''துளவத் தொண்டாய தொல் சீர்த் தொண்டரடிப்பொடி'' [திருமாலை 45] என்கிறபடியே திருத்துழாய்க் கைங்கர்யம் செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தா3ஸபூ4தராகத் தம்மை நினைத்திருப்பவர். நம்மாழ்வார் ''அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் தம் அடியாரடியோங்களே'' [திருவாய் 3-7-10] என்று தம்மை நிரூபித்துக் கொண்டாற்போலே இவர் தம்மைத் தொண்டரடிப் பொடி என்று நிரூபித்துக்கொள்கிறார். துளவத்தொண்டு செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிகளில் ஒட்டியிருக்கும் பொடியாகத் தம்மை அபி4மானிக்கிறார். ''ரக்ஷகரான (பெரிய)பெருமாளுக்குக் கோயில் நிரூபகமானாற்போலே ஆழ்வாருக்கு இது நிரூபகம்'' என்றும், இளையபெருமாளுக்கு ஸ்ரீராமாயணத்தில் [அயோத்4யா 31-25]மண் வெட்டியையும் கூடையையும் நிரூபகமாகச்சொன்னது போலவும்,

6*. ஸர்வப்ரியகரஸ்தஸ்ய ராமஸ்யாபி ஶரீரத: |
லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நோ ப3ஹி: ப்ராண இவாபர: ||
[ரா-பா3 18-28]

[கைங்கர்யலக்ஷ்மியை உடைய லக்ஷ்மணன், ராமனுக்கு ஶரீரத்தைக் காட்டிலும் எல்லாப் பிரியத்தையும் செய்பவனாகவும், வெளியிலிருக்கும் மற்றொரு ப்ராணன்போலவும் விளங்கினான்.] என்று கைங்கர்ய லக்ஷ்மியை நிரூபகமாகச் சொன்னது போலவும் தமக்கு நிரூபகம் ''தொண்டரடிப்பொடி'' என்பதே என்கிறார்— என்றும் நஞ்சீயர் வ்யாக்2யானம். (தொண்டரடிப்பொடியென்னும்

பளித்தாமக்கூடை. dஶேஷத்வஸூசகமாக த4ரித்தபேர் உண்டோ

றும் சொல்லுகிற இளையபெருமாளைப்போலே ஶேஷபூ₁த னுக்கு ஶேஷத்வபரிகரமே ஐஶ்வர்யமாகக்கடவதிறே. "தொண் டரடிப்பொடி" என்று இவருடைய ப்ரஸித்₃தி₄ ஜ்ஞாநாநந்த₃

---

அடியேனென்றிருக்குமவர்; இவருடைய அடியாரடியாரிருக் கிறபடி; இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள்ஸ்ரீபாத₃ரேணு வென்கிறார். (அடியனை) இவ்வாத்மாவினுடைய ஆர்ப்பைத் துடைத்தால் நிலைநின்ற பேர் இதுவிறே. e (அளியனென் றருளி) f ஸ்நேஹியென்று திருவுள்ளம்பற்றி. g அங்ஙு னன்றியே, தேவரீர் அளிமிக்காரிறே; இஜ்ஜந்துவை க்ருபை பண்ணவடுக்குமென்று திருவுள்ளம்பற்றி; எல்லா மற்றனென்று திருவுள்ளம்பற்றி. (உன்னடியார்க்காட் படுத்தாய்) உன்னளவிலே நிற்கில் முதல்நிலை; "உனக்

---

அடியனை) ஆத்மஸ்வரூபத்தை ஆழ்ந்து அறியாதார் அதற்கு ஜ்ஞாநாநந்த₃ங்களையே லக்ஷணமாகக் கூறுவர். இவ்வாத்மாவி னுடைய அஹங்காரமாகிற ஆர்ப்பை [ஆரவாரத்தை]த் துடைத் தால் நிலை நின்ற பேர் "அடியேன்" என்பதேயாகும். அதுவும் அடியார்க்காட்பட்டிருக்கை வரையில் செல்லவேணும் என்று காட்டுகிறது. (அளியனென்றருளி) அன்புடையவன் என்று திரு வுள்ளம் பற்றி. அன்றிக்கே "அளிமிக்கான்" [திருவாய் 4-8-5] என்கிறபடியே கருணைமிக்கவரான தேவரீர் இந்த ஜந்துவை 'அன்புகாட்டத்தக்கவன்' என்று திருவுள்ளம்பற்றி; ஒரு கைம் முதலும் இல்லாதவனுகையாலே நாமே அருள்புரிய வேண்டும் என்று திருவுள்ளம்பற்றி. "அளியன் நம்பையல் என்னார்" [திரு மாலை 37] என்று திருமாலையிலும் அருளினரன்றே. (உன்னடி யார்க்காட்படுத்தாய்) உனக்காட்பட்டிருந்தால் அது முதல்நிலை (ப்ரத₂மபர்வம்) ஆகையாலே ப₂லஸித்₃தி₄யைப் பற்றி ஐயுற வேண்டியிருக்கும். "உனக்காட்பட்டு நின் கண் பெறுவதெது

---

வென்ன அநளுகிறர் (க₂நித்ரேத்யாதி₃) e, f, g (அளியன்) ஸ்நேஹியென்னுதல், த₃யநீயனென்னுதல்.

திருப்பள்ளியெழுச்சி வ்யாக்₂யாந அரும்பதவுரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே ஶரணம்

உகாரணமாகையன்றிக்கே ததீயசேஷத்வ பர்யந்தமாயிருக்கை. (அடியனை அளியனென்றருளி) ஸங்கதனென்று க்ருபை பண்ணியருளி, அச்சேஷத்வத்தின் எல்லையிலே நிறுத்தின தேவரீர் அடியேனுக்காகத் திருப்பள்ளியுணர்ந்தருளி அடிமை கொண்டருள வேணுமென்கிறார்.

நஞ்சீயர் அருளிச் செய்த
திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம் முற்றிற்று.
நஞ்சீயர் திருவடிகளே ஶரணம்

---

காட்பட்டு நின்கண்பெறுவதெதுகொலென்று பேதையேன் நெஞ்சம் மறுகல்செய்யும்'' என்னுதபடி அடியார்க்காட்படுத்தாய். முதல்நிலையுமன்றியே இவ்வருகில் ஸம்ஸாரமுமன்றியே ''தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்'' என்னுமாபோலே எல்லை நிலத்திலே நிறுத்தினாய்; ''ரத்நம்பட்டது, முத்துப்பட்டது'' என்னுமாபோலே. (பள்ளியெழுந்தருளாயே) அபிமதஸித்தியுண்டானாலும் உறங்குமித்தனையோ? தேவரீருடைய யோகநித்ரை பலபர்யந்தமானாலு முறங்குமித்தனையோ?

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம் முற்றிற்று
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்

---

கொலென்று பேதையேன் நெஞ்சம் மறுகல் செய்யும்'' [திருவாய் 9-4-4] என்ற நம்மாழ்வாரைப் போலே ஐயப்படாமல், அடியேனை அடியார்க்கு ஆட்படுத்தி ஐயப்படுவதற்கே இடமில்லாத சரமபர்வமாகிற கடைசி நிலையிலேயே நிலைநிறுத்தினாயே என்கிறார். இங்கு ஸம்ஸாரியாயிருந்த நிலையையும் நீக்கி, உனக்குப் பணி செய்திருக்கும் முதல் நிலைக்கும் மேலே ''தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்'' [திருவாய் 8-9-11] என்கிற படியே எல்லைநிலத்திலே நிலைநிறுத்தினாயே என்கிறார். ''ரத்நம் பட்டது முத்துப் பட்டது'' என்பது போலே ''ஆட்படுத்தாய்'' என்று பெறற்கரிய பேறு என்பதைக் காட்டுகிறார். (பள்ளியெழுந்தருளாயே) ''தேவரீர் யோகநித்திரை [அறிதுயில்] கொள்வது என்னைப் போன்ற ஒரு சேதனன் கிடைப்பதற்கன்றோ. அந்தப்பலம் கிடைத்து விருப்பம் நிறைவேறிய பின்பும் உறங்கலாமோ? எழுந்தருள்வாய்'' என்கிறார்.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமிதாஸன் இயற்றிய திருப்பள்ளியெழுச்சி
வியாக்கியான விவரணம் நிறைவுற்றது.